GF
O-1ebic8
110.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR :: MADRAS-41.

# திருக்குறளில் புதைபொருள்கள்

அறிஞர். கி. ஆ. பெ. விசுவநாதம். 10258

(இலங்கை வானொலிச் சொற்பொழிவு)

செல்வம் பலவகைப் படும். அவற்றுள் பூமியிற் புதைபட்டவை சில. நீரில் ஆழ்ந்துகிடப்பவை சில. நூல்களில் மறைந்துகிடப்பவை பல என்று கூறலாம். மண்ணிலும் நீரிலும் மறைந்துகிடக்கும் செல்வங்களை எடுக்க மக்களிடத்தில் ஏற்படும் ஊக்கமும், துணிவும், முயற்சியும் நூல்களில் மறைந்து கிடக்கும் செல்வங்களை எடுப்பதில் ஏற்படுவதில்லை. அதுவும் ஏற்பட வேண்டும் என்பது நமது ஆசை.

இப் பரந்த உலகில் எந்தக் கண்டத்திலும், எந்தக் காலத்திலும், எந்த மொழியிலும், எந்தப் பேராசிரியரும் சொல்லியிராத உயர்ந்த கருத்துக்களைத் தமிழ் நூல்களில் இன்றும் காணலாம். இச் சிறந்த கருத்துக்கள் தமிழகத்தில் தமிழ்ப் பேராசிரியர்களால் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறப்பெற்றிருப்பவை. இவ் உண்மையை தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்த பிற நாட்டுப் பேராசிரியர்களே ஒப்பி யிருக்கின்றனர்.

திருக்குறள் ஒரு உயர்ந்த நூல். அது பழைய சங்க காலத்திய நூல்களில் ஒன்று. அது தோன்றி இன்றைக்கு 19 நூற்றாண்டுகள் ஆயின. அதற்கு இன்றும் உயிர் உண்டு. இனியும் அது உயிரோட்டத்தோடு ஒளிவீசும். நாடு, மக்கள், மொழி, நிறம், சமயம்

ஆகிய அனைத்திற்கும் பொதுவான ஒரு ஒப்பற்ற நூல் அது.

திருக்குறள் ஒன்று தோன்றிய பின்புதான் தமிழ் நாட்டையும், தமிழ் மொழியையும், தமிழ் மக்களையும் உலக மக்களால் அறிய முடிந்தது. இது தமிழுக்கும், தமிழர்க்கும், தமிழகத்திற்கும் பெருமை அளிப்பதாகும்.

உலகில் அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப் பெற்ற நூல்கள் 3. முதல்வரிசையில் முதலில் இருப்பது பைபிள். இரண்டாவதாக இருப்பது குரான். அடுத்து மூன்றாவதாக இருப்பது திருக்குறள். முதல் இரண்டும் சமய நூல்கள் என ஒதுக்கப் பட்டுவிடுமானால், உலக இலக்கியங்களிலேயே அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப் பெற்று தலைமை வகிக்கின்ற நூல் திருக் குறள் ஒன்றே யாகும்.

திருக்குறள் ஒரு கடல். அதில் மறைந்து கிடக்கும் புதைபொருள்கள் விலை உயர்ந்த முத்துக்களாகும். முத்துக் குளிக்கும் மக்கள் தங்கள் மூச்சு வலிமைக்கு ஏற்ற அளவு செல்வங்களை அள்ளிக் கொள்வதைப் போல, குறளில் மூழ்கும் மக்களும் தங்கள் அறிவு வலிமைக்கு ஏற்ற அளவு செல்வங்களை அள்ளிக்கொள்வதுண்டு.

திருக்குறள் மிகக் குறைந்த அறிவு படைத்த மக்களுக்கு நெருங்கி நின்று உணவு ஊட்டியும், பேரறிவு படைத்த மக்களுக்கு எட்டி யிருந்து உணவு அளித்தும் வருவது வியப்பிற்குரிய ஒன்றாகும்.

திருக்குறளில் புதைந்துகிடக்கும் பொருள்கள் அனைத்தையும், துருவி, ஆராய்ந்து, எடுத்து மக்களுக்கு விளக்கிக்காட்டுகிற ஒரு அறிஞர்குழு வேண்டும். தனிப்பட்ட

எவராலும் இயலாது. என்றாலும் முயன்றால், சில குறள்களின் புதைபொருள்களையாவது பெறமுடியும். இன்று ஒரே ஒரு குறளைமட்டும் எடுத்துக்கொண்டு அதிற் புதைந்துகிடக்கும் பொருள்களைப் பெற முயற்சிப்போம். அக்குறள்:

"கொல்லா நலத்தது நோன்மை; பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு" என்பது.

(1) இக்குறள் சான்றாண்மை என்ற தலைப்பின் கீழ் வந்தது. தமிழகம் சான்றோரை தனது நாட்டுச் செல்வமாகக்கொண் டிருக்கிறது. சேரநாடு வேழமுடைத்து, பாண்டிநாடு முத்துடைத்து, சோழநாடு சோறுடைத்து, தொண்டை நாடு சான்றோருடைத்து என்பது ஔவையின் வாக்கு. இதிலிருந்து நிலவளமாகிய நெல்லும், மலைவளமாகிய யானையும், கடல்வளமாகிய முத்தும், மக்கள் வளமாகிய சான்றோரும் தமிழகத்தின் செல்வங்கள் என்ற உண்மையை நன்கு உணரலாம்.

சான்றாண்மை என்ற சொல் தமிழ்மொழி ஒன்றிற்கே உரியது. சான்றாண்மைத் தன்மை தமிழ் மக்களின் கலை. சான்றாண்மைப் பண்பு தமிழகத்தின் தனிப்பட்ட சொத்து. சான்றாண்மை என்ற சொல்லைக்கூட பிறமொழிகளில் மொழிபெயர்க்க முடியாது. மொழிபெயர்த்துக் கூறினாலும் அச் சொல்லில் தமிழ் கூறும் பொருள் இராது என துணிந்து கூறலாம். சான்றாண்மை என்பது பல நல்ல குணங்கள் அமைந்துள்ள ஒருவன் அக் குணங்களில் எதுவும் தன்னைவிட்டுப் பிரிந்து போய்விடாமல் காப்பாற்றி ஆளும் தன்மை எனப்படும். எனவே சான்றாண்மை என்பது உயர்ந்த மக்களின் சிறந்த தன்மை என்றாகிறது.

(2) மக்களின் உயர்ந்த பண்புக்கு பல நற்குணங்கள் இருந்து தீரவேண்டும். எது இல்லாவிடினும் இருபெருங் குணங்களேனும் வேண்டும். அவற்றுள் ஒன்று பிற உயிர்களைக் கொல்லாமை. மற்றொன்று பிறர் தீமைகளைச் சொல்லாமை என்று இக்குறள் கூறுகிறது.

(3) சான்றாண்மைக்கு திருவள்ளுவர் சொல்லில் ஒன்றும், செயலில் ஒன்றும் விரும்புகிறார் என்பதையும் அதிலும் சொல்லுக்கு முன்னே செயலை விரும்புகிறார் என்பதையும் இக் குறளால் அறிந்து மகிழ்ச்சி யடைகின்றோம்.

(4) உயிரைக் கொல்லாமையும், தீமையைச் சொல்லாமையும் ஆகிய இவ்விரண்டும் 'நலம் தரும்' என்று வள்ளுவர் இக்குறளில் குறிப்பிடுகிறார். இதனை கொல்லா நலத்தது, சொல்லா நலத்தது என்ற சொற்களால் அறிய முடிகிறது.

(5) கொலையுண்ட உயிர்களும், சொல்லுண்ட உயிர்களும் பெரிதும் துன்பப்படும் ஆதலின் அவ்வாறு செய்யாதிருப்பது அவ்வுயிர்களுக்கு நல்லது என்பது இக் குறளில் உள்ள 'நலத்தது' என்ற சொல்லின் கருத்து.

(6) கொல்லுகின்றவனைத் தீயசெயலாளன் என்றும், சொல்லுகின்றவனைத் தீய சொல்லாளன் என்றும், உலகத்தார் சொல்லிப் பழித்து, வெறுத்து ஒதுக்குவர். ஆதலின் கொல்லாமையும், சொல்லாமையும் பிறருக் கன்றிதமக்கும் நல்லது என்ற கருத்தும் இக்குறளில் அடங்கியே யிருக்கிறது.

(7) உயிரைக் கொல்லாமை, தீமையைச் சொல்லாமை ஆகிய இரண்டையும் "நலத்தது" என்ற ஒரு சொல்லால்

ஒற்றுமைப் படுத்திய வள்ளுவர், அவற்றின் பண்பை வேற்றுமைப்படுத்திக் கூறியிருப்பது எண்ணி எண்ணி வியக்கக்கூடிய ஒன்றாகும்.

(8) கொல்லா நலத்தினை நோன்மை என்றும், தீமை சொல்லா நலத்தினை சால்பு என்றும் வள்ளுவர் வகுத்துக் காட்டுகின்றார். இக் குறளில் அமைந்துள்ள இச் சொற்கள் பொன்னிற் பதிந்த மணிகள் என மின்னிக் கொண்டிருக்கின்றன.

(9) 'நோன்பு' என்பதை விரதம் என வடமொழியாளர் கூறுவர். அது குறிப்பிட்ட சில நாட்களில் இதைச் செய்வதில்லை யென்பதும், நான் விரும்புவதைப் பெறும் வரையில் இவ்வாறு இருப்பேன் என்பதும் ஆகும். புரட்டாசி சனிக்கிழமைகளில் மட்டும் புலால் உண்ணுவதில்லை யென்பதும், திருப்பதிக்குப் போகும் வரை முடி எடுப்பதில்லையென்பதும் நோன்பு என்பதிற் பாற்படும்.

(10) சால்பு என்பது குறித்த நாளில் குறிப்பிட்ட ஒன்றைச் செய்யாதிருக்கும் நோன்பினைச் சுட்டாது. அது என்றும் நின்று நிலவுகின்ற ஒரு உயர்ந்த பண்பையே சுட்டிக்காட்டுகிறது.

(11) நோன்பின் தன்மையையும் சால்பின் தன்மையையும் அறிந்து கொண்ட நமக்கு இக்குறள் நோன்பைவிட சால்பு உயர்ந்தது என்று வற்புறுத்திக் கூறுவதாகத் தெரிகிறது.

(12) நோன்பைவிட சால்பு உயர்ந்தது என்று இக்குறள் கூறுவதிலிருந்து உயிர்களைக் கொல்லா திருப்பதை விட தீமைகளைச் சொல்லாதிருப்பது உயர்வு என்பது வள்ளுவர் கருத்து என விளங்குகிறது.

(13) சான்றாண்மைக்கு இலக்கணம் கூறவந்த வள்ளுவர் அதற்கு இருக்க வேண்டிய பல நல்ல குணங்களுடன் கொல்லாமையும், சொல்லாமையும் வேண்டும் என்று மட்டும் இக்குறளில் கூறியிருக்கவில்லை. பின்னதற்கு முன்னதை ஒப்பு நோக்கும் உவமையாகக்கூட கூறியிருக்கிறார் என்பதை அறியும் பொழுது நம் உள்ளம் பெருமகிழ்ச்சி யடைகிறது.

(14) கொல்லுதற்குரிய கருவி கிடைக்கப் பெறாத ஒருவன் கொல்லா திருந்து விடவும் முடியும். அது எளிது. ஆனால் சொல்லுதற்குரிய கருவி இருந்தும் அதனை அடக்கி ஆண்டு, கட்டுப் படுத்திக் கொண்டு சொல்லா திருப்பது அரிது. ஆதலின் கொல்லாச் செயலைவிட தீமை சொல்லாச் செயலை இக்குறள் உயர்வு படுத்திக் கூறுகிறது.

(15) கொல்லுங் குணத்தைவிட தீமை சொல்லுங் குணத்தைக் கொடுமையாகக் கூறியிருப்பது கொலை யுண்டவன் அப்பொழுது மட்டுமே துடிதுடித்துச் சாகிறான். சொல்லுண்டவன் வாழ்நாள் முழுவதுமே துடிதுடித்துச் சாகிறான் என்பதின் பொருட்டு எனத் தெரிய வருகிறது.

(16) 'கொலைவாளினும் கொடியது நாக்கு' எனலாம். வாள் மனிதனை விட்டு சில பொழுதேனும் பிரிந்திருக்கும். நா எப்பொழுதும் மனிதனுடனே இருந்துவரும். வாளால் சிலரையே வதைக்க முடியும். நாவால்பலரை வதைக்க முடியும். வாள் கண்டவரையேகொல்லும். நா காணாதவரையும் கொன்று விடும்.ஆகவே வாளினும் நா வலிமையுடையது என்பதுவள்ளுவர் கருத்து.

(17) "நாவினால் சுட்ட வடுவை உண்டாக்குவதை விட தீயினால் சுட்டு புண்ணை உண்டாக்குவது நல்லது" என்று முன்பு ஒரு குறளில் கூறினர். "தீமையைச் சொல்லி பல நாள் துன்புறுத்தும் கொடுமையைவிட கொலையைச் செய்து ஒரு நாள் துன்புறுத்தும் கொடுமை நல்லது" என்று இக்குறளில் கூறுகிறார். இக்கருத்துகள் நமது உள்ளத்தைப் போய் சுடுகின்றன.

(18) பெற்றவர்கள் பிள்ளைகளின் குறைகளையும் எடுத்துக் கூறாமல் இருக்கலாமா? இருந்தால் அவர்கள் திருந்துவது எப்படி? என்று நாம் வள்ளுவரைக் கேட்டால் "அவர் நன்றாக எடுத்துக் கூறுங்கள். மக்களின் குறைகளை எடுத்துக் கூறித் திருத்தி தம்மில் தம் மக்களை அறிவுடையவராகச் செய்யுங்கள். அதுதான் தந்தையின் கடமை. நண்பர்களின் தவறுகளை அழச் சொல்லியுமல்ல; இடித்து இடித்துக் கூறுங்கள் அது தான் நட்பு. நான் கூற வந்தது அவர்களையல்ல. உற்றரும் நண்பரும் அல்லாத பிறரை!" என்று வெகுநயமாகப் பதிற் கூறுகிறார். இவ்வுண்மையை இக்குறளில் உள்ள பிறர் என்ற சொல் வெகு அழகாக அறிவித்துக் கொண்டிருக்கிறது.

(19) "தீமை" என்ற ஒரு சொல் இக்குறளில் ஆட்சி புரிகிறது. இதற்கு "தவறு" என்பதோ "குறை" என்பதோ பொருள் ஆகாது. இது பழி பாவங்களுக்கு அஞ்சாத கொடுஞ்செயல் என்ற பொருள் பெறும். வள்ளுவர் இதனைக் கருத்திற்கொண்டே "பிறர் குறையை, பிறர் தவறை" என்று கூறாமல் பிறர் தீமை என அழுத்திக் கூறியிருக்கிறதாகத் தெரிகிறது.

(20) "பிறருடைய தீமைகளை அவரது நலம் கருதுவோர் அவரிடமே நேரிற்சென்று எடுத்துக்

கூறியும் கூட திருத்தலாம்" என்பது வள்ளுவருடைய கருத்து. இதனை "கண்ணின்று கண்ணறச் சொல்லி னும்" என்ற வள்ளுவர் வாய்ச்சொல்லே மெய்ப்பிக்கும். இக்குறளால் கூறியிருப்பது அதுவல்ல என்றும், பிற ருடைய தீமைகளைப் பிறரிடத்தே போய்க் கூறும் கொடுமையினையே என்றும் தெளிவாக அறியலாம்.

(21) பிறருடைய தீமைகளை அவரிடமே சென்று கூறுவது குளிர்ச்சி உள்ளங் கொண்டவர் செயலா குமே ஒழிய, எரிச்சல் உள்ளங் கொண்ட மக்களின் செயலாகாது. என்பதை எண்ணியே வள்ளுவர் அவ் வாறு கூறியிருக்க வேண்டும் என்று தெரிகிறது.

(22) பிறருடைய தீமைகளை பிறரிடம் போய்க் கூற அவரது நலம் கருதுவோர்க்கே உரிமையில்லை என்றா கும் பொழுது பகைமை உடையவர்க்கு அவ்வாறு கூற உரிமை ஏது? நண்பரும், பகைவருமாகிய இவ்விருவரும் வேறு பல உயர்ந்த பண்புகளால் சால்பு பெற்றிருந் தாலும் பிறரிடத்தே போய்த் தீமை சொல்லும் நாவைப் பெற்றிருந்தால், அது அச்சால்பையும் அழித்து விடும் என்பது வள்ளுவர் முடிவு. இதனை இக் குறளில் உள்ள சொல்லா நலத்தது சால்பு என்ற சொற்கள் அறிவிக் கின்றன.

(23) பிறருடைய தீமைகளைப் பிறரிடம் போய்க் கூறுவதே கொடுஞ் சொல்லாக இருக்குமானால், தீமை செய்யாதவர்களை தீமை செய்ததாகப் பிறரிடம் போய்க் கூறுஞ் சொல்லுக்கும், நன்மை செய்தவர்களையே தீமை செய்ததாகப் பிறரிடம் போய்த் திரித்துக் கூறுஞ் சொல்லுக்கும் என்னபெயர் கொடுப்பது? இக்கேள் வியை நாம் இக்குறளிடம் தான் கேட்க வேண்டும். கேட்

டால் அது, "சொல்லும் சொல்" என்றே பதிற் கூறுகிறது. இச்சொற்கள் இரண்டையும் இக்குறளடி களில் உள்ள தலைப்பிலேயே கண்டு மகிழுங்கள்.

(24) நலத்தது என்ற சொல்லை இக்குறளில் எத்தனை முறை படித்தோம் அதன் பொருள் விளங் கிற்று, நமக்கு? "நல்லது," 'நல்லது' என்ற பொருளில் தானே அதை அறிந்தோம். அது தவறு. அதன் பொருள் அதுவல்ல. அதன் உண்மையான பொருள் நல்லதைச் சார்ந்தது என்பதே யாகும்.

உயிர் கொல்லாச் செயலையும் தீமை சொல்லாக் குணத்தையும் வள்ளுவர் நல்லதைச் சார்ந்தது என்று கூறினரே ஒழிய 'நல்லது' என்று கூற அவருடைய உள்ளம் ஒப்பவேயில்லை. இக்கருத்தை இக்குறளில் உள்ள "நலத்தது" என்ற சொல்லிற் காணும் பொழுது நம் உள்ளமெல்லாம் இனிக்கிறது.

(25) கொல்லாமையும், சொல்லாமையும் நல்லதைச் சார்ந்தது என்று இக்குறள் கூறும் பொழுது வேறு எதையோ 'நல்லது' என்று இக்குறள் கூறுவது போலத் தெரிகிறது. அது எது? என ஆராயும பொழுது பிற உயிர்களை வளர்த்து வாழ்தலும், பிறர் நன்மைகளைச் சொல்லி வாழ்தலுமே எனப் புலப்படு கிறது. இவ் உயரிய பொருளை விளக்கவே இக்குறள் தோன்றியிருக்கிறது என்பதை மலை மீது நின்றும் கூறியாக வேண்டும்.

இத்தனை பொருள்களும் இக்குறளில், ஒன்றே முக்கால் அடிகளில் ஏழு இடங்களில், எட்டே சொற் களில் இருக்கின்றன என்று நாம் அறியும் பொழுது,

ாம் அடைகின்ற மகிழ்ச்சிக்கு எல்லை ஏது? குறளை
றுபடியும் கூறுகிறேன் பாருங்கள்.

"கொல்லா நலத்தது நோன்மை; பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு."

எப்படி? இக்குறள்! இந்த ஒரு குறளே நமக்கு
நான்பு, சால்பு, பண்பு, நேர்மை, அறிவு, ஆண்மை,
யர்வு, வாழ்வு ஆகிய செல்வங்கள் அனைத்தையும் தரு
ானல் இன்னும் திருக்குறளில் உள்ள 1329 குறள்
ளும் என்னென்ன செல்வங்களைத் தரும்? என்பதை
ண்ணிப்பாருங்கள்.

MAHA... H... ...YAYA
DR. U.V... ... LIBRARY
TIRUV... ... MADRAS-41

# நயமை

பன்மொழிப் புலவர். கா. அப்பாத்துரை, M. A., L T.

குடிப்பிறப்பு, மானம், பெருமை, பண்பு, சான்றாண்மை, முதலியன படிப்படியாக உயர்வுடைய சமூகப் பண்புகள். குடும்பமே இப்பண்புகள் எல்லாவற்றிற்கும் அரணாகவும் வளர்ப்பிடமாகவும் விளங்குகிறது. குடிப்பிறப்பின் அடிப்படைப்பண்பு மானம் அல்லது மனிதத்தன்மை. தமிழினத்தையும் அதனோடொத்த நல் லினங்களையும் மற்ற இனங்களிலிருந்து பிரித்தறிய உதவும் சிறப்புக் கூறுகளுள் இது ஒன்று. பெருமை இனவளர்ச்சிக்கு உதவும் கூறு. பண்பு இனத்தின் தளர்ச்சிகளைத் தடுத்துக் காக்கும் கூறு. ஆங்கிலத் தில் பண்பாடு (**culture**) என்று குறிக்கப்படுவதன் உயிர் நிலை இதுவே. தமக்குக் கீழ்ப்பட்டவரையும் அருளன்பால் உயர்த்தி விடும் தன்மை அதற்கு உண்டு. சான்றாண்மை பண்பின் உச்சநிலை. சான்றோர் தாம் பண்புடையாராயிருப்பதுடன், பிறரைப் பண்புடையராக்கத் தூண்டும் முன் மாதிரிச் செல்வராய் இயல்வர். சான்றாண்மையைத் திருவள்ளுவர் சால்பு என்று கூறுவர்.

நற்குணத்தை இங்ஙனம் பல படிகளாக வகுத்துக் காட்டிய வள்ளுவர் தீக்குணங்களை அவ்வாறு காட்ட வில்லை. அதன் கீழ் எல்லையாகிய கயமையையே சுட்டி னார். விரும்பத்தக்க உயர்படிகளை வகுத்துக் காட்டி

ஏற உதவுதல் நன்று. இழிபண்பு வகையில் உறு நிற்படியாக கயமையைச் சுட்டிக் காட்டி, அத்திசை நின்றும் எச்சரிக்கவே வள்ளுவர் விரும்புகின்றார். மலையின் பல படி உயரங்கள் நற்பண்புகளுக்கு உவமை யானால், நீரோட்டமற்ற ஆழமுடைய பாழ்ங்குட்டை அல்லது கயத்தின் சேறும் அழுக்கும் தீயவாடையும் மிக்க அடிப்பகுதியே கயமைக்கு உவமை என்னலாம். கயமையென்ற பெயர்க் காரணமும் அதுவே.

நற்பண்புகளில் முதல் படி மானம். அதினின்று சறுக்கியவன் கயமையை நோக்கிச் செல்லத் தொடங்கு கிறான். தலையின் இழிந்த மயிரைத் திருவள்ளுவர் இம் முதற் படிக்கு உவமை காட்டினார். இந்நிலை கடந்த பின் அவனுக்குப் பல சமூகத்துக்குக் கேடான தீப் பண்புகள் தோற்றுகின்றன.

கெட்டவர்கள் எல்லாரும் கயவர்கள் என்று பலர் எண்ணுவதுண்டு. இது தவறு. கெட்டவர்கள் நற்பண்பை அறியாதவராயிருக்கலாம், அறிந்து செய லாற்ற முடியாதவரா யிருக்கலாம், செயலாற்ற முயன்று வெற்றி காணாதவராயிருக்கலாம். கயவர்கள் அவர்களை விட மோசமானவர்கள். அவர்கள் நற்பண்புகளை விரும் பாதவர்கள், அவற்றை வெறுப்பவர். தீயவன் தீமை செய்யலாம். ஆனால் நல்லவனை நேசிப்பான், பெரி யாரை மதிப்பான். கயவனுக்கோ நல்லவன் மீது தனிப் பகைமை இருக்கும். அவன் பெரியாரை மதிக்கவோ பேணவோ மாட்டான். 'பெரியாரைப்பேணிக் கொள் வோம்' என்னும் நோக்கு அற்றவன் அவன்.

பெரியார் எவருக்கும் பணிவர். வேறுபலர் பெரி யாருக்கு மட்டுமாவது பணிவர். கயவர் எவரையும்

மதியார். பெரியாரையே சிறியாராக மதித்து, தம் பெருமையையே அவர்கள் முன் காட்டி, தம்மைத் தாமே வியந்து பாராட்டுவர். பெரியார் பிறர் தீமை மறைப்பர். மிகப்பலர் பிறர் தீமையறிவார், தம் தீமை அறியமாட்டார். கயவரோ தம் தீமையை நன்மையாகக் கொண்டு பிதற்றுவர். பிறரிடம் குற்றத்தையும் குணத்தையும் குற்றமாகவே கண்டு தூற்றுவர்.

நற்பண்புகளை விளக்கும் அதிகாரங்களிலேயே திருவள்ளுவர் கயவரின் இப்பண்புகளைச் சுட்டிக் காட்டினர். கயமை என்ற அதிகாரத்தில் கயவர் பண்புகளை நேரடியாக விளக்குகிறார்.

நல்லார் பெரியார் தமக்கென வாழ்வது குறைவு. பிறர்க்கென வாழ்வதுதான் மிகுதி. அவர்கள் வாழ்க்கை முறை எழுப்பல் அன்பையும் அன்பின் மிகுதியாகிய அருளையும் அடிப்படையாகக் கொண்டது. மிகப்பலர் தமக்காகவும் வாழ்வர். பிறர்க்காகவும் வாழ்வர். ஆனல் பிறருக்காக வாழ்வதைவிடத் தமக்காக வாழ்வதே மிகுதியாயிருக்கும். அவர்களிடம் அன்பு ஓரளவும் தன்னலம் பேரளவும் செயலாற்றும். ஆனல் கயவர் தமக்காக மட்டுமே வாழ்வர். அவர்கள் வாழ்க்கைத் திட்டத்தில் வேறு எவருக்கும் இடம் இராது. தன்னலமும் அன்பின்மையுமே அவர்கள் வாழ்வின் அமைதி.

செருக்கு, கொடுமை, கஞ்சத்தனம் இம்மூன்று குணங்களையும் தமக்குக் கீழ்ப் பட்டவரிடம் காட்டுவர் கயவர் என்று வள்ளுவர் வகுத்துரைக்கின்றார். தமக்குக் கீழ்ப்படவரைக் கண்டாலே அவர்கள் மனம் வருந்தத் தம் பெருமையை மிகைப் படுத்திக் காட்டி, அவர்கள் இறுமாப்புக் கொள்வார்கள். அதே சமயம்

அவர்கள் பிறர் துயர் தீர்க்கும்படி தம் ஈரக் கையை உதறக்கூட மனமில்லாதவர்களா யிருப்பார்கள்.

தம்முடன் ஒப்பானவர்களிடம் கயவர் கோள் சொல்லல், பொறாமை ஆகிய பண்புகளை உடையவரா யிருப்பர். பிறர் இரகசியங்கள் எவையாவது அவர் களிடம் சிக்கிவிட்டால், அவற்றை உலகெங்கும் பரப்பி, அவற்றை உடையவர்களை முழுதும் கெடுக்கும் வரை அவர்கள் அமைந்திருக்க மாட்டார்கள். இவ்வகையில் அவர்களை ஒரு வாய்ப் 'பறை' என்னலாம். பிறர் நலம் காண அவர்கள் பொறுக்கமாட்டார்கள். யாராவது நன்றாக உடுத்தி உண்பதைக் கண்டால் கூட, அவர்க ளிடம் இல்லாத குற்றங்களைச் சுமத்தி அவர்கள் வாழ் வைக் கெடுத்தாலல்லாமல், அவர்க்ளுக்கு மனநிறைவு ஏற்படாது.

தமக்கு மேலானவர்களைக் கண்டால் கயவர் அஞ்சி அஞ்சி நடப்பார்கள். இங்கே மேலானவர்கள் என்றது பண்பில் மேலானவர்கள் அல்ல. ஆற்றல், ஆதிக்கம், ஆட்சி, பதவி, செல்வம் ஆகியவற்றால் மேலானவர்கள். இவ்விடங்களில் 'சட்டமே அவர்களது ஆசாரம் அல்லது ஒழுக்கம்' ஆகும். இன்னொரு வகையில் சொன்னால் கீழ்ப் பட்டவரிடம் கொடுமை, மேம்பட்டவர்களிடம் அடிமை ஆகியவையே அவர்கள் முறைமை ஆகும்.

அவர்கள் யாருக்கும் தாமாக உதவமாட்டார்கள். ஆனால் அவர்கள் உடல் நோவ நன்றாக அடித்துக் குத்த வல்லவர்களுக்கு அவர்கள் கட்டாயம் உதவுவார்கள். அவர்கள் யாருக்கும் பயன்படுவதில்லை. கரும்பை ஆலையிலிட்டு நசுக்குவது போல யாராவது அவர்களை நசுக்கினால் அவர்கள் பயன்படக்கூடும்.

அச்சத்துக்கு அடுத்தபடி தன்னலமும் பேராவலும் கயவர்களைப் பிடித்தாட்டும். இவ்விரண்டு வகையிலும் அவர்கள் மானத்தையே விட்டுவிடவும் இணங்கு வார்கள். தம் பொருளை மட்டுமல்ல, தம்மையே விற்கவும் அத்தகைய தறுவாய்களில் அவர்கள் தயங்க மாட்டார்கள்.

அறநூல் எழுத வந்த வள்ளுவர் சில தீமைகளைக் கண்டிக்கிறார். சிலவற்றின் வகையில் எச்சரிக்கிறார். ஆனால் கயமையை விளக்குவதுடன் நின்றுவிடுகிறார். இது இயற்கையிலேயே அருவருக்கத் தக்க தீமை. கண்டிக்கத் தேவையில்லை என்றுவிடுகிறார். ஆனால் அவர் நகைத்திறம் கயவரை எள்ளி நகையாடுகிறது!

கயவர் உருவத்தால் மனிதராகவே இருக்கின்றனர். இந்த அளவு மனிதருடன் ஒப்புமை உண்டு. பண்பு ஒப்புமை யில்லாத உருவ ஒப்புமைக்கு இது ஒரு நல்ல எடுத்துக் காட்டு என்கிறார் திருவள்ளுவர்.

இது மட்டுமா?

கயவரா யிருப்பதே நல்லது. அறிவுடையவரா யிருப்பது நல்லதல்ல. ஏனென்றால் அறிவுடையவரா யிருப்பவருக்கு நன்மை தீமை தெரியும். நன்மை பெறா விட்டால் கவலை, தீமை வந்தால் கவலை. கயவருக்கு நன்மை தீமை தெரியாது. இவை பற்றிய கவலையு மில்லை.

இது மட்டுமன்று.

கயவர் எவருக்கும் எதற்கும் கட்டுப்பட்டவர் அல்ல. மனித ஒழுக்கங்களுக்குக் கட்டுப்படாமல் எதுவும் செய்யும் புராணத் தெய்வங்கள், கட்டுக் கதைத் தெய்வங்கள்

போல, அவர்களும் கட்டுப்பாடில்லாமல் மனம்போல நடப்பவர் ஆவர்.

கயவரின் இம் மூன்று வகைச் சிறப்பைக் கூறுவதுடன் வள்ளுவர் அமைகிறார். மனித உலகம் கயவர் நிலையை நாடாமலிருக்க இந்த மூன்று சிறப்புமே போதும் என்று கருதுகிறார்.

# இல்லை தான் வித்தியாசம்

## இரசிகமணி. டி. கே. சி.

திருவள்ளுவர் காலம் ஏதோ இரண்டாயிரம் வருஷத்துக்கு முன் என்பார்கள். இருக்கட்டும்.

நாமும் அவருடன் இருப்பதாகக் கொஞ்சம் எண்ணிக் கொள்ளலாம். அவருடைய அனுபவத்தை உடனிருந்து பார்க்கலாம்.

0 0 0

ஒரு குடும்பத்தில் நாலு சகோதரர்கள். இளைஞர்கள். உறுதியான தேக பலம் கொண்டவர்கள். உழைப்பாளிகள். எல்லாவற்றிலும் மேலாக அவர்களுக்குள் இருந்த ஒற்றுமை யாரும் புகழ்ந்து பாராட்டும் படியாக இருக்கும்.

எட்டு ஏக்கர் நிலம் அவர்களுக்கு. நன்றாய் உழுது உரம் ஏற்றினார்கள். மேனி நன்றாய்க் கண்டது. மிச்சம் கைகண்ட மிச்சமாய் இருந்தது.

நாலு வருஷத்தில் செல்வவான்களாகவே (அந்தக் காலத்து பொருளாதாரப்படி) ஆய்விட்டார்கள்.

அதன் மேல் பலசரக்கு கடை ஒன்று வைத்தார்கள். நாலு பேருமாகச் சேர்ந்து நிலத்தையும் பார்த்துக் கொண்டார்கள். கடையையும் பார்த்துக் கொண் டார்கள்.

பூமி பொன் விளையும் பூமியாய்விட்டது. கடையோ சுற்று வட்டத்துக்கு ஒரு களஞ்சியமாக ஆய்விட்டது.

இந்த நிலையில் இரண்டு சகோதரர்களுக்குக் கலியாணம் ஆயிற்று. மூத்த மாட்டுப் பெண் மரியாதையான குடும்பத்திலிருந்து வந்தவள். இளையவள் குடும்பம் கொஞ்சம் தடபுடா. அவள் புருஷன் வீட்டுக்கு வரும்போது சீதனத்தோடு சீதனமாக அந்தத் தடபுடலையும் கொண்டு வந்துவிட்டாள்.

அவளுடைய அதிகாரம் வீட்டில் யாரும் நாளாக அதிகாரமாய்ப் போய்விட்டது. யாரையும் அதிகாரம் பண்ண ஆரம்பித்துவிட்டாள். யாரும் அவளுடைய அதிகாரத்துக்கு உள்ளாக வேண்டிய திருந்தது.

குடும்பத்தின் நன்மையை உத்தேசித்து அவளுடைய போக்குக்கு எல்லாம் இணங்கி வந்தார்கள் எல்லாரும். கஷ்டந்தான் நஷ்டந்தான்.

ஆனால் ஓர்படியாள் பாடு பெரும்பாடாகி விட்டது அவளென்ன நிலத்துக்குப் போவாளா, கடைக்குப் போவாளா! வீட்டிலேயே இருந்து தொலைக்க வேண்டியது தானே. ஓர்ப்படி ராங்கியைக் கண்டால் ஒரே பயம். சதா பயந்தான். என்ன விளையுமோ! என்ன விளைந்து விடுமோ! என்று கையை நெரித்துக்கொண்டு தான் இருந்தாள்.

அவள் படுகிற கஷ்டத்தை திருவள்ளுவர் பார்த்தார் (நாமுந்தான் பார்க்கிறோம்)

ஒரு குடிசைக்குள் ஒரு இரவு தங்க வேண்டி வந்துவிட்டது. ஒரே இருட்டு. மழை 'சோ' என்று பெய்கிறது. வெளியே போக மார்க்கமில்லை. ஒ( பெரிய மின்னல் வந்து குடிசைக்குள் வெளிச்ச

போட்ட மாதிரி பிரகாசித்தது. அப்போது நாம் பார்க்க நேர்ந்தது ஒரு பாம்பை. உடனே இருட்டு.

அங்கும் இங்குமாக பாம்பு ஊர்ந்து கொண்டு இருக்கிறது. கூரையின் சலசலப்பு கேட்கிறது. மனுஷன் பாடு எப்படி இருக்கும்!

உடன்பா(டு) இலாரொடு
வாழ்க்கை, குடங்கருட்
பாம்போ(டு) உடனுறைந்(து)
அற்று.

[உடன்பாடு இலாரொடு வாழ்க்கை; நம்மோடு ஒத்துப் போகாமல் பகைமை கொண்டிருப்பவர்களுடன் வாழ்தல்; குடங்கருள்: ஒரு குடிசையிலேயே; பாம்போடு உடனுறைந் தற்று: பாம்பொன்றோடு உடன் இருக்க நேர்ந்த காரியந்தான்]

இன்றைய அனுபவத்துக்கும் இரண்டாயிர வருஷத்துக்கு முன்னுள்ள அனுபவத்துக்கும் வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை.

உட்பகை சம்பந்தமாகவாவது, இல்லைதான் வித்தியாசம்.

[illegible] UPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR :: MADRAS-41.

# வெஃகாமை

## கோவைக் கிழார்

வெஃகாமை என்பது வெஃகுதல் என்ற சொல்லின் எதிர் மறைச் சொல். வெஃகுதல் என்றால் மிக விரும்புதல். (திருக்குறள் 176—அருள் வெஃகி) மற்றும் பிறர் பொருளை இச்சித்தல் (திரு-174. இலமென்று வெஃகுதல் செய்யார்). இனி வெஃகல் என்ற சொல் வெஃகு என்ற பகுதியின் அடியாகப் பிறந்த பெயர்ச் சொல். அதற்கு மிகுவிருப்பம் என்று பிங்கலந்தையும், பேராசை என்று சதுர் அகராதியும் கூறும். இனி வெஃகாமை என்ற சொல் 'வெஃகு' என்ற பகுதியில் பிறந்து 'ஆ' என்ற எதிர் மறை குறிப்பு ஏற்று 'மை' என்ற விகுதி ஏற்றுக் கொண்ட எதிர் மறைத் தொழிற் பெயர். அதற்கு அவா வின்மை என்றும், பிறர் பொருளை வெளவக் கருதாமை (திரு-அதி-18.தலைப்பு) என்றும், வெறுப்பு என்றும் பொருள் கூறப்பட்டுள்ளது—பிறர் பொருளை வெளவிக் கருதாமை என்பது பரிமேலழகர் கருத்தாகவும், வெறுப்பு என்பது வின்சுலோ கருத்தாகவும் காண்கின்றோம். அவ்வெதிர் மொழிச் சொல்லுக்கு பிறர்க்குரிய பொருளை வெளவக் கருதாமை என்று பரிமேலழகர் உரைத்திருக்க, மணக்குடவர் பிறர் பொருளை விரும்பாமை என கூறுகின்றார். பரிதியாரோ பிறர் வாழ்வு கண்டு இந்தப் பாக்கியம் நமக்கு ஆகப்பெற்றதில்லை என்று மனத்தில் எண்ணாமல் இருப்பதே ஆகும் என்கிறார். ஆகவே இம்மூன்று உரையாசிரியர்கள் நோக்கங்களிலும், வெஃகாமை என்பது மனத்தினுடைய

நிலைமை என்று அறிகின்றோம். இனி வெளவல் என்பது ஒரு செயல் ஆகும். பிறபொருளை வெளவுதல் திருட்டு என்னும் குற்றத்தின் பால் பட்டதாகும். வெஃகாமையோ அக்குற்றத்தைக் கருதாதிருத்தல். வெளவக் கருதுதலும் ஒரு குற்றமாகும் என்கின்றார் வள்ளுவனார்.

இனி திருவள்ளுவர் உலகத்திற்கு ஒரு பொது மறை இயற்றக் கருதி 'திருக்குறள்' என்று வழங்கும் ஒரு உலகியல் நூலை இயற்றிய போது அதனை அறம், பொருள், இன்பம் என்று மூன்றும் வகுத்து அறத்தைக் கூறுங்கால் இல்லறவியல், துறவறவியல், என இரண்டாய் வகுத்து இல்லறவியலில் அறன்வலியுறுத்தல் முதலாக புகழ் இறுதியாக 20-அதிகாரங்களில் இல்லறவியலையும், அருளுடைமை முதற்கொண்டு ஊழ் இறுதியாக; 15-அதிகாரங்களில், துறவியலையும் கூறி; இல்லறவியலில், இல்லறத்தானுடைய குணங்களைக் கூறும்போது வெஃகாமை என்ற ஒரு பண்பினை, 18-வது அதிகாரத்திலே வைத்துக் கூறியிருக்கிறார். இல்வாழ்வானுக்கு வாழ்க்கைத்துணை, மக்கட்பேறு, அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றியறிதல், நடுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை முதலிய இயல்பு குணங்களைக் கூறி, பிறனில் விழையாமை, அழுக்காறாமை, என்ற எதிர்மறைக் குணங்களைக் கூறும் போது அழுக்காறாமைக்குப் பின் வெஃகாமை என்ற எதிர்மறைப் பண்பினைக் கூறுகின்றார். இவ்வாறு தன் கருத்துக்களை கூறும்போது ஒரு முறையைப் பின் பற்றி தான் கூறவேண்டியவற்றைக் கூறுகின்றார். இம்முறைவைப்பை வெகு தெளிவாக பரிமேலழகர் எடுத்து உரைத்திருக்கின்றார். அழுக்காறாமைக்குப் பின் வெஃ

காமை வைத்ததை பரிமேலழகர் 'பிறர் உடைமை' கண்ட வழி பொறாமையே யன்றி அதனைத்தான் வெளவ கருதுதலும் குற்றம் என்பதற்கு வெஃகாமை அழுக்காறாமையின் பின் வைக்கப்பட்டதென்று பரி மேலழகர் தெளிவுபடுத்துகின்றார்.

வள்ளுவனார் வெஃகாமையைப் பற்றிக் கூறும் போது அதனைப் பத்து பகுதிகளாகப் பாகுபடுத்தி மற்றக் கருத்துக்களைப் போலவே 10 குறள்களில் எடுத்து ஆண்டிருக்கின்றார். 10-குறள்களிலும் ஒரே கருத்து ஊடுருவிப் பாய்வதைக் காணலாம். இனி வெஃகாமை யைப்பற்றி அவற்றில் கூறும் பொருளை ஒருங்கு திரட்டி எழுதுவோம்.

உலகில் சிலபேர் பொருள் உடையவராக இருப் பார்கள். மற்றும் சிலபேர் பொருள் இல்லாதவர்களாக இருப்பார்கள். பொருள் இல்லாதவர்கள் பொருள் உள்ள வர்களைக் கண்டு பொறாமை படக்கூடாது. மேலும் பொருள் உள்ளவர்களின் பொருளை இல்லாதவர்கள் விரும்புவது அறம் அல்ல. அவ்வாறு அறம் அல்ல என்று எண்ணுதல் நடுநிலைமை ஆகும். அவ்வகை நடு நிலை மையை விட்டு அவரது பொருளை விரும்புவார் ஆயின் அவ்வாறு விரும்பும் எண்ணமே விரும்புகிறவனுடைய குடியைக் கெடுத்துவிடும். அவ்வாறு கெடுப்பது மட்டு மன்றி வேறு பல குற்றங்களுக்கும் உட்படுவான். நடுவு நிலைமையை ஒழிக்க அஞ்சுபவர்கள் பிறர் பொருளை வெளவுதலினால் தமக்கு பயன் வரக் கூடும் என்று எண்ணி அதன் பொருட்டு ஏற்படும் வெளவுதலை பழி என்று கருதி அச் செயல்களைச் செய்ய மாட்டார்கள். அறம் செய்தலினாலே பேரின்பத்தை விரும்புகிறவர்கள்

வெளவிய பொருளினலே தமக்குக் கிடைக்கக் கூடிய சிறிய இன்பத்தை விரும்பி அறமற்றச் செயல்களை செய்யமாட்டார்கள். ஐம்புலன்களையும் வென்று குற்ற மற்ற குணத்தைக் கொண்டவர்கள் தமது வறுமையை தீர்க்கும் பொருட்டு பிறருடைய பொருளை விரும்பமாட்டார்கள். பிறர் பொருளை விரும்பி அதற்காக அறம் அல்லாத செயல்களை அறிவுடையார் செய்தால் அவருடைய நுண்ணிய அறிவினுல் யாதொரு பயனுமில்லை. அருள் அடைவதற்கு வழியாகிய இல்வாழ்க்கையில் வாழ்வான் பிறர் பொருளைப் பெற தீயவை எண்ணுவானுயின் கெடுவான். பிறர்பொருளை விரும்புதலினுல் தீய பயன் விளையும். அதனுல் ஒருவன் அதனை விரும்பாது ஒழிக. பிறர் பொருளை விரும்பாமையே நிலையில்லாத செல்வம் குறையாமல் இருப்பதற்கு ஏதுவாகும். பிறர் பொருளை விரும்பாமை நல்லது என்பதனை அறிந்த அறிவுடையாரை திருமகள் சேர்வள். ஒருவன் பிறர் பொருளை விரும்பின் அதனுலே என்ன விளைவு ஏற்படும் என்பதை நினையாமல் அதனைச் செய்யின் அவனுக்கு அது அழிவைத் தரும். ஆனுல் பிறர் பொருளை விரும்பாமல் இருந்தால் அது அவனுக்கு வெற்றியைத் தரும்.

இந்தக் கருத்துக்களைத்தான் திருவள்ளுவர் ‘வெஃகாமை’ என்னும் அதிகாரத்தில் பத்து குறள்கள் கூறியிருக்கின்ருர். இவற்றின் அடிப்படைப் பொருள் வெஃகுதல் கேடுதரும்; வெஃகாமை வெற்றிதரும் என்பதேயாம்—.

இனி இந்த அதிகாரத்தில் திருவள்ளுவர் ஆண்டிருக்கும் சில அருஞ் சொற்களை எடுத்துக் கூறுவோம்.

நடுவு—பிறபொருளை விரும்பாமல் இருக்கும் நடுநிலைமை.

பொன்றி—கெடுத்து, குடியைக் கெடுத்தல்,

நாணுபவர்—வெட்கப்படுவர், அஞ்சுபவர்.

சிற்றின்பம்—சிறிய இன்பம், மற்றின்பம்—பேரின்பம்.

புலம் வென்ற—ஐந்து புலன்களை வென்ற.

புன்மையில் காட்சி—மாசு நீங்கிய அறிவு.

அஃகி—நலிந்து,

வெஃகி—விரும்பி, இவ்விரு சொற்களும் ஆய்த எதுகை கொண்டவை. மிக அரிய சொல்லாடல்.

அஃகாமை, வெஃகாமை அவைபோன்றவை—

இறல் ஈனும்—இறுதியைப் பயக்கும்.

விறல் ஈனும்—வெற்றியைப் பயக்கும்.

மேலே கூறிய அரிய சொற்களை வள்ளுவனார் எடுத்து ஆண்டிருப்பதை நாம் நன்கு அறிந்து போற்ற வேண்டும்.

உலகில் மக்கள் எல்லாரும் ஒரே நிலையில் இருப்பதில்லை. சிலபேர் பொருள் வாய்ந்தவர்களாகவும், சிலபேர் பொருள் இல்லாதவர்களாகவும் இருப்பார்கள்—பொருள் உள்ளவர்களைக் கண்டு பொருள் இல்லாதவர்கள் பொறுமைப் படுவது இயல்பாக இருக்கின்றது. அறிவுடையவர்கள் பொறுமைப் படமாட்டார்கள். அறிவில்லாதவர்கள் பொறுமைப் படுவார்கள். அவ்வாறு பொறுமைப் படுவது கூடாதென்று அழுக்காறுமை என்ற அதிகாரத்தில் திரு

வள்ளுவர் விளக்கினர்—பிறகு பொறாமைப்படுவது மட்டு மன்றி பிறருடைய பொருள்களை வெளவி அவர்களைப் போல் தாம் பொருள் உள்ளவர்கள் ஆக வேண்டு மென்று கருதுதல் கூடாதென்று திருவள்ளுவர் 'வெஃகாமை' என்ற அதிகாரத்தில் கூறுகிருர்.

பொருள் இருந்தால் இன்பம் வரும்—பொருள் இல்லையேல் துன்பம் வரும் என்னும் கருத்துடையவர் கள் உண்மையான அறிவு இல்லாதவர்கள். அப்படிப் பட்ட அறிவு இல்லாததனல் பிறர் பொருளை வெளவியா வது தாம் இன்பம் பெற வேண்டுமென்று அவர்கள் கருதுவார்கள். அது சரியான மனப்பான்மை அல்ல வென்று வள்ளுவனர் கூறுகின்ருர். வெளவிப் பெரும் பொருள் சிற்றின்பமேயன்றி, பேரின்பம் தராது. வெளவா திருக்கும் நிலைமையே பேரின்பமாகும். அவனையே திருமகள் விரும்புவாள்—வெற்றியும் அவனுக்கே கிடைக்கும் என்கிருர் வள்ளுவனர். ஒருவன் பொருளைப் பெற்று இன்பம் துய்க்கிருன் என்று நேரில் காணும் போது தானும் அதுபோல் பொருளைப் பெற்று இன்பம் துய்க்கவேண்டும் என்பது இயல்புதான். ஆனல் அதற் காக பொருள் பெற்றவனின் பொருளை வெளவவேண் டியதில்லை. தான் பாடுபட்டு அப்பொருளை உழைப்பினல் பெறுதலே நன்று. சிலபேர் புதையல் கிடைத்தால் நன்று என்று எண்ணுவார்கள். மற்றும் சில பேர் சூதாட்டத்தினல் பொருளை எளிதில் பெறலாமென்று எண்ணுவார்கள். அப்படி பெறக்கூடிய பொருள் சரி யான வழியில் வருவதல்ல. அதனல் இன்பம் கிடைத் தல் அரிது—பிறர் இடத்தில் பொருளைக் காணுங்கால் பொருமைப் படாமலும், வெளவை எண்ணுமலும், சுலப

ான வழிநடையில் பொருளைப் பெறுமதலும், உழைப்பி
ால் பொருளைப் பெறுதலே நன்று. அப்படிப் பொருள்
பறுவார் மாட்டே திருவும், வெற்றியும் நிலை நின்று
மய்யின்பம் வரும்.

பொருள் உடையார் மாட்டு இன்பம் உண்டு. பொருள்
ில்லார் மாட்டு இன்பம் இல்லை என்ற கருத்தும் சரி
ல்ல. பொருள் உடையார் மாட்டும் துன்பமும், பொருள்
ில்லார் மாட்டு இன்பமும் இருப்பதை ஊடுருவிப் பார்த்
ால் தெரியும். ஆகவே பொருளைப் பின் பற்றி இன்ப
ுன்பங்கள் இல்லை. அப்படிப்பட்ட பொருளை வெளவக்
ருதுதல் கூடாது. அதனால் வெஃகாமையே சிறந்த
ண்பு ஆகும். இதனையே வள்ளுவனார் இவ்வதிகாரத்தில்
ற்புறுத்தியிருக்கின்றார்.

# திருக்குறளின் சிறப்பியல்புகள்-1

## ரெவ. எச். ஏ. பாப்லி

திருக்குறள் என்னும் நூல் தமிழ் உயரிய நூற்களி லெல்லாம் மிகச்சிறந்த நூல் என்பது யாவராலும் ஒப் புக் கொள்ளப்பட்டது. இருபது நூற்றாண்டுகளில் இந் தச் சிறப்புற்ற நிலையைப் பெற்று வந்திருக்கின்றது. **G. U.** போப் பண்டிதர் தமிழ் இலக்கியங்கள் எல்லா வற்றையும் ஆராய்ந்து நன்றாய்க் கற்றிருந்தவராகி "திருவள்ளுவர் எல்லா மக்களுக்கும் பொது கவிஞர்" என்று திருவள்ளுவருக்குச் சிறந்த நாமத்தைத் தந்த னர். திரு. **T. S.** கந்தசாமி முதலியார் என்னும் பேரறி ஞர் "அறத்தின் பரிசை உள்ளவாறு விரித்துரைப்ப தில் திருக்குறள் இணையற்ற நூல்" என்று எழுதியுள் ளார். உயர்ந்த நிலையைப் பெறாத எளிய மகனால் அது இயற்றப்பட்ட போதிலும் பெரியோரும் உயர்ந்த கற்றறிவோரும் எல்லாரும் இந்நூலை எல்லாவற்றிலும் சிறப்புற்ற நூலாகும் என்று அதை ஒப்புக்கொண்டு தமிழ்நாட்டின் பெரிய செல்வமாக மதிக்கிறார்கள். இத் துடன் அன்னிய நாட்டு அறிஞர் அநேகர் அதைப் படித்துப் புகழ்ந்து அதின் உயர்ந்த தன்மையை மெச்சி யெழுதினார்கள். கவிஞர் எளிய குடும்பத்தில் பிறந்து எளிய தொழிலைச் செய்து பிழைத்ததாலே மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பெரியோர் முதலில் இந்நூலைத் தள்ளிப்போட நினைத்தார்கள். அற்புதச் செயலால் மாத் திரம் அவர்கள் தங்கள் தீர்ப்பை மாற்றிவிட்டார்கள் என்று நாம் ஓர் விநோத கதையினால் அறிகிறோம்.

ற்குப் பின்பு தமிழ் அறிஞரும் நூலோரும் கவிஞர்
ம் எல்லாரும் திருக்குறளை மேம்படுத்தி எழுதினார்கள்.
நானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய சங்க
ங்களில் திருக்குறளின் மொழிகள் சிறந்த மொழிக
க எடுத்துக் காட்டப்பட்டன. பிற்காலங்களில்
ர்ந்த எழுத்தாளர் ஞானிகள் முதலியோர் அநேக
ங்களில் தங்கள் நூற்களில் குறளின் மொழிகளைப்
ற்ந் துரைத்தார்கள்.

குறட்பாக்களின் மேன்மையைப் பற்றி வேறு
ாறு தமிழ்க் கவிஞர் மிக சிறப்பாகப் பின்வருமாறு
தியுள்ளார். சாத்தனார் திருவள்ளுவமாலையில்:

"ஆரியமுஞ் செந்தமிழும் ஆராய்ந்து இதனினிது
சீரியதென் றொன்றைச் செப்பரிதாம்; ஆரியம்
வேத முடைத்து, தமிழ் திருவள்ளுவனார்
ஓது குறட்பா வுடைத்து" என்று பாடினார்.

டைக்காடர் குறட்பாவின் குறளளவை நினைத்து

"கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"

ாறு பாடினார். சிறப்பு வாய்ந்த கவிஞராகிய கபிலர்
ன்வருமாறு அழகாகப் பாடினார்:

தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால்—மனையளகு
வள்ளைக் குணங்கும் வளநாட, வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி.

நாம் திருக்குறளின் மாட்சிமையை அநேக குறிப்பு
ரில் எழுதி விரிக்கலாம் எனினும் இக்கட்டுரையில்
ன்று விசேஷித்த குறிப்புகளில் மாத்திரம் அதைக்

கவனிப்பது உசிதம் என்று எனக்குத் தோன்றுகிறது. இம்மூன்று குறிப்புகளாவன: முதல், செய்யுளின் பெருமை; இரண்டு, நல்லொழுக்கக் கற்பனையின் பெருமை; மூன்று, பொதுமக்களுக்கேற்ற வாழ்க்கைத் திறத்தின் பெருமை. அடியேன் ஐம்பது ஆண்டாக இந் நூலைப் படித்துவந்தமையால் இவைகளின் உண்மையை வற்புறுத்திச் சொல்லலாம்.

## 1. செய்யுளின் பெருமை

செய்யுள் நூலுக்கு முதலாவது கவி நயமும் பாவின் அருமையும் இன்றியமையா குறிப்புகள். இக்குறிப்பு களில் இந்நூலானது அதிக சிறப்புள்ளது. இது விஷய மாய் திரு. T. S. கந்தசாமி முதலியார் அவர்கள் பின் வருமாறு எழுதியுள்ளார்: "நமமாசிரியர் எடுத்தாளும் சொற்கள் அழகு வாய்ந்தன; இனிய ஓசையுடையன; பொருட்செறிவுடையன; நவின்றோர்க் கினிமை பயப் பன; குறுகிய உருவத்தன; அத்தகைய சொற்களைத் தொகுத்துத் திருவள்ளுவர் குறள் வெண்பாக்கள் பாடு கின்றாராகலின் அவை மிக அழகுடையனவாய் விளங்கு கின்றன. ஒரு குறளில் வரும் ஒரு சொல்லையேனும் அக்குறளின் பொருளழகையும் சொல் லின்பத்தையும் சிதைக்காது; அதன் இடத்தைவிட்டு பெயர்க்கவோ, அகற்றவோ, அதற்குப் பதிலாக வேறொரு சொல்லைப் பெய்துரைக்கவோ யார்க்கும் முடியாது. ஆதலால் திரி பின்றியும் சிதைவின்றியும் விளங்கும் உலக நூற் களில் திருக்குறள் தலை நின்றது," என்பதே. அவர் எழுதினது முற்றும் உண்மையே. குறள் வெண்பாக் களைக்கொண்டு சிறந்த கவிகளை எழுதல் மிக்க கடினம் என்பதற்கு ஐயமின்றே. எனினும் திருவள்ளுவர் இக்

ஈமான பாவினத்தைக்கொண்டு சிறப்புள்ள கவி இயற்றினது வியப்புக்குரியது. ஒவ்வொன்றிலும் நயமும் சொல்நயமும் பொருள்நயமும் விளங்கித் ன்றுகின்றன. சிலவற்றை எடுத்தெழுதலாம்.

குழலினிது யாழினி தென்பதம் மக்கள்
மழலைச் சொற் கேளா தவர். (**7**-6)

அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு. (**8**-10)

மோப்பக் குழையும் அனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. (**9**-10)

பணிவுடையன் இன்சொல னாதல் ஒருவற்கு
அணியல்ல மற்றும் பிற. (**10**-5)

ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு. (**22**-5)

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. (**35**-10)

பணியுமாம் என்றும் பெருமை, சிறுமை
அணியுமாந் தன்னை வியந்து. (**98**-8)

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்
[சொற்கள்
என்ன பயனு மில. (**110**-10)

இந்தக் குறள்களை நாம் கண்டாராய்ந்தால் கவிஞர் சாற்சுவையுடனும் கவிசிறப்புடனும் தமது குறட்பாக் களை இயற்றினர் என்பது நன்கு விளங்கும்.

பின்னும் திருக்குறளின் பாக்களில் அநேக சிறந்த உவமையணிகள் காணப்படுகின்றன. திரு. கந்தசாமி

முதலியார் எழுதினதுபோல இவ்வணிகளைப் "பலமுறை படித்தாலும் அவை நவில் தொறும் நயம் பயப்பன, அறிஞர்க்கென்றும் இன்பம் ஊட்டுவன." அவைகளில் சிலவற்றை இவ்விடத்தில் எடுத்துக்காட்டாக எழுதலாம்.

என்பில் அதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம். (**8**-7)

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று. (**8**-8)

மோப்பக் குழையும் அனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து (**9**-10)

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று. (**10**-10)

தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை. (**97**-4)

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின் (**48**-5)

இந்தக் குறள்களில் கவிமன்னராது அணியின் அழகையும் சிறப்பையும் நன்கு காணலாம். இவற்றைப் போன்ற இனி கணக்கற்ற குறள்கள் உண்டு.

# நல்லொழுக்கத்தின் சிறப்பு-2

ரெவ. எச். ஏ. பாப்லி

இந்நூலானது தமிழகத்தில் சிறந்த நல்லொழுக்க நூலாகும் என்பர் பெரியோர் யாவரும். பண்டைக் காலத்துக் கவிஞருகிய கவுணியனர் பின் வருமாறு பாடியுள்ளார்:

"சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இரு வினைக்கு மாமருந்து—முந்திய
நன்னெறி நாம் அறிய நாப்புலமை வள்ளுவனர்
பன்னிய இன்குறள் வெண்பா" என்பதே.

இதில் 'நன்னெறி நாம் அறிய' என்பதில் இந்நூலின் முக்கிய நோக்கத்தைக் காணலாம். அவருடைய குறட்பாக்களில் நாம் நல்லொழுக்க வழியின் தன்மையைச் சிறப்பாக அறிந்து கொள்ளலாம். அவர் முதல் அதிகாரத்தில் கடவுள் பக்தியின் சிறப்பை எல்லா வழிபாடுகளுக்குமுரிய வகையாய் விளக்கினர். சைவர், வைஷ்ணவர், சமணர்,இஸ்லாமியர்,பௌத்தர், யூதர்,கிறிஸ்தவர்எல்லாரும் தங்கள் தங்களுக்கென்று இந்த வெண்பாக்களைப் பொருட் படுத்தலாம். அவர் எல்லா சமயங்களையும் நடுவு நிலைமையுள்ள மனதுடன் சிந்தித்து எதைப்பற்றியும் கண்டிக்காமல் எல்லாவற்றின் நல்ல கொள்கைகளையும் எடுத்தோதி வலியுறுத்தினர். அவர் மனம்

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்
தொருபால்
கோடாமை சான்றோர்க்கணி" (12-10) என்னும்

குறளைப்போல எல்லா பக்திகளையும் சீர்தூக்கிச் சிறப்புள்ள கொள்கைகளை எடுத்து தமது நூலில் எழுதியுள்ளார்.

தனக்குவமை யில்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது (1-7) என்று

அவர் முதல் அதிகாரத்தில் எழுதியுள்ள குறளில் பக்தியின் சிறப்பும் அன்மிய பயனும் தெளிவாக உரைக்கப் பட்டது.

அவர் நல்லொழுக்கத்தின் பண்பை விளக்கும்போது பற்பல தொழிலாளர்களுக்குரிய நல்லொழுக்கத்தின் விசேஷித்த குறிப்புகளை எடுத்தோதி வெளியிட்டனர். பொதுமக்கள், உழவர், நீத்தார், இல்வாழ்வார், இறைவர், மாதர், அமைச்சர், தொண்டர், மனைவியார் முதலியவர்கள் யாவரையும் பற்றி அவர் மிகவும் அழகாகவும் பயனுள்ளதாகவும் எழுதியுள்ளார். ஒவ்வொரு வகுப்பினரைப் பற்றியும் அவர் எழுதின போதனைகள் மிக்க சிறப்புடையவை. வாணிகர்களுக்கேற்ற நல்ல போதனையை அதிக சிறிய பாவிலே விளக்கிக் காட்டினார். அது பின் வருமாறு:

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின். (12-10) என்பதே.

வாணிகர் இவ்வாறாகவே தங்கள் வாணிகத்தொழிலை நடத்தி வருவாராகில் அவர்களைப் பற்றி ஒருவனும் குறை சொல்ல முடியாது.

நல்லொழுக்கத்தின் பயன் பின் வரும் குறளில் தெளிவாகக் காணப் படுகிறது.

நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கம், தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். (14-8) என்பதே.

பொறையுடைமை விஷயமாய் அவர் எழுதிய குறள்கள்
பொன் மணிகளைப் போல ஒளிர் விடும்.

பொறுத்தல் சிறப்பினை என்றும், அதனை
மறத்தல் அதனினு நன்று (16-2)

என்பதும்

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல் (16-8) என்பதும்

இவைகளில் இரண்டு சிறந்த குறள்கள். இன்னொரு
இடத்தில் வெளிப்பட்ட உருவத்தைப் பார்த்து ஆளை
மதிக்கக் கூடாது என்று வலியுறுத்தி,

உருவு கண்டெள்ளாமை வேண்டும் உருள்
பெருந்தேர்க்கு
அச்சாணியராகப் பெறின். (67-7) என்று

அவர் நல்ல அணிகளுடன் அழகாய் எழுதியுள்ளார்.
உண்மையல்லாத தவசியின் தன்மையை ஒரு குறளில்
நன்கு வெளியிட்டனர். அது பின்வருமாறு:

வலியி னிலைமையின் வல்லுருவம் பெற்றம்
புலியின் றோல் போர்த்து மேய்ந்தற்று,
(28-3) என்பதே.

இக்குறளில் நகைச்சுவை நன்கு விளங்கும். இதைப்
போன்ற அநேக குறட்கள் உண்டு. அவர் அடிக்கடி
நகைச் சுவையுள்ள அணிகளைக் கொண்டு நல்லொழுக்
கத்தின் பெருமையைக் காட்டுகின்றார். இன்
னொன்றை எடுத்துக்காட்டலாம்.

நாணகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர் மருட்டி யற்று. (102-10)

அமைச்சர் நல்லொழுக்க முள்ளவராதல் வேண்டும் என்று வலியுறுத்து

சலத்தால் பொருள் செய்தே மார்த்தல் பசுமண்
கலத்துணீர் பெய்திரீஇ யற்று

என்று எழுதினர். பெருந்தன்மை இன்னதென்று இன்னொரு குறள் காட்டுகின்றது. அது யாதெனில்

அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மை
யொடு
ஐந்து சால் பூன்றிய தூண். (99-3) என்பதே.

எல்லா நலங்களிலும் குண நலம் பெரிது என்பதைப் பின் வரும் குறளில் வெளிப்படுத்தினர்.

குணநலம் சான்றோர் நலனே, பிற நலம்
எந்நலத் துள்ளதூஉம் அன்று. (99-2)

பின் வரும் குறளில் இயேசு பெருமானது போதனை காணப்படும்.

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. (99-7)

அதிக மேன்மையான ஆன்மிக ஆற்றல் இன்னதென்று அவர் போதித்துப் பிறருடைய தேவைகளை நிறைவேற்றல் எல்லாவற்றிலும் சிறந்தது என்றனர்.

ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல், அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின். (93-5)

ஆதலின் நல்லொழுக்கத்தின் பெருமை பலவாறாகக் காண்பித்து நல்லொழுக்கத்தின் சிறப்பியல்புகளை நன்கு விளக்கினர்.

## III. பொதுமக்களுக்கேற்ற வாழ்க்கை

போப் பண்டிதர் எழுதினது போல திருவள்ளுவர் பொதுமக்களுக்கேற்ற கவிஞர் என்பது மெய். நாம் இக்கட்டுரையில் எடுத்துக் காட்டாக வெளியாக்கின குறள்களிலும் இன்றும் அநேகத்திலும் இவ்வுண்மை கையில் நெல்லிக்கனியைப் போல் தோன்றுகிறது. இரண்டாவது அதிகாரத்தில் எல்லா மக்களுக்கும் அவசியம் வேண்டப்படும் மழையின் பெருமையை விளக்கியது.

வானின் றுலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற்பாற்று (2-1) என்றும்

விசும்பில் துளி வீழினல்லால் மற்றாங்கே
பசும்புல் தலை காண்பரிது. (2-6) என்றும்

நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு (2-10) என்றும்

எழுதிய குறள்களில் இது விளங்கும். பின்பு உழவு என்னும் அதிகாரத்தில் இந்தியாவில் உழவுத் தொழில் பெரும்பாலர் கொண்டொழுகும் தொழில் என்று உணர்ந்து அதை மேம்படுத்தி எழுதினார்.

சுழன்றும் ஏர்ப்பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை. (104-1) என்றும்

உழுவார் உலகத்தார்க் காணி,அஃதாற்றா—து
எழுவாரை எல்லாம் பொறுத்து. (104-2) என்றும்

ஏரினு நன்றால் எருவிடுதல், கட்ட பின்
நீரினு நன்றதன் காப்பு (104-8) என்றும்

இலம் என்றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலம் என்னும் நல்லாணகும் என்றும்

திருவள்ளுவர் எழுதிய பாக்களில் உழவு தொழிலின்றி உலகம் நடவாது என்று வற்புறுத்தி எழுதியுள்ளார்.

பின்னும் மாந்தர் வாழ்க்கையில் அன்புடைமை எல்லாவற்றிலும் மாட்சிமை யுள்ளதென்று அதை மிகவும் மேம்படுத்தினர். பின்வரும் குறள்களை நோக்குவோம்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர், அன்புடையார்
என்புமுரியர் பிறர்க்கு. (8-1)

என்பி லதனை வெயில் போலக் காயுமே
அன்பி லதனை அறம். (8-7)

அன்பின் வழியதுயிர் நிலை, அஃதிலார்க்கு
என்பு தோல் போர்த்த உடம்பு. (8-10)

உலகத்தார் பொது வாழ்க்கையில் அன்பின் திறமை பெருமையுள்ளது என்னும் அவர் கொள்கை இவைகளினால் விளங்கும். அதுபோல், பகையின் திறமை உலகில் பெருந் தீமைகளைப் பயப் படுகின்றது என்று அவர் வற்புறுத்திக் காட்டினார்.

இன்பத்துள் இன்பம் பயக்கும் மிகல் என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின். (86--4)

இகலானும் இன்னாத வெல்லாம், நகலானும்
நன்னயம் என்னும் செருக்கு. (86-10)

இக் காலத்தில் பகையின் கேடு பாடுகள் உலகில் மிகத் தெளிவாய்த் தோன்றுகின்றன.

அவர் எடுத்துக் காட்டிய பொருளணிகளால் பொது மக்களின் மனங்களில் எளிதாக அவர் கற்பிக்கும் உண்மைகள் அமைந்து விடும் என்று நாம் மேலே கண்டு கொண்டோம். இனி சில உதாரணங்களை எழுதலாம்.

விருந்து புறத்ததாத் தான் உண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று (9-2)

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன் தெரிவார். (11-4)

யாகாவாராயினும் நாகாக்க, காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு (13-7)

தீயினால் சுட்ட புண் உள்ளாறும், ஆறாதே
நாவினால் சுட்ட வடு. (13-9)

அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும். (17-7)

நான் எடுத்துக் காட்டிய உதாரணங்கள் திருக்குறளின் மேன்மையையும் எக்காலத்திலும் வாழும் மக்களுக்கும் அதின் பொருத்தத்தையும் தெளிவாய்த் தோற்றுகின்றன. இந்த நூலானது இரண்டாம் நூற்றாண்டில் எழுதியிருந்தும் இருபதாம் நூற்றாண்டில் வாழும் மக்களுக்கு மிக்க பொருத்தமா யிருக்கிறது என்று எதிர்ப்பின்றியே நாம் உரைக்கலாம். ஆதலின் இக் காலத்திலும் நாம் யாவரும் இந்நூலை அதிகம் ஆராய்ந்து படிப்பது உசிதம்.

முடிவில் திரு டி. எஸ். கந்தசாமி முதலியார், சைவ சித்தாந்தக் கழகம் வெளியிட்ட உரை நூலில் எழுதிய புகழ்ச் சொற்களை எழுதி இக் கட்டுரையை முடிக்கலாம்.

"திருக்குறள் அறத்தினை உணரத் தலைப்படுவார்க்கு ஒரு பேரற நூல்; அரசியலை அறிய விரும்புவோர்க்கு ஓர் அரசியல் நூல்; ஞானத்தை விரும்புவார்க்கு ஒரு ஞான நூல்; கவிச் சுவை விரும்புவார்க்கு ஒரு காவியம்; பேரின்பம் விரும்புவார்க்கு ஒரு பேரின்ப நூல்; வாழ்க்கை நெறி அறிய விரும்புவார்க்கு ஒரு வாழ்க்கை வழி காட்டு நூல். அந் நூலைப் பயில்வார் பெரும் புலமையும் ஒட்பமும் பெறுவர்; அதன் நெறியின் கண் வாழ்பவரே 'வாழுநம்' என்னும் செருக்குடன் வாழ்ந்து இம்மையில் இன்புற்றுப் பின் வீடு பேறு அடைவர்" என்பதே.

# சால்பின்—சான்றோர்

பண்டிதர் வி. ஏ. ஜோன் பிள்ளை

மேலோர் சான்றோர் எனப்படுதலும்—கீழோர் கயவர் எனப்படுதலும் உலக வழக்கில் இருந்துகொண் டிருத்தலை நாம் யாவரும் காண்கின்றோம். யான் "பஞ்ச தந்திரம்" எனும் நூலிற் கற்றுக்கொண்ட ஒரு பெரும் உண்மை யாதெனில் "எங்குக் கீழ்கள் உண்டோ—அங்குச் சுகமிராது" என்பது அது. ஆம், கயமையின் நிறைவே கீழ்மை. கயமை எவ்வளவிற்குத் தாழ்ந்ததோ — அவ்வளவிற்கு உயர்ந்ததாகும் சால்பு. எனவே, எங்குச் சுகமிருக்க வேண்டுமோ — அங்குச் சால்பின் சான்றோர் வாழவேண்டு மென்பது பெற்றும்.

"சால்பு" என்பது பல குணங்களாலும் நிறைந் திருத்தல் என்பதும், "ஆண்மை" என்பது அந் நற் குணங்கள் யாவற்றினையும் ஆளுந் தன்மை என்பதும், சான்றாண்மை என்பது சூல் கொண்ட பொருளாம். சால்பு என்பதற்கு திருக்குறள் உரையாசிரியர் "நிறைந் தமைந்த" என்னும் அர்த்தம் உரைத்ததும், சான்றோர் என்பதற்கு — "நற்குண நற்செய்கைகளால் நிரம்பப் பெற்றோர்" எனப் பொருள் கோடலும் கண்டு மகிழத் தக்கது.

சால்பு என்பது யாது? சான்றோராதல் யாங் ஙனம்? எனும் இவைபற்றினை அறியாதோர் அறிந் தும், உணராதோர் உணர்ந்தும் சால்புடன் திகழ்ந்து சான்றோராக வாழாதோர் பிறந்தும் பிறவாதாரே; வாழ்ந்தும் வாழாதவரேயன்றி வேறன்று.

நவநாகரீக உலகின்கண்ணே பல்கலை அறிஞராய், பன்மொழிப் புலவராய், விஞ்ஞான விற்பன்ன ராய், நிர்மாண நிபுணர்களாய், மகான்களாய் வாழ் கின்றோர் மௌனச் சிந்தனைத் தேன் சுவைப்போரும்—அவரை அன்னாரென உவப்போரும் சற்றே சால்பின் பண்பாட்டினையும், சான்றோரது மேம்பாட்டினையும் வாழ்க்கையின் விதிகள் கொண்டு ஆராய்வார்களாக.

உண்மையில் ஆராய்ந்து மெய்மை அறியும் ஆற்றல் கைவரப் பெறின், தாம் கற்ற தலைகொள்ளா இற்றை நாட் கலைகளும் கலைப் பண்பாடுகளும்—சற்றே பண்டை நாட்புலவர் திருவள்ளுவ நாயனாரது முப்பால் நூல் முன் னெனக் கண்டு நிடுக்குறு கிற்பர் அன்றோ?

சால்பு, சான்றாண்மை எனும் மொழிகளிடத்து வள்ளுவனார் கொண்டுள்ள பெருமதிப்பும் விருப்பும் அச் சொற்களைப் பல்வேறு அதிகாரங்களோடும் உபயோ கித்துச் செல்வதினால் உய்த்துணரப்படும். எவ்வாறெ னில், அறத்தின் திறத்தினையோ, பொருளின் பொலி வினையோ, இன்பத்தின் இயல்பினையோ எடுத்தோதுந் தோறும் இவ்விரு மொழிகளையும் நழுவவிட்டா ரல்லர் நமது புலவர்.

ஓரிடத்து—"சான்றோர் பயனில சொல்லார்"

"தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்"
எனவும்

மற்றோரிடத்து—"சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு" "அணியன்றோ நாணுடைமை சான் றோர்க்கு" என்றும்

மேலுமோரிடத்து—"சொல்லப் பயன்படுவர் சான்றோர்"

"இடமில்லாக் காலும் இரவொல்லாச் சால்பு"

என்றும் இவ்வாறே இன்னும் பலவிடத்துக் கூறிச் செல்லுதலைக் காணலாம். அன்றியும் கற்றவர் எல்லாம் சான்றோர் ஆகிவிடுவாரா அல்லவா என்பதனைத் தொடர்ந்து சிந்திப்போம்.

## கற்றவரும்—மற்றவரும்

பண்டைத் தமிழரிடம் பண்பாடென்றும் கலைக ளென்றும் கலாச்சாரங்க ளென்றும் பொருள்கொண்டு இன்றைய எழுத்தாளர் உலகமும், பேச்சாளர் குழாமும் இரவு பகலாக வெளுத்தெரியும் நாளிது. பண்பாடு தான் என்னே? கலை, கலாச்சாரங்கடாம் எவையென ஆழ்ந்து சிந்திக்கிறார்களோ என்பதும், சிந்திப்பினும் அவற்றிற்கு வந்தனை செய்கிறார்களோ வென்பதும் ஐயந்தான். வெற்றுவாசா கைங்கரியமும் கொட்டுமுழக் குமே யன்றி மற்று வெட்டி வீழ்த்துவது யாதெனக் காணோம். கொலையும் புலையும், கள்ளுங் காமமும், களவும் உளவும் இன்னோரன்ன பலவும் முன்னைநாட் போலாது, இற்றைநாள் தலையிடம் வகித்துத் தாண்டவமாடுகின்றன.

சான்றோர் எனத் தகுந்தோர் ஒருவர் இருவரெனி னும் நமது நாட்டில் நிலவப்பெறின்—அவர் பொருட்டா வது நாடு நன்னிலை அடைதல் கூடுமே. எனினும் சான் றோர் மிக்க நாடுபோல் நாடெல்லாங் கூட்டம்; நாளாந்த ஆர்ப்பாட்டம். பந்தர்கள், மாலைகள், வரவேற்புகள் பட்ட விழாக்கள், பட்டுப் போர்வைகள்—இன்னும் எத்தனையோ தடல்புடல்கள்யாவும் இடம் பெறுகின்றன இவைதாம் உலக சமுதாய மறுமலர்ச்சிக்கண் யாது நயனை நல்கின்றன.

திருவள்ளுவ நாயனார் வலியுறுத்தும் செயல் திறல் வழியே பயன் நல்க வல்லது. ஒருவர் கற்றவராகலாம் நாற்பயன் நல்கும் நூல்பல ஆய்ந்தவரே கற்றவர். இன்றைய—கற்றவர் இலக்கணம் வேறு. கல்விடைத் தொலேவில் மல்கியிருக்கும் பல்கலைக் கழகங்களில் இடம் பெற்று, அவர்கள் நடாத்தும் தேர்வுகளில் சோர்வற நின்றோர் எவரும் பட்டாதாரிகளே. அறம், பொருள் எனும் தொடக்கத்தன யாவும் அறம்புறந்தான். எனினும் கற்றவர் இவரென மற்றவர் போற்ற நின்றவர் இவரே.

உலகம் இன்று வேண்டுவது அவாவி நிற்பது கற்றவரும் அல்ல; அறிஞருமல்ல; உண்மைச் சான்றோர் களையே! "கற்பவை கற்றனம்" என்ற அளவுடன் நின்றுபடாது—உளம், உரை, செயல்களால் நடைமுறைப் படுத்துவோரே சான்றோர்கள். கற்றும் சான்றோர் ஆகாவிடத்து:—

"கற்றோர் களினும் கல்லாத பேர்களே
நனி நல்லார்" என்கிறார் தாயுமான சுவாமிகள்.

மீண்டும் இவ்வடிகளார்: "கற்றும் அறிவில்லாத என்

கன்மனத்தை என் சொல்லுவேன்" என்கின்றார். சான்றோராகா வெற்று "கற்றாரை யான் வேண்டேன்" என்று மணிவாசகப் பெருந்தகை முழக்குவதும் ஈண்டு நினைவுறற் பாலது. சான்றோர் எனத்தகும் அவரிடம் விளங்கவேண்டிய நற்குண நற்செய்கைகள் யாவை என்பதனைத் தொடர்ந்து ஆராய்வோம்.

## "பிறர் தீமை—சொல்லா நலத்தது"

பிறர் தீமை சொல்லா நலத்தது சால்பு என்று மேலும் அழகாக அறிவுறுத்துகின்றார் வள்ளுவனார்.

இருவகை அறங்களுள் முதலிடத்து வைத்து எண்ணப் படுவது துறவறம். இவ்வறத்தினை மேற்கொண்டு ஒழுகு வார்க்கு அணிகலனாகக் கூறப்படுவது நோன்பு. இந் நோன்பிற்குக் "கொல்லாமை" அறம் வேண்டப்படுவது யாங்ஙனமோ—அங்ஙனமே சால்பும் பிறர் தீமை சொல்லா நலத்தது என எடுத்து நிறுத்துகின்றார்.

சொல்லா நலத்தது மாத்திரமன்று; செய்யா நலத்ததும் அதுவே யென்று மேற்கொண்டு இடித் துரைக்கின்றார்.

"இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"

என்று ஒரு வினாவினையும் பொறிக்கின்றார். இன்றைய உலகினில் இன்னாச் செய்தல் மலிந்து பொலிந்து எல்லாப் பொதுச் செயலாயும் ஆகிவிட்டது. நாள்தோறும் இன்னாச் செயல்களின் செய்தி நிரலே நாளாந்த செய்தித் தாள்களில் இடம் பெறுகின்றது.

ஈரமில்லா வீரமொழிகள் நடமாடும் நாட்கள் இவை. "இது என்ன காலமடா" என்றுதான் எண்ண நேரு கின்றது. இன்றையப் பண்பாட்டின் விளைவு இதெனலாம். விவிலிய நூல் எனப்படும் கிறீஸ்துவ வேதாகம நூலில் யாதினை வாசிக்கின்றோம்; கிறிஸ்து இரட்சா பெருமான் யாது கூறுகின்றார்?

"ஒருவன் உன்னை ஒரு கன்னத்தில் அறைந்தால்
நீ அவனுக்கு உனது மறு கன்னத்தையும்
திருப்பிக் கொடு"

என்பது அது. திருச் சிலுவையானது முன்னாள் இழிந்த ஒரு கழுமரமாக எண்ணப்பட்டது. அதன்கண்

வானத்திற்கும் பூமிக்குமிடையே—மூன்று ஆணிகளிற் தொங்குகின்றார் இறைவர். தொங்கும் இப்பெருமான்—திருவாய் மலர்ந்து தமது பகைவருக்காகப் பிரார்த்திக்கின்றார்:

"எந்தாய்! எந்தாய்! தாம் செய்வது
யாதெனஅறியார் இவர்; இவர் பிழை
பொறுத்தருள்க."

இதனைச் செவி மடுப்பார் எவரதும் நெஞ்சினை அள்ளி, என்பினை உருக்கி, அன்பினைப் பெருக்கும் போதனை அன்றோ இஃது. நிற்க,

இன்னாச் சொல்லினாது இழிவைப்பற்றி திருமூல நாயனார் கூறும் சீரிய போதனை இது.

'யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க் கின்னுரை தானே"

இன்னாச் சொல் இம்மையும் மறுமையும் துன்பம் விளைப்பது. இனிய சொல்லோ இருமையும் இன்பம் விளைப்பது. மக்கள் வாழ்க்கையில் பெருமையோ அன்றிச் சிறுமையோ ஏற்படுதற்கு—வாழ்க்கையில் சால்பும் சான்றாண்மையும் கௌரவிக்கப் படாமையே காரணமாகும்.

## பெருமையும்—சிறுமையும்

"பெருமை பெருமிதமின்மை", "பணியுமாம் என்றும் பெருமை" எனவுங் கூறப் படுதலால் சான்றாண்மைக்குச் செருக்கும் சிறுமையும் ஒவ்வாதன என்பது தெளிவாகும். பெருமையின் இயல்பிற்கிணங்கப் பணிதலாகிய அறிவு கொண்டு விளங்குவர் சான்றோர். இதனை விளக்கப் போந்த வள்ளுவர் சால்பினைப்

பொன்னுக்கி, அதன் மாற்று அறிதற்கு ஒருவரது செயல்களையே உரை கல்லாக்கி (கட்டளைக்கல்) தம்மின் உயர்ந்தாரிடத்துக் கொள்ளும் தோற்பினை— இழிந்தவர் மாட்டும் ஏற்கும் திண்மை படைத்த நிலையுடையாராதலே—ஒருவரிடத்துச் சால்பு உண்டென்பதற்கு அறிகுறியாகும் என்கின்றார். ஆம். நம்மில் மேம்பட்டவர்க்கு மாத்திரம் படிந்தும் நம்மில் இழிந்தோரைக் கடிந்தும் வாழ்தல் சான்றாண்மை யாகாது!"பெரியோரெல்லாம் பெரியருமல்லர், சிறியோரெல்லாம் சிறியருமல்லர்"

"ஐந்துசால் பூன்றியதூண்"

சால்பின் சான்றோர் ஆவார்க்குரிய நலனகளாகக் கூறப்படுவன இருதரப்படுவன. ஒன்று அக நலம்; மற்றையது புறநலம். அகநலம் அல்லாதன புறநலம் என்று கூறப்படும். குடிப்பிறப் பென்றும் கல்வி என்றும் இவ்வாறு பல்வேறு நலன்கள் கூறப்பட்டுள்ளன. இவற்றினைத் தொகுத்துக் கூறுமுகத்தான் இக்கட்டுரை முடிவுறும்.

அனபு, நாண, ஒபபுரவு, கணணோட்டம், வாய்மை யாம் இவைகளே சால்பு ஊன்றிய தூண்கள் ஐந்தென அணிபெறக் கூறுகின்றார் வள்ளுவர். சான்றாண்மை எனப் படும் மணி மண்டபத்தினைக் கட்டியெழுப்ப எண்ணுகின்ற ஒவ்வொருவரும் அத்தகு மண்டபத்தினை-ஐந்து வச்சிரத் தூண்கள் கொண்டு உண்டாக்கல் வேண்டும் என்கின்றார். அவர் கூறுவது;

"அன்பு நாண ஒப்புரவு கண்ணோட்டம்
வாய்மையோ(டு)
ஐந்துசால் பூன்றிய தூண்" என்பது.

மேற் கூறப்பட்ட ஐந்தெனும் சால்புகளாம் வச்சிரத் தூண்கள் கொண்டு "சான்றாண்மை" எனும் மணி மண்டபத்தினை எற்படுத்தி, என்றும் யாண்டும் நமது சொல்லும் செயலும் தம்முள் மாறுபடாத செம்மை யுடையோராக நெஞ்சுறுதியும், கொள்கைப்பற்றும், மொழியன்புமான உணர்ச்சியும் வாய்க்கப் பெற்று— "சான்றோர்"எனப்படும் வரிசைக்கு நாம் அனைவரும் வரவேண்டு மென்பதே— எனது விழைவும் வேண்டு கோளுமாகும்.

வாழ்க வள்ளுவர்!

வளர்க குறள் நெறி!!

... DHYAYA
DR. U.V. ... IYER LIBRA...
TIRUVAN...UR :: MADRAS-

# சேக்கிழாரது வள்ளுவன்

**அ. ச. ஞானசம்பந்தன்**

திருக்குறள் தோன்றிய பின்னர்த் தோன்றிய அனைத்து நூல்களும் தம்மால் இயன்ற அளவு அப் பெரு நூலைப் பயன்படுத்தி யுள்ளன. 'இலக்கியம்' என்ற பெயருள் அடங்காமல் நிற்கும் 'தேவார' 'திருவாசக'ங்களும் இவ்விதிக்கு விலக்கன்று எனில் திருக்குறளின் பெருமையை எவ்வாறு சொற்களாற் குறிப்பது? 'அகரம் முதல் எழுத்தாகி நின்றாய் அடியேன் உய்யப் போவதோர் சூழல் சொல்லே' என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரம். இப்பெரியார்கள் பலரும் திருக்குறளைக் கூடுமானவரை அப்படியே எடுத்தும் ஆண்டுள்ளனர். பல விடங்களில் குறளின் கருத்துக்களை எடுத்துப் பாடலாகப் பாடியுள்ளனர். 'சிலப்பதிகாரம்' தொடங்கிப் 'பாரதியார்' ஈறாக இதனைச் செய்யாத பெரும் புலவர் யாருமில்லை. எனவே 'திருத்தொண்டர் புராணம்' இயற்றிய சேக்கிழார் பெருமானும் இவ்விதிக்கு விலக்கானவர் அல்லர்! 'கம்பநாடன்' 'சேக்கிழார்' போன்ற பெரும் புலவர்கள் குறளை ஆட்சி செய்ததுடன் நின்றுவிடவில்லை. பல குறள்கட்குப் பேருரை வழங்கியும் உள்ளனர். 'அணுவைத் துளைத்து எழு கடலைப் புகட்டிய' குறளுக்கு எவ்வளவு அழகாக உரை வகுக்கிறார்கள். உரை என்று கூறினவுடன் பதம் பதமாகப் பிரித்துக் கோடிட்டு ஒரு சொல்லால் பக்கத்தில் எழுதுவதையே நாம் நினைக்க முடிகிறது. ஆனல் ஒரு வரலாற்றில்

வருகின்ற ஒரு சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு ஒரு குறளுக்குப் பல பாடல்கள் மூலம் பொருள் விரிப்பதே சிறந்த முறையாகும்.

'அறிவினால் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை' (குறள் 315)

என்பது 'இன்னா செய்யாமை' என்ற அதிகாரத்தில் வரும் ஒரு குறள். மற்றொரு உயிருக்கு வரும் துன்பத்தைத் தனக்கு வந்த துன்பம் போல் கருதா விட்டால் ஒருவன் பெற்றுள்ள அறிவால் வரும் பயன் யாது? என்பதே இக்குறளின் பொருள். மற்றொரு உயிர் நோயுற்று பெரிது வருந்துகிறது. அதனைப் பார்த்துக் கொண்டிருப்பவன் யாது செய்ய முடியும்? உடனே அதனுடைய துன்பத்தைப் போக்க முயலலாம்; போக்கியும் விடலாம். ஆனால் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இது இயலாததொன்று. நீக்க முடியாத துன்பத்தை ஒரு உயிர் பெற்றுவிட்டால் என்ன செய்வது? நாம் எவ்வளவு முயன்றாலும் அதன் துன்பத்தைப் போக்க முடியாது என்பது நன்றாகத் தெரிகிறது. அத்தகைய சந்தர்ப்பங்களில் என்ன செய்ய இயலும். அம்மாதிரி நிலைமையில் இக்குறள் என்ன வழி கூறுகிறது? ஐயோ! இவ்வுயிர் படும் துயரத்திற்கு யான் மிகவும் வருந்துகிறேன் என்று ஒரு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றி விட்டால் அது போதுமா? 'தந்நோய்போல் போற்றத்தானே' வேண்டும். இதோ என் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துவிட்டேன் என்று கூறிவிடப் போதாதா?

இவ்வினாக்களுக்குக் குறள் விளக்கமாக விடை தரவில்லை என்பது உண்மைதான். ஆனால் ஒரு கவிஞனு

டைய மன நிலையை அறிய மற்றொரு கவிஞனுக் கன்றோ முடியும்? எனவே சேக்கிழார் இக்குறளுக்குப் பொருள் விரிக்கிறார். 'மனுச்சோழன்' வரலாற்றில் இத் தகைய ஒரு வாய்ப்பு வருகிறது ஆசிரியருக்கு.

அவ்வரலாறு யாவரும் அறிந்த ஒன்றாகலின் அதனை விரியாமல் மேலே செல்லலாம். மனுவேந்தனுடைய மைந்தன் ஒருநாள் தேரூர்ந்து அரசவீதியில் உலாப்போகி றான். சிறிய பசுங்கன்று ஒன்று துள்ளி வந்து அரச குமாரன் செல்லும் தேர்க்காலின் இடைப்பட்டு இறந்து விடுகிறது. கன்றை இழந்த தாய்ப்பசு அரண்மனை வாயிலில் உள்ள மணியை அடிக்கிறது. மன்னன் நீண்ட காலமாக அடிபடாத மணி இன்று அடிபட்டது கேட்டு மனம் கலங்கி வெளியே வருகிறான். அமைச்சர் மூலம் நடைபெற்ற செய்தியை அறிந்து கொள்கிறான். மேலே என்ன செய்ய வேண்டும் என்பதுபற்றி ஆராய்ச்சி நடை பெறுகிறது. அமைச்சர்கள் அந்தணர்களைக் கலந்து கொண்டு தக்க கழுவாய் தேடிவிடலாம் என்கின்றனர். பசுங்கன்றைக் கொன்ற பாவம் போவதற்கு அவர்கள் வழிகாண முற்படுகிறார்கள்; ஆனால் கன்றை இழந்த பசுவின் துயரைப் பற்றி அவர்கள் கவலை கொள்ள வில்லை. அத்துயரம் போக்க முடியாத ஒன்றாகலின் அவர்கள் அதுபற்றிக் கவலைப்பட வில்லை போலும்.

ஆனால் அரசகுமாரன் பாவத்திற்குக் கழுவாய் தேடி விட்டால் போதும் என்று மன்னனும் நினைப்பானே யாகில் அவனுக்கும் ஏனைய மன்னர்கட்கும் வேறுபாடு இல்லையாய் முடிந்துவிடு மன்றோ? இந்நிலையைத்தான் 'தருமசங்கடமான' நிலை என்று கூறுவார்கள். பசுவின் துயரத்தைப் போக்குதல் என்பது மனிதனால் இயலாத

10258


காரியம். அவ்வாறு இருக்க இப்பொழுது மன்னன் செய்யக் கூடியதுதான் யாது? இந்நிலையில் சேக்கிழாருக்குத் திருக்குறள் உதவுகிறது. அவ்வாறானால் இத்தகைய சந்தர்ப்பங்களில் யாது செய்ய வேண்டும் என்று விதித்தது என்பதைக் காண்டல் வேண்டும்.

> ‘அறிவினால் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
> தந்நோய்—போல் போற்றாக் கடை’

என்ற குறளை மீட்டும் நினைத்துப் பார்த்தால் அரசன் செய்ய வேண்டிய கடமை விளங்காமற் போகாது. பசுவின் நோயைப் போக்க இயலவில்லையாயின் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான். அதாவது அப்பசு படும் துயரைத் தானும் படவேண்டும் என்பதுதான். பசு படும் துயரம் எத்தகையது? தனது கன்றை இழந்து அது வருந்துகிறது. எனவே அரசனும் தனது மைந்தனை இழந்து வருந்த வேண்டும். இது சற்று வியப்பையும் அச்சத்தையும் தரும் முடிவுதான். கேவலம் ஒரு பசு மாடு தன் கன்றை இழந்ததற்காக ஓர் அரசன் தன் மைந்தனை இழப்பதா? இது முறைதான் ஆகுமா? பசுங் கன்று எங்கே? அரசகுமாரன் எங்கே? உயிர்கள் என்ற முறையில் இருவரும் ஒன்றுதான் எனினும் கன்றின் பொருட்டு அரசகுமாரனைப் பலி இடுவதா? நம்மைப் பொறுத்தவரைப் பலியிடுவது முறையற்றதுதான். ஆனால் மனுச் சோழனுக்கு இவ்வாறு இல்லை. வள்ளுவர் வகுத்த வழியில் வாழ முற்பட்ட அப் பெருந்—தகைக்கு இச்செயலில் வியப்பு ஒன்றும் தோன்றவில்லை. இதற்கு மறுதலையாக அரசகுமாரன் வேறு கழுவாய் தேட வேண்டும் என்று கூறப்பட்டதுதான் அவனுக்கு வியப்பாக இருக்கிறது. அவ்வாறு கூறிய அமைச்சர்களை

அரசன் இதைக் கூறிவிட்டு இதோ ஒரு கேள்வி கேட்கிறான். 'என் மகன் செய் பாதகத்துக்கு இருந்தவங்கள் செய இசைந்தே; அன்னியன் ஓர் உயிர் கொன்றால் அவனைக் கொல்வேனானால், தொன்மனுநூல் தொடை மனுவால் துடைப்புண்டது எனும் வார்த்தை; மன்னுலகில் பெற மொழிந்தீர் மந்திரிகள் மறந் தென்றான்.' [பெ. பு. நகரச் சிறப்பு—37]

அரசனைப் பற்றி அறிய நல்லதொரு வாய்ப்பு. தன்மகன் செய்த கொலைக்குப் 'பிராயச்சித்தம்' செய்துவிட்டுப் பிறன் ஒருவன் செய்த கொலையைத் தண்டிக்க அவன் உயிரை வாங்கினால் அது முறையாகுமா? என்று கேட்கிறான்.

இதுகேட்ட அமைச்சருள் ஒருவன் 'அரசே! அதற்கு முன்னா இவ்வுலகில் எவரேனும் ஒரு பசுக்கன்றுக்காகத் தன் மகனைக் கொன்றதுண்டா? என்றும் கேட்டுவிடுகிறான். மேலும் அவனைக் கொல்லுதல் மரபன்று என்று வழக்காடுகிறான். இந்நிலையில்தான் அரசன் குறளுக்கு உரை கேட்கிறான். அரசன் கூற்றாகத் தெய்வப் புலவர் சேக்கிழார் பெருமான் உரைவகுக்கிறார் மேலே கண்ட ஒப்பற்ற குறளுக்கு. அமைச்சர்களை நோக்கி அவ்வரசர் பெருமான் "அறநெறியின், செவ்விய உண்மைத் திறம் நீர் சிந்தை செய்யாது உரைக்கின்றீர்" என்று இடித்துக் கூறிவிட்டு அவ்வற நெறியின் செவ்விய உண்மைத் திறத்தைக் கூறத் தொடங்குகிறான்.

'என மொழிந்து "மற்றிதனுக்கு இனி இதுவே செயல் இவ் ஆன்மன மழியும் துயரகற்ற மாட்டேனேன் வருந்தும் இது தனது உறுபேர் இடர்யானும் தாங்கு

விதே தரும்" எனா அனகன் அரும்பொருள் துணிந்
தான் அமைச்சரும் அஞ்சினா—ரகன்றார் [ஷை-42]

என்ற பாடல் முழுவதும் முன்னர்க் கூறப்பெற்ற ஒரு குறளின் விளக்கமாகும். 'இவ்வான் மனமழியும் துயரம் அகற்ற மாட்டாதேன்' என்ற அடியால் பசு அடைந்த வருத்தம் எல்லையற்றது என்பதும், பேரரசனாகிய அவனுங்கூட அதற்குப் பரிகாரந் தேட இயலாது என்பதும் ஒருவாறு பெற்றோம். அவ்வாறாயின் அதற்குச் செய்ய வேண்டியது யாது? 'வருந்துவம் இது கண்டு உறு பேர் இடர் யானும் தாங்குவதே தருமம்' என்பதே இத் தமிழன் கண்ட அறமாகும். ஒருவனுடைய துயரத்தைப் போக்க முயல வேண்டும். போக்க முடியவில்லையாயின் தானும் அத் துயரத்தை மேற் கொள்ள வேண்டும். நம் காலத்தில் வாழ்ந்த உலகம் போற்றும் உத்தமரும் இக் குறளை வாழ்ந்து காட்டினாரன்றோ? உடுக்க உடையின்றி வாடையில் மெலிந்த மக்கள் துயரைப் போக்க முற்பட்டார். ஆனால் வறுமை மிக்க இந்திய நாட்டில் இது உடனே ஆகாத காரியம் என்பதையுங் கண்டு கொண்டார். உடனே அவர் செய்த காரியம் யாது? அவர்கள் துயரத்தைப் போக்க வழி இல்லையாயின் அவர்களைப் போலவே யானும் துயரத்தைப் பங்கு கொள்கிறேன் என்று கூறிவிட்டு இடையில் கட்டிய ஒரு வேட்டியுடன் வாழ்நாள் முழுதும் உலாவிய உத்தமரும் இக் குறளுக்கு இலக்கியமானார். எனவே மனுச்சோழன் இதில் ஒன்றும் வியப்படையவில்லை; அடையாதது மட்டும் அன்று; இவ்வாறு செய்வதே முறை என்று கருதினான்.

'இப்பசு வருந்தும் வருத்தத்தை யானும் அடைதல் வேண்டும்' என்று கூறியதே பெரியதொரு அருந்

செயல். தற்காலம் போல முழு மனத்துடன் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன் என்று தீர்மானம் நிறைவேற்றி விட்டு அரசன் சும்மா இருந்து விடவில்லை. அதனைக் கொண்டு செயலாற்றவும் தொடங்கி விட்டான். பசு அடைந்த துயரத்தைத் தான் அடைய வேண்டுமாயின் ஒரே வழிதான் உண்டு. அதாவது பசுவைப் போல் தானும் தன் மகனை இழக்க வேண்டும். அப்பொழுதுதான் 'பிறிதின் நோய் தந்நோய் போல்' போற்ற முடியும்! அதனைச் செயலாக்க முற்பட்ட பெருந்தகை **போற்ற** வேண்டுமானால் அக்கன்று இறந்த அதேவழியில் தன் மகனும் இறக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான். வேறு வழியில் அவன் இறந்தாலும் அவனுக்கு இதே வருத்தம் வரினும் பசுவுக்கு ஏற்பட்ட **அதே முறையில்** அவ்வருத்தம் அவனுக்கு வந்ததாக ஆகாது. எனவே அக்கன்று இறந்த அதே முறையில் தன் மகனும் தேர்க்காலில் சிக்கியே உயிரை விட வேண்டும் என்று நினைத்து அவ்வாறே செய்து முடித்தான். இப்பொழுது குறளின் பொருள் நன்கு விளங்குகிறதன்றோ? பிற உயிர் பெறும் வருத்தத்தைத் தானும் பகிர்ந்து வருந்தாவிட்டால் ஒருவன் அறிவுடையவன் என்று கூறிக் கொள்வதால் பயன் யாது? எவ்வாறு இக் குறளுக்கு உண்மைப் பொருள் காண வேண்டும் என்பதைச் சேக்கிழார் பெருமான் இப் பாடலில் நமக்கு உரை செய்து காட்டி விட்டார். இவ்வாறு அவர் பயன் படுத்தியும், உரை செய்தும் உள்ள குறள்கள் பல. அவற்றைப் படித்துப் பயன் அடைவது நமது கடனாகும்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
THIRUVANMIYUR :: MADRAS 41

# படைச் செருக்கில் ஒரு குறள்

வித்வான் பண்டிதர் க. கிருஷ்ணபிள்ளை

பாரதப் போர் நிகழ்ந்துகொண் டிருக்கின்றது. முதற் பதினாறு நாட்களிலும் நிகழ்ந்த போரின்கண்; பாண்டவர் பக்கத்து வீரருள், சிவேதன், சிகண்டி, அபிமந்யு முதலான பெரு வீரர்களும், கௌரவர் பக்கத்து வீரர்களுள் பீஷ்மர், துரோணர், சயத்திரதன் முதலான பெரு வீரர்களும் குருக்ஷேத்திரத்தே மாய்ந்தொழிகின்றனர்.

பதினேழாம் நாள் போர் ஆரம்பமாகின்றது; முதற் பதினாறு நாள்களிலும் மாய்ந்தொழிந்த சேனையெல்லாம் உயிர் பெற்றெழுந்தன வென்று எண்ணுமாறு, போர்க களத்தில், மிக்க பெரும் படை மொய்த்து நெருங்கி நிற்கின்றது; பாண்டவ சேனைக்குத் திட்டத்துய்மனும் கௌரவ சேனைக்குக் கன்னனும் தலைவர்களாக முன்னிற் கின்றனர். பாண்டவ சேனையில் அருச்சுனனும், கௌரவ சேனையிற் கன்னனும், வில்வித்தையிற் பெயர்பெற்ற இரண்டு திலகங்களாக விளங்குகின்றனர். முழு யுத்தத்தினதும் இறுதிப் பயன் அவ்விருவர் போரிலுமேயே தங்கிக் கிடக்கின்றதென யாவரும் எண்ணுகின்றனர்.

போர்க்களத்தே நிற்கின்ற தருமர், மனங் கசிந்து, கண்களிலிருந்து முத்துப் போற் கண்ணீரை வடித்த படியே, அருச்சுனனது தேரில் அமர்ந்திருக்கின்ற கண்ணபிரானது அடிக்கமலங்களில், தம் முடிபடுமாறு வணங்குகின்றனர்; "ஆபத்சகாயனே, இற்றை நாள் நிகழவிருக்கும் போரிலேனும், சூரியகுமாரனாகிய

கன்னன் பாய்ந்தொழிவானோ" என்று மனங்கலங்கிய வண்ணமே அழுது கொண்டு கேட்கின்றார் தருமர்.

"கன்னன் இன்று அருச்சுனன் அம்பால் இறப்பான்; துரியோதனன் நாளை வீமனால் இறப்பான்; பூமி முழுவதும் நினக்கே உரியதாம்" என்கின்றார் கண்ணபிரான்; அது கேட்ட தருமர், தம் சாரதியாகக் கண்ணபிரான் செய்துகொண்டு வரும் உதவிகளையெல்லாம் வாய்விட்டுக் கூறிப் புகழ்ந்து, துதிக்கின்றார்; கண்ணபிரான், திட்டத்துய்மனை நோக்கிப் பாண்டவ சேனைகளை அணி வகுக்குமாறு பணிக்கின்றார்; அவ்வாறே அவனும் அணிவகுத்து நிற்கின்றான்.

இப்பால், கௌரவ சேனைகளைக் கன்னன் அணி வகுக்கின்றான்; அவ்வாறு அணிவகுத்துக் கொண்டு நிற்கும் கன்னன், துரியோதனனை நோக்கி, அரசர்கள் பலரும் கேட்பக் கூறுகின்றான்; "ஓ! இராசாதிராசனே, இன்று, குறையுடலங்கள் கூத்தாடுமாறு பகைவர் சிரங்கள் எல்லாம் கொய்வேன்; பகைவர்களது சேனையில் அருச்சுனனுக்குத் தேர்ப்பாகனாகக் கண்ணன் நிற்கின்றான்; அவனை யொப்பார் தேவருலகிலுமில்லை; குதிரைகளின் மனத்தையறிய வல்லவனும், போரில் தந்திரத்தை யறிவிக்கும் ஆற்றல் பெற்றவனும், போரில் தேர் செலுத்தும் திறமை படைத்தவனுமாகிய சல்லியன் ஒருவனே அக் கண்ணபிரானுக்கு ஒப்பாவான்; அச் சல்லியன், இன்று என தேரைச் செலுத்துவானாயின்; அக் கண்ணனேயன்றி, சிவன்தான் வந்து தேர்விடினும், அத் தேர்மேல் நிற்கும் இருவரையும் கொன்றே விடுவேன்; இது நிச்சயம்; அதன் பின்னர் வீமன் முதலானோர் எல்லாம், என்னாற் செலுத்தப்படும்

ஒவ்வோரமயத்துக்கும் ஆற்றுதவரா யிருப்பர்; எனவே, உலகம் முழுவதையும் உன் குடைக்கீழாக்கி, உனக்கே வெற்றிமாலை சூட்டுவேன்" என்று கூறுகின்றான்.

இன்னும், கன்னன் கருத்தில், துரியோதனன் தன்மேற் கொண்ட அன்பு, நண்பு, நம்பிக்கை, தனக்குச் செய்துள்ள நன்றிகள் முதலாய எல்லாம் ஒருங்கே வந்து உதிக்கின்றன; குந்திதேவியின் முதற் புத்திரனாகத் தோன்றிய அன்றே, அவளால், மிதவையம் பேழை ஒன்றில் இடப்பட்டு, ஆற்றில் விடப்பட்டு, தேர்ச்சாரதியாற் கண்டெடுக்கப்பட்டு, வளர்க்கப்பட்டு, தேர்ச்சாரதியின் மகன் என்றே யாவராலும் எண்ணப் பட்டிருப்பவனை, அரசனுக்குப் பெரிய நண்பனுக்குப் பேணிப் **புரந்தவன்** துரியோதனனன்றோ?

ஆம்; தன்னைப் பாதுகாத்துப் பேணிய—**புரந்த**—துன்பத்தை நீக்கிய துரியோதனன் செய்த நன்றிகளைக் கன்னன் மறக்கவில்லை; துரியோதனனை நோக்கி,

"அகன்ற குருநாட் டரியேறே! யானின்
னிம்பால்
வெஞ்சோற்றே றுண்டருந்தி யமுத ருந்தும்
விண்ணவர் போல் இந்நெடுநாள் விளைந்து
வாழ்ந்தேன்;
செஞ்சோற்றுக் கடன்இன்றே கழியே னாகில்,
நின்றோள்கள் வளர்த்ததற் செயல்வே
றுண்டோ"
(வில்லிபாரதம். பதினேழாம் போர்—20)

என்று கூறுகின்றான்.

"அகன்ற குருநாட்டு ஆண் சிங்கம் போன்றவனே அமுதத்தை அருந்தும் தேவர் போல, யான் இவ்வளவு

நீண்ட காலமாக, நன்றாற் றரப்பட்ட இனிய பாலைச் சோற்றோடு அருந்தி, விரும்பி வாழ்ந்தேன்; அதற்காக, யான் இன்றைக்கு, உனது செஞ்சோற்றுக் கடனைக் கழிப்பேன்; அவ்வாறு கழியாது விடுவேனாகில், யான் இத் திண்ணிய தோள்களை வளர்த்ததனால், செய்யத் தக்க வேறு செயல் யாதேனும் உண்டோ? இல்லையே" என்கின்றான்.

இன்னும் எடுத்துரைக்கின்றான்:—

ஓரூரும் ஒருகுலமும் இல்லா என்னை
உங்கள்குலத் துள்ளோரில் ஒருவன் ஆக்கி,
தேரூரும் அவர்மனைக்கே வளர்ந்த என்னைச்
செம்பொன்மணி முடிசூட்டி யம்பு ராசி.
நீரூரும் புவிபாலர் பலரும் போற்ற
நின்னினும் சீர் பெறவைத்தாய்; நினக்கே யன்றி
ஏரூரும் கதிர்முடியாய்! உற்ற போரில்
யார்க்கினியென் உயிரளிப்ப தியம்பு வாயே.

(வில்லிபாரதம்—பதினேழாம் போர்—21)

"ஓர் ஊரும், ஒரு குலமும் இல்லாத என்னை, உங்கள் குலத்துள்ளவர்களில் ஒருவன் ஆகுமாறு செய்தும், தேர் செலுத்தும் பாகர் வசிக்கின்ற வீட்டில் வளர்ந்த என்னைச் செம்பொன்னாலும் மணியாலும் செய்யப் பெற்ற முடியைச் சூட்டியும், கடலாற் சூழப்பட்ட உலகத்திலுள்ள அரசர்கள் பலரும் போற்ற, உன்னிலும் பார்க்க சிறப்பை யான் பெறுமாறு வைத்தாய்; (இவ்வாறு என்னைப் புரந்த) உனக்கேயன்றி, அழகு மிக்க ஒளி வீசுகின்ற முடியையுடையவனே, மூண்டுள்ள

போரில், என்னுடைய உயிரை இனி யாருக்காகக் கொடுப்பது; சொல்லுவாயாக" என்கின்றான்.

கன்னனுடைய செய்ந் நன்றி மறவாமை எவ்வாறிருக்கின்றது; ஆழ்ந்து நோக்குங்கள்.

துரியோதனனிடத்தில் உண்ட சோற்றை மறவாது—அவன் செய்த நன்றிகளை மறவாது—அவனால் உயர்ந்த பதவியைப் பெற்றதனை மறவாது அவனால் தான் புரக்கப்பட்டமையை மறவாது, அவனுக்காகவே தன் உயிரைவிட என்னுகின்றான், துரியோதனன் படை வீரர்களுள் ஒருவனாகிய கன்னன்;

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்;
உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு
(திருக்குறள். செய்ந்நன்றியறிதல்-10)

என்பது தெய்வப் புலவர் திருவாக்கன்றோ?

இவ்வாறு, துரியோதனன்பால், அரசர் பலரும் கேட்ப, இயம்பிய கன்னன் யுத்தகளத்தில் அன்று எங்ஙனம் உயிர்துறந்தான் என்பதையும் தொடர்ந்து நோக்குவோமாக.

அன்று. இரு திறத்தாரும் மிக்க சினத்துடனும், வெறியோடும் போர் புரிகின்றனர்; மாய்ந்தொழிந்த படை வீரர்களதும், யானை, குதிரைகளதும் இரத்த வெள்ளம் பெருக்கெடுத்து. ஆறாக ஓடி, பிணங்களை இழுத்துச் செல்லுகின்றது; பகற் பொழுதின் பெரும் பாகம் கழிந்துவிடுகின்றது. அவ்வளவு நேரமாகியும், கன்னன் கொல்லப்படாமையைக் குறித்து வருந்தி, அருச்சுனனையும் சிறிது சினந்து வெறுக்கின்றா

தருமர்; தருமருடைய எண்ணத்தை நிறைவேற்ற எண்ணிப் புறப்படுகின்றான் அருச்சுனன்; கண்ணபிரான், முன்போலவே அவனது தேரைச் செலுத்திக் கொண்டு, கன்னன் நிற்கும் இடத்தை நாடி வருகின்றார்; எதிர்ப்படுகின்றனர்; எதிர்க்கின்றனர்.

அருச்சுனன் கன்னன் மேல் அம்புகளைப் பொழிகின்றான்; கன்னனும் அருச்சுனன் மேல் அம்புமாரி சொரிகின்றான்: இருவரும், ஒருவர்மேல் ஒருவர் செலுத்தும் அம்புகளால், இளைக்காது நெடுநேரம் போர் புரிகின்றனர்; யார் வெல்வான் என்று, காண்பார் கூறுதற்கியலாவண்ணம், இருவராலும் அம்புகள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தேவர்கள்பாற் பெற்ற அஸ்திரங்களும், இருவராலும் பிரயோகிக்கப் படுகின்றன; ஒருவரை யொருவர் வெல்வது அரிதாகவே தோன்றுகின்றது.

கன்னன், அருச்சுனனை மாய்க்க எண்ணி **நாகாஸ்திரத்தைப்** பிரயோகிக்க விரும்பி, அதை எடுக்கின்றான்; அதற்குரிய பூசைகளைச் செய்து விடும் தருணத்தில், அவனது தேர் செலுத்தும் சல்லியன், அருச்சுனனுக்குத் தேர் செலுத்தும் கண்ணபிரானது சூழ்ச்சிகளை நினைவூட்டி, அருச்சுனனது மார்பை இலக்காகக் கொண்டு அம்பை எவுமாறு புத்திமதி புகலுகின்றான்; கன்னன், அதனைப் பொருட்படுத்தாது, அருச்சுனனது கழுத்தை இலக்காகக் கொண்டு அம்பை எவுகின்றான்.

நாகாஸ்திரம் அருச்சுனனது கழுத்தை நோக்கி வரும் விரைவை அறிந்த கண்ணபிரான், தான் செலுத்திக் கொண்டு வருகின்ற தேரை, அதன் சக்

கரங்கள் பன்னிரண்டு அங்குலி நிலத்திலுள்ளே புதையுமாறு, தாழச் செய்கின்றார்; அதனால், இலக்குத் தவறி நாகாஸ்திரம் அருச்சுனனது கிரீடத்தை மோதியிடறி அப்பாற் செல்கின்றது; அப்பாற் சென்ற நாகாஸ்திரம், மறுமுறை தொடுக்குமாறு கர்ணனை வேண்டவும், அவன் தன் தாயாகிய குந்திக்குத் தான் முன் கொடுத்த வரத்தை எண்ணி மறுத்துவிடுகின்றான்.

தேர் செலுத்திக்கொண்டு வந்த சல்லியன், கர்ணனை வெறுத்து, தேரிலிருந்தும் இழிந்து, தன் தேரில் ஏறிக்கொண்டு, வில்லையும் எடுத்துக்கொண்டு, யுத்தம் புரியும் நோக்கத்துடன் அவ்விடத்து நின்றும் அகல்கின்றான்; கர்ணன், 'கற்ற வித்தை காலத்திற் குதவாது' என்று முன் **பரசுராமன்** தனக்கு இட்ட சாபத்தை எண்ணி, அவனை மனதிற் றியானித்துக் கொண்டு, வேறொரு தேரில் ஏறி, அருச்சுனன் மேற் சரமாரி சொரிகின்றான்: அத் தருணத்தில் அருச்சுனனும் கர்ணனது மயிர்க்கால் தோறும் நுழையுமாறு பல அம்புகளைப் பிரயோகிக்கின்றான்; சூரியனிலிருந்து வெளிப்படும் ஒளிக்கதிர்கள் போற் கர்ணனுடைய உடம்பின் எல்லாப் பாகங்களிலுமிருந்து இரத்தம் கொப்பளித்துப் பாய்கின்றது. கண்ணபிரான் யுத்தத்தை நிறுத்துமாறு, அருச்சுனனுக்குக் கட்டளையிடுகின்றார்; அருச்சுனனைத் தேரில் இருத்திவிட்டுத் தான் இறங்கி, வேதியன் போல் உருவங்கொண்டு: கர்ணன் இருக்குமிடத்தை யெய்தி, அவன்பால் இரந்து, அவன் செய்த புண்ணியப் பயன்களை யெல்லாம் பெற்றுக் கொள்ளுகின்றார்; பின்னர்த் தன் திருவுருவத்தை அக் கர்ணனுக்குக் காட்டுகின்றார்;

அவன் வேண்டிய வரங்களைக் கொடுக்கின்றார்; கண்ணன், யுத்த களத்திலே, மிக்க வில்வீரனாகிய அருச்சுனனது அம்பாலே மாய்வது குறித்தும்; நாராயணனைக் கண்ணுற்றுக் காண்பது கருதியும் அளவிலா ஆனந்த மெய்துகின்றான்.

**"பெறுதற் கெட்டாப்பெரும்பயன் நின்திருவருளாற் பெறப் பெற்றேனே"** என்று, நாராயணனாகிய கண்ணபிரானை இவ்வமயத்திலே கண்ணுற்றமையைக் குறித்து மகிழ்கின்றான்; கண்ணபிரானுக்கு எடுத்துரைக்கின்றான்; தான் நடத்திய வாழ்க்கையில் பரிபூரணமான பரம திருப்தியடைகின்றான்; எல்லாவற்றினும் மேலாக, தன் காதற்றம்பியரென்று பாண்டவரை யறிந்திருந்தும், அதனை நோக்காது, தன்னைப் **புரந்த** துரியோதனனுக்காக, யுத்த களத்தில் உயிரைக் கொடுத்துச் செஞ்சோற்றுக் கடன் கழிப்பதை எண்ணித், தன் வாழ்வின் இலட்சியத்தைத் தான் எண்ணியாங்கு அடைந்ததை அகத்திற் கொண்டு, அளவிலா ஆனந்தமடைகின்றான்; பெருமிதம் எய்துகின்றான்:

தருமன்மகன் முதலான அரியகாதற் றம்பியரோ
டெதிர் மலைந்து செறுகண் ஆண்மைச்
செருவில் எனதுயிரனைய தோழற்காகச்
செஞ்சோற்றுக்
கடன்கழித்தேன்; தேவர் கோவுக்
குரைபெறுநற் கவசமுங்குண் டலமுமீந்தேன்;
உற்றபெரு
நல்வினைப்பே றுனக்கே தந்தேன்;
(வில்லி-பாரதம். பதினேழாம் போர்—248)

........................................................................

என்று கண்ணபிரானை நோக்கிக் கூறி, தன்

கொடை வாழ்வு குறித்தும் உவகை யெய்துகின்றான்; இன்னும், அப்பொழுது அவன் ஆங்குக் கூறிய மொழிகள், கற்பார் உள்ளத்தைக் கனிய வைத்து இளகச் செய்வனவாகும்.

கண்ணபிரான் அவனை ஆசிர்வதித்து, அருச்சுனனை நோக்கி, 'ஆதவன் அஸ்தமிப்பதற்கு முன்னே இவனுயிரைப் படுத்தி' என்று கட்டளையிடுகின்றார்; அருச்சுனனும் தன் அம்பொன்றால், கன்னனுடைய இதயம் இலக்காகக் கொண்டு எய்கின்றான்; அம்பு, கன்னனது மார்பை ஊடுருவிக்கொண்டு அப்பாற் செல்கின்றது. கன்னன் வீழ்கிறான்.

கன்னனது கண்களிலும், கருத்தினிலும், கண்ணபிரானது திருவுருவம் நிற்கின்றது; அவனுடைய நா, நாராயணனுடைய நாமத்தை யுச்சரிக்கின்றது; அம்பு மழை அவனது உடலைக் குளிப்பிக்கின்றது; குற்றுயிரோடு கொடை வல்லோன் கிடக்கின்றான்; அரசர்களெல்லாம் அவன் அருகெங்கும் மொய்க்கின்றனர்; துரியோதனன் சகிக்கவாற்றாது, தனக்காக யுத்த களத்தில் உயிர்விட்ட அவன் பெருதவியை எண்ணியெண்ணி, மனம் புண்ணாய், **கண்கள் நீர் மல்கி** ஆறாய் ஓட, அவன் பக்கத்தில் இருந்துகொண்டு சோகங் கூறி அழுதரற்றுகின்றான்.

குந்திதேவி இதனையறிந்து யுத்தகளத்திற்கு ஓடி வந்து, அழுகின்றாள்; அன்பு மிகுதியாற் றன் முலைக் கணூறிய பாலை அவன் வாயில் ஊட்டுகின்றாள்; தாயின் மடியிலும் கையிலும் கன்னனது உடல் கிடப்ப, அவனது **ஆவி அகல்கின்றது**; வீரசுவர்க்கமடை

கின்றது; துரியோதனனது சேனை முழுவதும் தொலைந்து மனங்குழைந்து, கொதித்துக் குமுறி அழுகின்றது.

"அடையார்தம் படைக்கடலின் அருநிலைக்குக்
கரையேற லாகா தோலாப்
புணையாய்,எத் திறத்தினும் பகர்நாடல்
உற்றதெலாம் புகலத் தக்க
துணையாய்,என் உயிர்க்குயிராம் தோழனுமாகிய
உன்னைத் தோற்றேன் அந்தோ,
இணையாரும் இலா அரசே! யாரைக் கொண்
டரசாள இருக்கின்றேனே."

"சூழ்வேலை யுலகாளும் சூழ்ச்சியும், இப்
பெருஞ்செல்வத் துவக்கும் நெஞ்சால்
வீழ்வேனோ, அமராட வீமனொடு
தலைநாளில் விழைந்த செற்றம்
தாழ்வேனோ, வினையொழிந்தும் தம்பியரை
யொழிந்துமினித் தனித்து நானே
வாழ்வேனோ, வாழ்வே! என் மனவலியே!!
வருகின்றேன்; வருகின்றேனே."

(வில்லிபாரதம். பதினேழாம் போர்—260-261)

என்று, கண்ணீர் ஆறாக ஓட, பிரலாபித்து, வெம்பி, தழுதழுத்த குரலில் அழுதரற்றுகின்றான் துரியோதனன்.

கன்னனுடைய வாழ்வு எவ்வாறிருக்கின்றது? அவனுடைய சாக்காடு எத்தகையது?

கன்னனைப் புரந்தவன் துரியோதனன்; தன்னைப் புரந்தமைக்காக, அவனுடைய செய்ந் நன்றியை மறவாது, அவன்பால் அன்பும், நண்பும் பூண்டொழுகி,

தன் தம்பியரென்றும் பொருட்படுத்ாது, பாண்டவரோடு, அவனுக்காக நின்று, தன்னுலியன்ற மட்டும் பொருது, அவனுக்காக யுத்த களத்தில் உயிரை வழங்கி அர்ப்பணம் செய்தவன் கன்னன்.

கன்னன் யுத்த களத்தில் வீழ்ந்து இறந்தபோது, ஒரு காலும் கலங்காத துரியோதனன் கலங்கினன்; அவனது வீரச் செயல்களை எண்ணி மனம் நைந்தான். யுத்தகளத்திலே, ஒவ்வொரு கணமும் ஆற்றிய அரும் பெரும் போர் வீரச் செயல்கள் எல்லாம் அத்துரியோதனன் கண்கள் முன் நின்றன; தன் இரகசியங்களை யெல்லாம் ஒன்றும் ஒளியாது புகலத்தக்க தன் படைவீரன், தன் பொருட்டாக யுத்தகளத்தில் மாண்டு கிடப்பதைக் காண அவன் மனம் துடித்தது; அவனுக்குச் சொல்லாமலே அவன் அகத்திற் பதிந்து ஊறிக் கசிந்து கிடந்த அன்பு, அவன் கண்கள் மூலம் நீருருவில் வெளி வரலாயிற்று. அவன் **கண்கள் நீர் மல்கின; நிரம்பி** வழிந்தன; ஆறாய் ஓடியது கண்ணீர்; அழுதான்; அரற்றினன்! இங்ஙனம், தன்னைப் புரந்த துரியோதனன் **கண்கள் நீர் மல்குமாறு**, யுத்தகளத்தில், கன்னன் அத்துரியோதனுக்காக உயிர் விட்டான்; **படைவீரன் ஒருவனுடைய**—கன்னனுடைய **சீர்** இத்தகையதொன்றாயிருக்கின்றது. நிற்க,

உலகத்தில் மிக வருந்தத்தக்கது எது? சாதல்தான். "சாதலின் இன்னாத தில்லை" (திருக்குறள்-௲௨௱10) என்றார் வள்ளுவரும்.

அவ்வாறிருக்க, யாராவது சாதலை விரும்புவார்களா? யாரேனும், கடவுள் பாலேனும், கடவுட்டன்மை

மெய்திறைராகிய முனிவர் முதலானோர் பாலேனும் வேறு யார்பாலேனும், இரந்து வரங்கிடந்து சாதலை விரும்பிக் **கேட்பார்களா?** யுத்த வீரர்கள் **கேட்பார்களா?** ஒரு வேளை கேட்பின், அவர்கள், எத்தகைய சாதலை விரும்பிக் **கேட்டு வாங்க** வேண்டும் என்று, யுத்த வீரருக்கு—படைகளுக்கு-பிறருக்குப் பெருமிதக் கடமை புகட்டுகின்றார், வள்ளுவர்.

*புரந்தார் கண்ணீர் மல்கச் சாகிற்பின் சாக்காடு*
*இரந்துகோட் டக்க துடைத்து*

(திருக்குறள்—படைச் செருக்கு.10)

"தன்னைப் புரந்தாரது கண்கள் நீர் மல்குமாறு, (யுத்த களத்தின்கண் ஒருவன்) சாதல் வல்லானாயின், அந்தச் சா, இரந்து பெற்றுக் கொள்ளவேண்டிய தகுதியை யுடையது" என்பது இக்குறளின் சாரம். இதற்குப் பரிமேலழகருரை பின் வருமாறு:—

'புரந்தார்கண்—(தமக்குச் செய்த நன்றிகளை நினைந்து) ஆண்ட அரசர் கண்கள், நீர் மல்க—நீர் மல்கும் வகை, சாகிற்பின்—(போரிடைச்) சாவப் பெறின், சாக்காடு—அச்சாக்காடு, இரந்து கோள் தக்கது உடைத்து—இரந்தாயினும் கொள்ளுந் தகுதியை யுடைத்து' என்ற வாறு.

"மல்குதலாகிய இடத்து நிகழ் பொருளின் தொழில், இடத்தின் மேல் நின்றது. கிளை அழ இல்லிடை நோயால் விளிவார், பழவினைப்பயனை எய்தலின், அடுத்த வினையால் துறக்க மெய்துஞ் சாதலை 'இரந்து கோட்டக்க துடைத்து' என்றார்" என்பது அவரது விளக்கக் குறிப்புரை.

**'புரந்தார் கண்'** என்பது **புரந்தாரது கண்** என்னும் பொருட்டாய், ஆறாம் வேற்றுமைத் தொகையாக நின்றது: **கண் நீர் மல்க** என்னும் மூன்று சொற்களாகிய தொடர் மொழியில், **கண்** இடமும், **நீர்** அதன்கண் நிகழ் பொருளும் ஆகும்; மல்குதல்—நிரம்பி வழிதல் என்னும் பொருளது: எனவே மல்குதலாகிய தொழில், நீராகிய, இடத்து நிகழ் பொருளின் தொழிலேயாம். அத்தொழில், கண்ணின்மேல் ஏற்றிக் கூறப்பட்டுள்ளது. எனவே, **நீர் மல்க** என்னும் இரு சொற்களும் எழுவாய்த் தொடராய்ப் புணர்ந்து நின்று அவ்விரண்டும் ஒரு சொற்றன்மை எய்தி பின்னர் **கண்** என்னும் மொழியோடும், எழுவாய்த் தொடராகவே புணர்ந்து நின்றதெனக் கொள்க. கிணறு நீர் ஊறிற்று. ஊருணி நீர் நிறைந்தற்று, குளவளாக் (கோடின்றி) நீர் நிறைந்தற்று என்றாற்போலக் கொள்க.

வீட்டில், நோய் காரணமாக இறப்பவர்கள், முன்பு தாம் செய்த கர்மத்தின் பயனையே அடைவார்கள்; அவ்வாறன்றி, யுத்தத்தில் இறப்பார், அப்பொழுது தாம் செய்து கொண்ட அக்கன்மத்தின் பயனாக, வீர சுவர்க்க மடைவார்களாதலின், யுத்தத்தில் இறக்கும் சா, நோயாற் சாகும் சாவினும் சிறந்ததாகும்; ஆதலின் யுத்தத்தில் இறக்கும் சா, கடவுள் பாலேனும், பிறர்பாலேனும் **இரந்து, பெற்றுக் கொள்ளத் தக்க தகுதியையுடையதாகும்** என்பது பரிமேலழகர் கருத்தின் சாரமாகும்:—இங்ஙனம், தன்னைப் **புரந்த** துரியோதனனது **கண்கள்** தன்னை நினைக்கும் பொழுதெல்லாம் **மல்குமாறு** யுத்தகளத்தில், அத்துரியோதனன் பொருட்டாகப் புரந்த நன்றியை மறவாது **உயிர் விட்ட** கன்னன்

போன்றவர்களே படை வீரருக்குத் தகுதியாவ ரென்று காண்க.

இனி, '**சாநிற்பின்**' என்னும் வினைக்கு, வினை முதலை வெளிப்படையாகக் கூறாமையானே, **புரந்தார் கண் நீர் மல்கச்** சாதல் யுத்த வீரனுக்கு மாத்திரமே யுரிமை யுடைத் தென்று கொள்ளாது, ஏனைப் படைகளுக்கும் உரித்தெனக் கொள்ள வைத்து, யானை, குதிரை என்னும் அவைகள் யுத்தத்தின்கண் பொர வேண்டிய படைச் செருக்கையும் குறிப்பிட்டுள்ள சிறப்பும் காண்க. யுத்தத்தின் கண்ணே பொருது பட்டனவும், புண் பட்டனவு மாகிய யானை, குதிரைகளைக் குறித்து, அவற்றைப் புரந்தார் கண்கள் நீர்மல்கித் துன்ப முற்ற செய்திகளையும் சான்று மனத் திருத்துவோமாக.

சங்க இலக்கிய நூலாகிய முல்லைப் பாட்டினுள், தலைவன், பாசறை யொன்றின்கண் இருந்து, இரவு முழுவதும் துயிலின்றி, யானை, குதிரை, யுத்த வீரர் பொருட்டாகத் துன்புற்ற செய்தி,

'எடுத்தெறி யெஃகம் பாய்தலிற் புண்கூர்ந்து
பிடிக்கணம் மறந்த **வேழம்**, வேழத்துப்
பாம்புபதைப் பன்ன பருஉக்கை துமியத்
தேம்பாய் கண்ணி நல்வலந் திருத்திச்
**சோறுவாய்த் தொழிந்தோ ருள்ளியும்**, தோல்துமிபு
வைந்நுனைப் பகழி மூழ்கலிற் செவிசாய்த்
துண்ணா துயங்கும் **மாசிந் தித்தும்**,
ஒருகை பள்ளி யொற்றி, யொருகை
முடியொடு கடகம் சேர்த்தி **நெடிது நினைந்து**'
(முல்லைப் பாட்டு: 68—75),

என்று கூறப்பட்டிருத்தலும் பிறவும் கொண்டுணர்க.

இன்னும், **'கண் நீர் மல்க'** என்று கூறிய தன்றி, **அழுகைக் கண்ணீர்** என்று வெளிப்படையாகக் கூறாமை யால், **புரந்தாராகிய வீரத்தாயர்** முதலியோர், **உவகைக் கண்ணீர்** சொரியுமாறு, அவரால் புரக்கப்பட்ட மைந்தர் முதலாயினோர், யுத்தகளத்திற் புறங்கொடாது எதிர் நின்று பொருது **சாதல் வல்லாராயின், அச்சாக்காடு,** இரந்து பெற்றுக் கொள்ளும் தகுதி யுடைத்து என்ற பொருளும் இக்குறட் சொற்கிடக்கை முறைக்கண் தோன்றுமாறு காண்க. இப்பொருட்கு எடுத்துக் காட்டாக,

மீனுண் கொக்கின் தூவி யன்ன
வால்நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்
களிறெறிந்து பட்டனன் என்னும் உவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே; கண்ணீர்
நோன்கழை துயல்வரும் வெதிரத்து
வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே.

(புறநானூறு, 277)

என்னும் புறநானூற்றுச் செய்யுளிற் கூறப்பட்ட சிறுவன் முதலாயினோரைக் காட்டலும் ஒன்று.

**'புரந்தார்'** என எடுத்துக் கூறினமையின், **புரந்தமை காரணமாக, அப்புரந்தார் பொருட்டாகவே,** போரிடைப் புகுந்து புறங்கொடாது பொருது பொன்றுதலையே வள்ளுவர் கருத்தாகக் கொண்டு பரிமேலழகர் கூறியதே மிக்க பொருத்தமுடைத் தெனினும், வெளிப்படையாக அவற்றைக் கூறாமையானே, தொன்று தொட்டு வரும் மறக் குடிப்புகழை நிலைநிறுத்துவான் வேண்டி, **இசை வேண்டி உயிர் வேண்டா இம்மறச்சிறுவன்** போன்றார் இறப்பும், **'புரந்**

**தார்கண் நீர் மல்கச்'** சாதலாகக் கொள்ளுமாறு, சொற்கிடப்ப வள்ளுவர் குறள் தொடுத்தவாறுங் காண்க.

இன்னும், இது **படைக்கு** எனவே விதந்து சிறப்பாக ஓதிய மறமிகுதியேயாயினும், **'புரந்தார்'** என்னும் மொழி, வினையாலணையும் பெயராய், **'பாதுகாத்தார்'** என்னும் பொருளதாய், மேற்காட்டப்பட்டவாறு தாயைக் கருதியவை போல, பிள்ளைகளைப் பாதுகாத்த பெற்றோர், பெற்றோரைப் பாதுகாத்த பிள்ளைகள், மாணாக்கரைப் பாதுகாத்த ஆசிரியர்கள்; ஆசிரியரைப் பாதுகாத்த மாணாக்கர் குடிகளைப் பாதுகாத்த தலைவன், தலைவனைப் பாதுகாத்த குடிகள், முதலாகப் பாதுகாத்தற் றொழிலைச் செய்தார் எவர்க்கும் செல்வதொன்றாலானும், **'போரிடை'** என்பது குறளின்கண் எடுத்தோதப்பட்டிலாமையானும், புரத்தலுக்கும் பாதுகாத்தலுக்கும் மிகச் சிறு பொருள் வேற்றுமையுண்டென் பாராயின், 'பாதுகாத்தார் எவரையும் அரசர் என்றலும் ஒருவாற்றான் அமையும் என்பது உடம்பாடாதலானும் மைந்தர், பெற்றோர் முதலாக மேல் எடுத்துக் கூறப்பட்டாரும், பிறருமாகிய புரக்கப்பட்டார் யாவரும், **புரந்தமை காரணமாக** அப்புரந்தார் பொருட்டு, **உயிர் கொடுத்தாலும், உயர் கொடுத்தாற் போன்ற உதவி புரிதலும்** ஆகிய **வீரச்** செயல்களைச் செய்யுங்கால், **அவையும் புரந்தார் கண்ணீர் மல்குமாறு** செய்தலின், **பிறர்க்கும்** ஓதிய மறமிகுதியாகவுங் கொள்ள வைத்த சிறப்புக் கண்டின்புறுக. போரிடை மாய்ந்தாரன்றி, இவ்வாறு கூறப்பட்ட புரந்தார் யாவரும் 'வீரசுவர்க்கம்' அடைவாரென்றற் காதாரமின்மையின், இவ்வாறு கொள்ளுங்கால், **'இரந்து கோட்டக்க துடைத்து'** என்பதற்கு விளக்கவுரைக் குறிப்பின்கண் பரிமேலழகர் கூறிய காரணம் பயன்படாமையும் உய்த்துணர்க.

ஆசிரியர் பரிமேலழகருரையே சாலச் சிறந்த தெனினும், இன்னோரன்ன பொருளெல்லாந் தோன்றுமாறு குறள் செய்த வள்ளுவர் பெருமையைச் சிறிது விளக்குவான் வேண்டி, இவையும் எடுத்துக் காட்டப்பட்டன வென்றறிக.

சொற்பொருளுணர்வும், இலக்கண நூல் வன்மையும், தருக்கநூற்றிறமையும், தமிழ் இலக்கிய மரபு நெறியும் பெற்ற நுண்ணுணர்வினோர்க்கு, இக்குறளுக்கு மாத்திரமேயன்றி, இத்திருக்குறள் நூலின்கண்ணுள்ள ஒவ்வொரு குறளுக்கும், ஆழ்ந்து நோக்குங்கால் எல்லாம், காலந்தோறும், நேரந்தோறும், புதிய புதிய சிறந்த நுண் பொருள்கள் பலவும் தோன்றிக் கொண்டேயிருக்குமாறு, சுருங்கச் சொல்லல் முதலிய பத்தழகும் ஒவ்வொரு குறளிலும் பொருந்த நூல் முழுவதையும் யாத்தமைத்து,

> மணற்கிளைக்க நீரூறும்; மைந்தர்கள் வாய்வைத்
> துணச் சுரக்கும் தாய்முலையொண் பால்-பிணக்கிலா
> வாய்மொழி வள்ளுவர் முப்பால் மதிப்புலவோர்க்
> காய்தொறு மூறு மறிவு.

என்றும், பிறவாறும் எல்லாம் போற்றிப் புகழ்ந்து கூறுமாறு,

> “அறம்பொரு ளின்பம் வீடென்னு மிந் நான்கின்
> திறம்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
> வள்ளுவ னென்பானோர் பேதை; அவன்வாய்ச்
> சொற்கொள்ளார் அறிவுடை யார்.

எங்கள் பாரத நாடு, பண்டைக்காலந் தொட்டே **அறம், பொருள், இன்பம், வீடு** என்னும் உறுதிப் பொருள்களைக்

குறிக்கோளாகக் கொள்வது. ஏனைய நாடெல்லாம், அறம் முதலாகிய எவற்றையும் இன்னும் உணராது, நாகரிக மல்லாதவைகளை நாகரிகமாகக் கொண்டு, கூறி, '**ஆகாயத் தாமரைப் பூ நறு மணங் கமழ்கின்றது**' என்று வாய்விட்டுப் பயனில சொற் பாராட்டி ஊளையிடுகின்றனர். அறம் முதலாயினவற்றை உணர—தமிழன் பெருமையையும், நாகரிகத்தையும் குறிக்கோளையும், சிறப்பியல்புகளையும் உணரத் திருக்குறட் கருத்துக்களையும், நூலையும் பல் வேறு துறைகளிலும், எல்லா நாடுகளிலும் பரப்புதற்குத் தமிழ் மக்களாகிய நாம் இடை விடாது முயலுதல் வேண் டும். தமிழ் நாட்டிற் பிறந்த வள்ளுவரைத் '**தமிழ் நாட் டிற்கே தந்து**' என்று கூறாது,

> வள்ளுவன் தன்னை **யுலகினுக்கே தந்து**
> வான்புகழ் கொண்ட **தமிழ்நாடு**,

என்று பாரதியார் கூறிய கூற்றை இன்னும் நன்றாக மெய்ப்பித்தல், தமிழர்க்கும், தமிழ் கற்றார்க்கும், தமிழ்ச் சங்கங்களுக்கும் உரிய பெருங்கடமையாகும்.

---

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR :: MADRAS-41

# அடக்கமும் ஒழுக்கமும்

**அ. மு. பரமசிவானந்தம்**

மனிதன் உலகில் காணும் மற்றெல்லா உயிர்களினும் மேலாக மதிக்கப்படுகின்றான். காரணம் என்ன? மற்ற உயிர்களுக்கில்லாத ஒரு தனிப் பண்பு அவனிடம் அமைந்துள்ளது. உலகில் பிறந்த பின் வாழ்வாங்கு வாழ வழியறிந்து, நல்லதன் நலனும் தீயதன் தீமையும் நாடி உற்றுணர்ந்து அறத்தாறு வாழ அவன் அறிந்திருப்பதே அவனுடைய உயர்வுக்குக் காரணம். அவ்வறத்தாறு வாழும் நெறியினை அறிஞர்கள் நன்கு விளக்கிச் சென்றுள்ளனர். உலகம் வாழத்தான் வாழ வேண்டும் என்ற அடிப்படையிலேயே அச் செந்நெறி அமைக்கப்பட்டுள்ளது. நாடெங்கும்வாழக்கேடொன்றும் இல்லை என்ற செம்மை மொழிப்படியே வாழப் பழகுபவன் மனிதன். 'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியா' உள்ளமே அப் பண்பட்ட மனித உள்ளம். ஆம் அவ்வுள்ளம் உற்றறிந்து மேற்கொண்டு ஒழுகவேண்டிய பண்புகள் பல. அவற்றுள் அடக்கமும் ஒழுக்கமும் தலை சிறந்தனவாகும்.

திருக்குறள் காலங்கடந்த நூல். சாதி சமய வேறுபாடுகளை எல்லாம் தாண்டி எல்லோரையும் ஒன்று படுத்தும் ஒப்பற்ற தனித் தமிழ்ப் பெருநூல். இன்று அந்நூல் உலக மக்கள் அனைவரும் அறிந்து போற்றக் கூடிய ஒரு பெரு நூலாகிவிட்டது. அப் பெருநூலில் மக்கள் வாழ்வின் முப்பொருள்களான அறம் பொருள் இன்பம் பேசப்படுகின்றன. அறத்தாறு பொருளீட்டி

பின் இன்பந் துய்த்து வாழ்தலே வாழ்வின் பயன் என்பதை அந்நூல் தெள்ளத் தெளிய விளக்குகின்றது. உலகில் வாழும் உயிரினம் அனைத்துமே ஒன்றையொன்று தழுவி வாழ்தலே சாலச் சிறந்த தென்பதை அந்நூல் எடுத்துக் காட்டுகின்றது. எல்லாரும் இன்புற்றிருக்க நினைக்கும் அப்பெருவாழ்விற்கு வழிகாட்டியாக விளங்குவது அறநெறி. அறநெறியின் பாகுபாடுகளையும் அவற்றின் நெறிகளையும் அறத்துப்பாலில் தெள்ளத் தெளியக் காட்டுகின்றார் ஆசிரியர் வள்ளுவனார். அவற்றுள் அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை என்பன இரு பிரிவுகளாகும்.

வாழ்க்கையை ஒழுங்கு படுத்த வேண்டுவது மக்கள் கடமையாகும். வாழ்வாங்கு வையத்து வாழும் வகை யறிதல் தான் சிறந்ததாகும். 'ஏதோ பிறந்தோம், பிறந்ததற்காக வாழ்கின்றோம், இறக்கும் வரையில் வாழ்வோம்' என்று வேதாந்தம் பேசுவார் ஒரு புறமும், அழியுந் தன்மை மறந்து என்றும் வாழ்வதாக எண்ணி அனைத்தையும் அடக்கியாளத் திட்டமிட வழி காணுவோர் ஒரு புறமும் நிறைந்துள்ள உலகத்தில் வாழ்வாங்குவாழ்தல் அரிதுதான். எனினும் அவ்வாழ்வாங்கு வாழும் நெறியையும் வள்ளுவனார் பல அதிகாரங்களான் பாகு படுத்திக் கூறுகின்றார். அவற்றுள் அவன் மேற்கொள்ள வேண்டிய ஒழுக்க நெறியை உணர்த்துவதே 'ஒழுக்கமுடைமை'யாகும். அவ்வொழுக்கம் தவறு நெறிக்குத் தன்னடக்கம் மிக இன்றியமையாததாகும். இதை விளக்குவதே 'அடக்கமுடைமை'யாம்.

ஆசிரியர் வள்ளுவனார் இவ்வடக்கத்தையும் ஒழுக்கத்தையும் அடுத்தடுத்த அதிகாரங்களான் எடுத்துக்

காட்டுகின்றார். பிறரை அடக்கியாள விரும்பும் உலகத்வர் தம்மை அடக்கியாளப் பழகிக் கொள்ள வில்லை என்பது கண்கூடு. தான் மற்றவரை அடக்கி ஆளவதினும் தனக்குத்தானே அடங்கிவாழ வேண்டுமென்று அறிபவர் மிகக் குறைவே. தான் அடங்குதலாவது என்ன? மன உணர்வு பெறுதலே! மக்கள் உள்ளத்தே பல நல்லெண்ணங்களும் தீய எண்ணங்களும் தோன்றுதல் இயல்பேயாகும். நலக் கேடுகள் நிறைந்த இவ்வுலகில் இரண்டையும் காணவும் கேட்கவும்—ஏன்—அவற்றின் வழிச் சாரவும் மனிதனுக்குப் பல வகைகளில் வாய்ப்பும் வழியும் நேர்வது உண்டு. அக்காலத்து ஆய்ந்து பார்த்து முடிவு செய்யும் நல் உணர்வே அடக்கம் எனப்படும். மனம் போன போக்கெல்லாம் போகாது, மிருக உணர்ச்சியிலகப்பட்டு நிலைகெடாது—மனித உணர்வோடு தன்னடக்கம் பெற்று நன்மை நிலைகளின் நடுநின்று மனிதனை வாழ வேண்டுதலே நமது கடமையும். அவ்வடக்கம் முதலில் மன உணர்வில் அரும்ப வேண்டும். பின் சொல்வழியும் தொடர்ந்து செயல் வழியும் அமைய வேண்டும் இவற்றையெல்லாம் எண்ணிய தேவர் திருவள்ளுவனார் முதலில் ஐம்புல அடக்கத்தை வற்புறுத்தி

'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப்புடைத்து' என்று எடுத்துக் காட்டுகின்றார். ஆம். தன் ஐந்துறுப்புக்களையும் அடக்கி அமைந்து அந்நியர் கொடுமைகளுக் கெல்லாம் சலியாது தன் செயல் வழி சிறக்கும் அந்த ஆமையின் நிலை நமக்கு எடுத்துக்காட்டப் படுகிறது. ஐந்தடங்கிய ஆமை ஓட்டின்மேல் அடி விழுந்தாலும் அது அல்

லல் உறாது. அது போன்று மெய் வாய் கண் மூக்கு செவி என்ற ஐம்புலன்களையும் அடக்கியவர் மேல் எத்தகைய பழிச் சொற்கள் விழினும் அவர்களை அவை ஒன்றும் செய்யமாட்டா. ஆனால் அதே வேளையில் ஒருவர் தாம் ஐம்புல அடக்கமும் ஆக்கமும் பெற்றதற்காகத் தருக்கித் தம் நிலையிறந்து கூடா ஒழுக்கம் கொள்வாராயின் கொண்ட அந்த நிலையிலேயே அழிவினைப் பெறுவர். ஆமை ஐம்புலனையும் அடக்கி தன் நிலை தடுமாறி கீழ்மேலாக ஒரு புரள விழுமேல் அதன் கீழ்ப்பகுதியை யாரும் அடித்து எளிதில் கொல்ல இயலுமன்றோ! ஆகவே ஐம்புல அடக்கத்தோடு, தம் நிலையிற்றிரியாதவரே நெடு நீர் வைப்பின் நீடித்த உயர்ந்த புகழைப் பெற உரியராவர். இதையே வள்ளுவனார்,

'நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது' என்று பேசுகின்றார். தாம் பெறும் இன்பதுன்ப அலைகளால் மோதுண்டு மாளாது, அவற்றை யேற்று உள உரம் பெற்று அவ்வுரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காக்கும் உரவோனை மலையின் உச்சிக்கு ஒப்பிட்டுப் பல புலவர்கள் கூறியுள்ளார்கள். வள்ளுவர் அவ்வுள உரம் பெற்ற தன்னடக்கமிக்கவரை மலையினும் மாணப் பெரியோராகக் காட்டுகின்றார். ஆங்கில கவிஞராகிய 'கோல்டுஸ்மித்' என்பார் இவ்வாறு உலக இன்ப துன்பியல்களுக்குள்ளடங்கி, உள்ளத்தை அப்பால் செலுத்தி அம்மன உரத்தால் மங்காத பெரும் புகழ் பெற்ற அறிஞரை மலை உச்சிக்கு ஒப்பப் போற்றும் அடிகள் அறிந்து மகிழத்தக்கனவாம். இதோ அவர்தம் அடிகள்:

His ready smile a parent's warmth exprest
Their welfare pleases him, and their cares distrest
To them his heart, his love, his griefs were given
But all his serious thoughts had rest in heaven.
As some tall cliff, that lifts its awful form
Swells from the vale, and midway leaves the storm
Tho' round its breast the rolling clouds are spread
Eternal sun shine settles on its head!'

எனவே தனக்கென வாழாப் பிறர்க்குரியாளரா யிருந்து, மனவடக்கமும் ஐம்புல ஒடுக்கமும், நாமுதலிய உறுப்புக்களின் நல்லடக்கமும் பொதுவிலே மனிதப் பண்பாட்டில் தலை சிறந்ததாகும். இந்த அடக்கம் பிற ஒழுக்கங்கள் அனைத்தையும் தரவல்லது என்பதை உணர்ந்தே ஆசிரியர் திருவள்ளுவனார் 'அடக்க முடைமை'யை அடுத்து 'ஒழுக்க முடைமை'யை அமைத்துள்ளார் போலும்.

அடக்கம் ஒழுக்கத்தின் அடிப்படை. ஒழுக்கம் வாழ்வின் ஒளி. ஒழுக்கத்தின் முன் ஒன்றும் நிற்காது. பிறந்த நாடும் குலமும் பிறவும் ஒழுக்கம் இழந்தால் வழி அழிந்தகல்வனவே யாகும். எனவே குடிப்பிறப்பும், பிற செயல்களும் இலராயினும் ஒழுக்க நெறி நின்றார் உயர்ந்தோர் எனப்படுவர். வள்ளுவரின் இவ்வொழுக்க முடைமையைப் பற்றிக் கூறுங்கால் அவ்வொழுக்கத்தால் உண்டாகும் நலன்களையும் அஃதற்றக்கால் உண்டாகும் கேடுகளையும் முதல் எட்டுக் குறட்பாக்களிலும் கூறி இறுதி இரண்டு பாட்டுக்களிலே ஒழுக்கம் என்பது என்ன என்று காட்டுகின்றார். பிற அதிகாரங்களிலும் ஒழுக வேண்டிய நல்லாற்றினை நன்கு விளக்கியு

ஆசிரியர் ஈண்டு அவ்வொழுக்க நலத்தையும் யாற்றுத் தீமையையும் நன்கு காட்டி இறுதியில் அவ்வொழுக்கத்தையும் விளக்குகிறார்.

ஒழுக்கம் என்பது ஏதோ ஒரு நெறியை வகுத்துக் கொண்டு, அதன் வழியே ஒழுகுதல் என்ற அளவில் முடிந்து விடாதது. அடக்க முடைமை எவ்வாறு மன மொழி மெய் என்ற மூவிடத்தும் பொருந்தி அனைத்தையும் அடக்கிதன்னிலையில் மேம்பட்டு நிற்றலில் முடிகின்றதோ அதைப் போன்றே ஒழுக்கமும் அம்மூவிடத்தும் செறிந்துள்ளது. அவ்வொழுக்கத்தின் அடிப்படை மறந்தும் மற்றவர்களுக்குத் தீங்கு செய்யா திருத்தல்; மனத்தாலும், சொல்லாலும, செயலாலும் வரும் குற்றங்களினின்று நீங்கி ஒழுகுதலே அடக்க மும் ஒழுக்கமும் ஆகும். இக்கருத்தைத்தான் ஆசிரியர் திருவள்ளுவர்

'யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு' என்று அடக்க முடைமையினும்

'ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயால் சொலல்' என்று ஒழுக்க முடைமையினும் காட்டுகின்றார். ஆம் இச் சொல் வழி வரும் குற்றத்தைச் சுட்டி யிடைநிலைப் படுத்திப் பிற மனத்தாலும் செயலாலும் வரும் குற்றங்களையும் ஒதுக் குகிறார் அவர். எனவே ஒழுக்க மென்பது மறந்தும் மற்றவர்களுக்கு எவ்வகையினும் ஏதம் விளையாதிருத் தலே யாகும்.

இவ்வொழுக்கத்தை உயிரினும் ஓம்ப வேண்டும் என்று கூறுவார் வள்ளுவனார். ஆம் ஒழுக்கம் வழுக்க

லாயின், உயிர் வாழ்தலிற் பயன் இல்லை என்பது உண்மைதானே. ஏதோ வாழ்ந்தோம் என்று உயிர் வைத்துக் கொண்டு பிறர் பழித்துரைக்க வாழ்வதினும், ஒழுக்கந் தவறாது வாழ்ந்து உயிர் விட்டார் என்ற உயர்வு உலகம் உள்ள மட்டும் புகழைத் தேடித் தருவதாகுமே. அவ்வாறு நிலையிற் றிரியாது அடங்கி ஒழுகிய செந்தண்மை பூண்ட அந்தணரே இன்று உலகம் செல்லும் செம்மை நெறியைக் காட்டிய நல்லோராய்த் திகழ்கின்றனர். வள்ளுவரும் ஏசுவும் காந்தியும் பிற பெரியோர்களும் அவ்வந்தணர் வரிசையில் வைத்து எண்ணப்படுவோராவர். அவர்கள் உயிரினும் பெரிதாக ஒழுக்கத்தை ஓம்பினர்கள். எனவே இறந்தும் வாழ்கின்றனர். இதை எண்ணித்தான் திருவள்ளுவர்

'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்'

என்று வரையறுத்துள்ளார். இனி இறுதியாக அவர்,

'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும்
கல்லார் அறிவிலாதார்' என்ற குறளில் மக்கள்

ஒழுக வேண்டிய நெறியினை ஒருவாறு உணர்த்திக் காட்டுகின்றார். அறிவினை விளக்க வந்த ஆசிரியர் வள்ளுவனார் 'எவ்வது உறைவது உலகம்உலகத்தோடுஅவ்வது உறைவது அறிவு' எனக் காட்டு முகத்தான் உலகம் செல்லும் நெறியில் தாமும் சென்று, அந் நெறியில் சிறிதும் வழுவாது இருந்து ஒழுக்க நிலையை உயர வேண்டும் என்று வலியுறுத்துகிறார். 'உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்துள் அலகையாய் வைக்கப்படும்' என்ற, அவர் வாக்கும் இது பற்றித்

தான் எழுந்ததோ என்று எண்ணவேண்டியுள்ளது. 'உலகம் எங்கோ தவறிச் செல்லுகின்றது. நான் தனியாளாக வாழ்வேன். இவ்வுலகம் பொல்லாதது. நான் நல்லவனாகையால் தனித்து வாழ்வேன்' என்று கூறிக்கொண்டு பிறரைப் பழித்துத் தான் மட்டும் ஒதுங்கி வாழ்ந்து தானும் கெட்டு உலகையும் கெடுப்பர் ஒரு சிலர். ஆனால் இயேசுவும் முகம்மதுவும் வள்ளுவரும் காந்தியும் இராமலிங்கரும் மக்களிடை மக்களோடு கலந்து வாழ்ந்து அவர்தம் சுகதுக்கங்களில் பங்குகொண்டு அவர்தம் மனம் திருப்பத் தாமே வழி காட்டியாக ஒழுக்க சீலராய் முன்னின்று வாழ்ந்தனர். ஆனால் உலகம் அத்தகைய பெருநெறியைப் பின்பற்ற முடியாமையால் வழுக்கி வீழ்ந்து பல கொடுமைகளை இழைத்தது-எனினும் அவர்கள் வாழ்கின்றனர். எனவே உலகத்தோடு ஒட்டஒழுகி அவர்வழி நின்று பின் தவறிய உலகைத் திருப்புதல்தான் உலக அறிஞர்களும் சமயத் தலைவர்களும் கண்ட உண்மையென்பது புலனாகின்றது. அவ்வாறு உலகத்தோடு ஒட்ட ஒழுகாது, தான் எவ்வளவு நன்கு கற்றவனாயினும் பயனில்லை என்பார்.

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்' என்று காட்டுகின்றார்.

இக்குறளுக்கு மணக்குடவர் 'அறிவில்லாதார் பல நூல்களைக் கற்றாலும், உயர்ந்தாரோடு பொருந்த ஒழுகுதலை அறியார்' என்று பொருள் உரைக்கின்றார். அவர் கருத்து கல்வியினும் ஒழுக்கம் சிறந்ததாகும் என்பதும் ஆம். நுண்ணிய நூல் பல கற்று 'பல கற்றோம் யாம்' என்ற தருக்கில் தலைநிமிர்ந்தாலும் வாழ்வாங்கு வாழ

வேண்டிய ஒழுக்க மற்றவன் ஒன்றுக்கும் உதவாக் கேடன் என்பது அவர்தம் கருத்தாகும்.

இனி சிலர் உலகம் என்பது உயர்ந்தோரைக் குறிக்கும் என்றும் அவ்வுயர்ந்தோர் வாழும் வாழ்க்கை அறிந்து அதன்படி ஒழுகுதலே பிற கற்பதினும் சிறந்தது என்றும் கூறுவர். அவர்கள் 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்ற தொல்காப்பியர் தம் நல்லடியை மேற்கோளாகக் காட்டுவர். இவ்வுரையும் சாலச் சிறந்ததுதான். வழிவழி உயர்ந்தோர் வாழ்ந்து காட்டிய செம்மை நெறி பிறழாது அவர்தம் அடிபற்றி ஒழுக்க சீலனாக வாழ்தல் சாலவும் நலம் பயப்பதுதான். வள்ளுவர் நூல்வழிக்காணின் மக்கள் வாழ்வே தன்னை ஒறுத்து மற்றவர்களுக்கு உதவி செய்தலில்தான் சென்று முடியும். உயர்ந்தோர் யாவரும் அந்நெறியினைப் பற்றி வாழ்ந்ததாகவே அறிகின்றோம். எனவே உலக மக்களோடு மக்களாக ஒன்றியிருந்து, அவர்கள் வாழ்கின்ற வாழ்க்கை வழியையே தாமும் பின்பற்றி ஏழைகட்கு ஏழையாய்—இல்லார்க்கு இல்லாராய் இருந்து அந்தக் கூட்டு வாழ்வில் அவ்வுலகமக்களுக்கு அறிவையும் அறநெறியையும் உணர்த்துவதே சிறந்த நல்லொழுக்கமாகும். வழுக்கி வீழ்ந்தாரைத் திருத்தி வாழவைத்தலே உயர்ந்தாரின் கடமையாகும். 'நோயாளிக்கு வைத்தியன் வேண்டுவதுபோல், துன்பநெறி நின்றார் கரையேற வழிகாட்டியாக ஒழுக்க சீலர் அமையவேண்டும். ஆகவே தான் உலகத்தோடு கலந்து ஒழுகும் சிறப்பினை ஒழுக்கம் என்று உணர்த்துகின்றார் ஆசிரியர் வள்ளுவர். ஆம்-அவ்வாறு உலகிலே மற்றவரோடு வாழ்ந்து, தன்னிலை கெடாது, உணர்ச்சிகளுக்கு அசையாது உயர்ந்த மலை

போன்று மன்னிநின்று, அதே வேளையில் அவ்வுலக மக்களது நலக்கேடுகளில் பங்குகொண்டு அவர்களுக்கு உதவுதலே சிறந்த நல்லொழுக்கமாகும். தாம் அடங்கி அந் நல்லொழுக்க நெறிநின்றாரால்தான் இன்றுவரை உலகம் இலங்குகின்றது. ‘தான் கெடினும் தக்கார் கேடெண்ணு’ நெறியே உலகை உய்விக்கின்றது. அத்தகைய அடக்கமும் ஒழுக்கமும் மக்கள் அனைவரிடமும் மலரின் உலகமே ஒரு இன்பச் சோலையாகத் திகழும். மக்கள் எல்லா வேறுபாடும் அற்றவர்களாக அச்சோலை மலர்களில் தேனுண்ணும் வண்டுகளாக இன்பம் துய்த்துத் தூயராய் வாழ்வார். அந்நாள் விரைந்து வருவதாக!

10258

# "வள்ளுவர் கூறும் உழவர் குடி"

**திருமந்திரமணி - துடிசைகிழார் - அ. சிதம்பரனார்**

## திருக்குறள்—பொருட்பால்

திருவள்ளுவர் **உழவர் குடியைப்** பற்றிப் பொருட்பாலில் (தென்மொழி அரசியல் நூல்) எடுத்த எடுப்பிலேயே "**படை, குடி, கூழ், அமைச்சு, நட்பரண் ஆறும், உடையான் அரசருள் ஏறு**" என்று கூறுவாராயினர். திருவள்ளுவர் நூலானது சிறப்பாகத் தமிழருக்கும், பொதுவாக உலகத்தார்க்கும் பாடப்பட்டது ஒன்றாகும். **ஈண்டு குடி என்றது, மக்களை.**

திருவள்ளுவர் பொருட்பாலை **ஏழு** இயல்களாகப் பிரித்துக்கொண்டு, எழுபது அதிகாரங்களில் பாடி முடித்துள்ளார். இதனை,

"அரசியல் ஐயைந்து, அமைச்சியல் ஈரைந்து
உருவல் லரணிரண்டு ஒன்றொண்கூழ்—இருவியல்
திண்படை நட்புப் பதினேழ் **குடிபதின்மூன்(று)**
என் **பொருள் ஏழாம் இவை**"

என்ற திருவள்ளுவமாலையில் உள்ள **போக்கியார்** என்னும் புலவர் பாட்டால் அறியலாம். படையும், குடியும், (மக்களும்), கூழும் (நாடும்), அமைச்சும், நட்பும், அரணும் ஆகிய உறுப்புகள் ஆறையும் உடைய அரசன் மன்னரில் சிறப்புடையோன், ஏற்றம் உடையவன் என்று கூறி, **குடியை** அரசனுடைய உறுப்புகளில் ஒன்று என்று **விளக்கம் தந்துள்ளார்.**

**குடி** என்பது "நாடும், ஊரும், இல்லும், குடியும், பிறப்பும், சிறப்பும்" (தொல்—கள—112) எனப்பட்ட இல்லோடும், ஊரோடும், நாட்டோடும், அரசோடும் தொடர்புடையது. அக் **குடி** என்னும் உறுப்புப்பற்றி 12 அதிகாரங்களில் உடன்பாடாகவும் ஒரு அதிகாரத்தில் (13-வது அதிகாரம்) எதிர்மறையாகவும் கூறி **நெடுமாறன் வள்ளுவனார்** விளக்கியுள்ளார். குடி என்பது நாட்டுக் குடிமக்களை உணர்த்தும் ஒரு **இயற்பெயர்** ஆகும்.

வடமொழி அரசியல் பொருள்நூல்களுள் **குடி** என்ற அங்கம் கிடையாது. ஆதலின், அப் பொருள் நூல்களை அடிப்படையாக்கொண்ட வடநாட்டு அரசுகள் எல்லாம் **குடி** இல்லா அரசு என்று கூறப்படும். குடியை அங்கமாகக் கொள்ளாத அரசு எது போன்றது என்றால், சீர் இல்லாப் பாட்டும், சிறுவர் இல்லாப் பள்ளியும், நீர் இல்லா ஏரியும், நிறைமீன் இல்லா வானமும் போன்றதே யாகும்.

குடியை அங்கமாகக் கொள்ளாத வடமொழி பொருள் நூற்களுக்கு இணங்க உரை வகுப்பான் புகுந்த பரிமேலழகர், "ஈண்டுக் **குடி** என்றது அதனை உடைய நாட்டினை; **கூழ்** என்றது அதற்கு ஏதுவாய பொருளை" என்று குறிப்புக்காட்டி அக்குறிப்புக்கு இணங்க உரை வகுத்துள்ளார். (**Vide** 381-வது குறள் உரை). அவர் தம் உரைக்குத் தகுந்தாப்போல் வள்ளுவர்வகுத்த ஏழு இயல்களை மூன்று இயல்களாகச் சுருக்கி, **அரசியல்-அங்கவியல்—ஒழிபு இயல்** எனப் பெயர் கொடுப்பர். இப் பாகுபாட்டிற்கு ஆதாரம் யாண்டும் காணேம். பரிமேலழகருக்கு முற்பட்ட **போக்கியார்** என்னும் புலவர் நெடுமாறன் வள்ளுவர் வகுத்த இயல்கள் இன்னின்ன என்று

பாடி இருக்க, அது தெரிந்தும் பரிமேலழகர் அப்பாகு பாட்டினைக் கொள்ளாமல் தம் விரும்பம் போல் இயல்களைச் சுருக்கி வேறு பெயர் கொடுத்திருப்பது வெள்ளிடை மலை. அரசனுக்குச் சிறந்த உறுப்பாகிய **குடியை** ஒழிபு இயல்பு எனக் கூறி, அந்த இயலில் கூறாமல் ஒழித்துவிட்டார். இது இவர் குறளுக்கு உரை வகுக்காமல், தம் உரைக்கு குறளை வகுத்துக் கொண்டார் என ஏற்படுகிறது.

தற்காலம், மேல் நாடுகளில் உள்ள அரசியல் நூல்கள் **நாடு** (**State**) **என்பதை முதலாகக்கொண்டு**, அதற்கு அங்கமாக நிலவரைப்பு (**Territory**), குடிமக்கள் (**Population**), அரசியல் (**Government**), கோன்மை (**Sovereignty**), ஒற்றுமை (**Union**) எனச் சிலவற்றை எடுத்துக்கொண்டு அரசியலை விவகரிக்கும்.

வடமொழி நூற்களிற் சில **அரசியலை** (**Government**) **முதலாகக்கொண்டு** அதற்கு அங்கமாக சுவாமி (அரசன்), அமாத்தியன் (அமைச்சன்), சுகிருத்து (நட்பு), கோசம் (பொருள்), இராட்டிரம் (நாடு), துர்க்கம் (அரண்), பலம் (படை) இந்த ஏழையும் உறுப்பாகக் கொண்டு அரசியலை விவகரிக்கும். (**The King, the minister, the country, the fort, the treasury, the army and the friend, are the character of sovereignty**). இங்கே **குடியை** அங்கமாகக் கூறப்படாததை நோக்குக.

திருக்குறள் ஆசிரியராகிய நெடுமாறன் வள்ளுவனார் பல மொழிகள்—பல நூல்கள் பயின்றவர். உலக அநுபவம் கைவரப் பெற்றவர். அவர் "**பனுவற் றுணிபு**" என்று 21-வது குறளிலும், "**நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை**" என்று 322-வது குறளிலும், "**உலகத்து**

**ஏப்பால் நூலோர்க்கும் துணிபு"** என்று 533-வது குறளிலும் கூறுவதைக் கொண்டு அறியலாம். ஆதலால், குறள் ஆசிரியர் வடமொழி நூற் கருத்துக்களை அறியாதவர் அல்ல. இன்னும் உலகத்தில் உள்ள வேற்று நாட்டுப் பொருள் நூற் கருத்துக்களையும் தெரியாதவர் அல்ல. தெரிந்துதான் தமிழ் நாட்டு நடவடிக்கைக்கு ஒப்ப, **அரசனை முதலாகக் கொண்டு** அவனுக்கு உறுப்பாக படை—குடி (மக்கள்) — கூழ் (நாடு) — அமைச்சு — நட்பு—அரண்—ஆறையும் கூறினர்.

தென்னாட்டில் ஆண்ட சேர—சோழ — பாண்டிய அரசர்கள் படைப்புக் காலம் தொட்டு மேம்பட்டு வரும் பழங்குடியிற் சேர்ந்தவர்கள். பரம்பரை பரம்பரையாக அரசச் செல்வத்தை தொடர்ச்சியாகப் பெற்றவர்கள். (Vide பரிமேலழகர் உரை for வழங்குவது உள் வீழ்ந்தக் கண்ணும் 955-வது குறள்) அரச பரம்பரை கள் தமிழ் நாட்டில் படைப்புக் காலந்தொட்டு கி. பி. 1947 வரைக்கும் நீடித்து இருந்தன என்பதனை யாவரும் அறிவர். சரித்திரமும் அதுவே.

ஆனல் வடநாட்டிலோ அரசர்கள் நிலையாக இல்லை. வேற்று நாட்டார் தாக்குதலினல் எத்தனையோ பரம் பரைகள் மாறி மாறி வந்துள்ளன. உதாரணமாக;— இக்குவாகு — கவுரவர் — பாண்டவர் — சிசுநாகர் — நந்தர்—மவுரியர் — சாதவாகனர் — சுங்கர் — சேதி — கண்ணுவர் — குஷான்—சாகர் — குப்தர்—வாகடகர் — சளுக்கியர்—கால சூரியர் — இராட்டிரர் — உயுத்தர் — பரிகரர் முதலிய எத்தனையோ பரம்பரைகளும், பாரசிகர் — கிரேக்கர் — அராபியர் — ஊணர் முதலிய பரம்பரைகளும் வந்து வந்து போயின. அதனல் வட

மொழிப் பொருள் நூல்கள் **அரசனை முதலாகக் கொள்ள வில்லை.** எந்தப் பரம்பரை அரசனாக இருந்தாலும், அரசியல் மாத்திரம் நடந்து வந்தபடியால் **அரசியலை முத லாகக் கொண்டு** அதற்குமேலே கூறப்பட்ட ஏழு உறுப்பு களில் **அரசனையும் உறுப்பாக அமைத்து** நூற்கள் வரையப் பட்டன.

வடநாட்டில் அரசர்கள் நிலையில்லாமல் மாறி மாறி வந்தபடியால் உள் நாட்டுக் குழப்பங்களால், குடிகளும் ஒரு நாட்டில் நிலைத்திருக்க முடியாமல் அடிக்கடி ஊரை விட்டு ஊர் போய் குடியேறி நிலையில்லாமல் வாழ்ந்து வந்தார்கள். இப்போது பாகிஸ்தானில் உள்ள தமிழ்க் குடிகள் நிலையின்றி நாட்டுக்கு நாடு குடியேறித் தவிப் பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம் அல்லவா? அதனாலேதான் வடமொழிப் பொருள் நூல்கள் **குடிகளை** (இராஷ்ஜிய) அரசியல் உறுப்பாகக் கொள்ளாமல், அரசனை அரசியல் உறுப்பாகக் கொண்டன.

தென்னிந்தியாவிலோ **வள்ளுவர் காலத்தில்** சேர — சோழ — பாண்டிய அரசுகள் நிலைத்து இருந்தன. குடிகளும் பதிளெழுவறியா (இடம்பெயர்ந்து அறியா) பழங்குடி மக்களாக வாழ்ந்து வந்தார்கள்....அதனாலே தான் நெடுமாறன் வள்ளுவனார் **அரசனை உறுப்பியாகவும் குடிகளை உறுப்பாகவும் கொண்டு** நூல் எழுதினார். வட நாட்டில் அரசு நிலையற்று வந்ததைக் கண்டவரான படியால், தமிழ் நாட்டில் சேர—சோழ—பாண்டிய அரசுகள் என்றும் நிலை பெற எண்ணியே வள்ளுவர் பொருட் பாலில் அரசனை முதல்வனாகக் கொண்டு, குடி யையும் அங்கமாகக்கொண்டு நூல் யாத்தார்.

வள்ளுவர் எந்தக் கருத்தைக் கொண்டு நூல் வகுத்தாரோ அந்தக் கருத்தை மனதிற் கொண்டு அந்நூலுக்கு உரை வகுக்க வேண்டுமே யொழிய வேறு விதமாக உரை செய்வது கூடாது. திருக்குறளுக்கு உரை வகுத்த பத்துப் பேர்களில் வள்ளுவர் வகுத்த பாகுபாட்டை மாற்றுமலும், அவர் கருத்துக்கு இணங்கவும் உரை வகுத்தவர் **பருதியார்** என்பவர் ஒருவரே. (இவர் தருமபுரம் உரை வளப் பதிப்பில் காட்டப்பட்ட பரிதியார் அல்ல) இவர் உரை இன்னும் அச்சுவாகனம் ஏறவில்லை. ஆனுல், வள்ளுவர் காலத்துக்குப் பிறகு, அவர் கொண்ட கருத்து முற்றுப் பெறவில்லை. அதற்கு மாருக நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன.

வடநாட்டிலிருந்து தென்னுட்டிற்கு குடிகள் எண்ணுயிரவர்—ஆறுயிரவர்—நாலாயிரவர் — மூவாயிரவர்— இரண்டாயிரவர் என்று கூட்டம் கூட்டமாக வந்து குடியேறினுர்கள். அதனையொட்டி சளுக்கியர்—இராட்டிர கூடர் — களப்பிரர் முதலியோர் படை எடுப்பும், மகமதியர் படையெடுப்பும், போர்த்துக் கேசியர்—டச்சுக் காரர் — டேன்ஸ்காரர் — பிரஞ்சுக்காரர் — ஆங்கிலர் படையெடுப்புக்களும் ஏற்பட்டன. அன்னியர் கலப்பால் — தொடர்பால் ஆதிக்கத்தால் — ஆட்சியால் தமிழர் அரசியல் நிலைகுலைந்தது, ஒழிந்தது. தமிழர்க்குத் தமிழ் நாட்டிலேயே இடமில்லாமல், நேடால்— சிங்கப்பூர் — ஃபிஜி — மலேயா முதலிய இடங்களுக்கு குடிபோக நேர்ந்தது.

இத்தகைய நிலை தமிழ் நாட்டுக்கு ஏற்பட்டது எதனுல் என்றுல், வள்ளுவர் வகுத்த பொருள் நூலை படிக்காததனுலும், அவர் குடி இயலில் கூறும் அறி

வுரைகளைப் படித்து உணராததாலும், பிறநாட்டுப் பொருள் நூல்களைப் படித்தவர்களின் சொல்லில் மோகங்கொண்டு அதன்படி ஒழுகியதாலும் ஏற்பட்டதேயாகும். பிறநாட்டுப் பொருள் நூல்களைப் படித்து நம் நாட்டுப் பொருள் நூலோடு ஒப்பிட்டுப் பார்த்து உண்மையுணர வேண்டும். இரண்டையும் படிக்காமல் பிறர் சொல்லும் வார்த்தையைக் கேட்டு நடந்ததின் தீமையை நாம் இப்போது பார்க்கிறோம்.

வள்ளுவர் நூலின் சிறப்பே அவர் **குடியை** அரசியல் உறுப்பாகக் கொண்டதேயாம். குடிமை முதல் கயமை ஈறாக அதிகாரங்கள் பதின்மூன்றும், சிறப்பாகத் தமிழர் நலத்துக்கும், பொதுவாக உலகர் நலத்துக்கும் ஏற்ற நற்செய்திகளைத் தெரிவிப்பன. அந்தந்த நாட்டுக்குரிய பழங்குடிகளின் உரிமையையும் நலத்தையும் காப்பன. கடமைகளை விரிப்பன.

இனிமேலாவது, திருக்குறளைப்படிக்கும் தமிழர்கள் வள்ளுவர் பொருட்பாலில் குடியியலில் கூறும் கருத்துக்களை மனதிற் கொண்டு, அன்னியர் ஆட்சியும் ஆதிக்கமும் ஒழிந்து சுய அரசு பெற்ற இந்நாளில் முன்னேறுவார்கள் என்று எண்ணுகின்றேன்.

## குடி இயலில் விளக்கி உள்ளவை

* "உழவர்களாகிய உள்நாட்டுப் பழங்குடிகளைப் பற்றியும், அரசன் தன் குடிகளை எப்படி ஓம்புதல் வேண்டும் என்பது பற்றியும், குடிப் பிறந்தார் குடியை எப்படி ஓம்புதல் வேண்டும் என்பது பற்றியும், துரைத்தனத்திற்கும் குடித்தனத்துக்கும் இடையே நிலவ வேண்டிய தகைமைகளைப் பற்றியும், குடியானவர்

* திருக்குறள் திறவு-பக்கம் 21

களுடைய பண்பாடுகள் பற்றியும், பிறப்பு உரிமைகள் பற்றியும், முன்னேற்றம் பற்றியும், குடிமக்களாகக் கொள்ளுதற்கு தகுதி அற்ற கயவர்கள் யார் என்பது பற்றியும் பதின்மூன்று அதிகாரங்களில் வள்ளுவர் விளக்கியுள்ளார். இவை வடமொழிப் பொருள் நூற்களில் காணவும் கருதவும் முடியாத செய்திகள். குடிமைக்கு வேண்டிய பண்பாடுகளில் **நிலைத்து வாழ்வதும் உழைத்து உண்பதும்** முதன்மையானவை. குடித்தனம் என்பதே "பதி எழுவறியாப் பண்பாடே" யாகும் (சிலம்பு)"

"நாடும் ஊரும் இல்லும் குடியும்
பிறப்பும் சிறப்பும் இறப்ப நோக்கி
அவன் வயின் தோன்றிய கிளவியொடு தொகைஇ
அனைநிலை வகையால் வரைதல் வேண்டினும்
..............................தோழிமேன (தொல்-கள-112)

இத் தொல்காப்பிய சூத்திரத்தின் கருத்தை ஒருவன் நோக்கின் திருமணப் பேச்சுக்கு இடையே தோழி நாடு—ஊர்—இல்—குடி முதலிய வற்றைப் பற்றித் தலைவனோடு பேசுவாள் எனத் தெரிகிறது. இதில் நாடும், ஊரும், இல்லும், குடியும் என்றதால் நாம் அறிவதென்னை? நாட்டுக்கு உட்பட்டது ஊர்; ஊருக்கு உட்பட்டது இல்; இல்லின்கண் பிறந்து இல்லோடும், ஊரோடும், நாட்டோடும் உரிமையும் தொடர்பும் கொண்டவர்கள் **குடிகள்** என்று அறியலாம். அன்றியும், குடிகளின் வாழ்வுக்கு இடமாவது இல்—இத்தகைய இல்லங்கள் பல கொண்டது ஊர்—ஊர் பல கொண்டது நாடு. குடி இல்லையேல் இல் இல்லை இல் இல்லையேல் ஊர் இல்லை; ஊர் இல்லையேல் நாடு

இல்லை; நாடு இல்லையேல் அரசன் இல்லை, அரசன் இல்லையேல் ஆட்சியும் இல்லை; எனவே, அளப் படும் நாட்டோடும், ஊரோடும், பிரியாத் தொடர்பு உடைய வர்கள் இற்பிறந்தார், குடிப்பிறந்தார், பழங்குடி, வாய்மைக்குடி எனப்படும் குடிமக்கள்". இவ்வுண்மை களை சங்க இலக்கியங்களாகிய பட்டினப்பாலை—மது ரைக்காஞ்சி முதலிய நூல்களில் காணலாம்.

பழந்தமிழ் நாடாகிய சோழநாட்டில் வளவனார் காலத்தில் இல்லங்கள் எப்படி இருந்தன என்று பட்டினப்பாலை கூறுவதைப் பார்ப்போம். (பட்டினப் பாலை அடிகள் 4—28). "நெல்விளையும் கழனிகள்; கழனிகள் நடுவே தோட்டம்; தோட்டத்தில் வாழை, தென்னை, கமுகு, இஞ்சி, மஞ்சள். தோட்டத்தின் **நடுவே இல்லம்**" இவ்வில்லிற்கு உரியவர்களும் இவரைச் சார்ந்த வர்களுமே **குடிகள்**. இப்படிப் பல குடிகளின் இல்லங் கள் சேர்ந்தது ஊர்; இந்த ஊர் பல கொண்டது நாடு; நாட்டை ஆள்பவன் அரசன்; ஆகையால் அர சோடும், நாட்டோடும், ஊரோடும், இல்லோடும் இணைப் புண்டு பிரியாத் தொடர்பு உடையவர்களாக நிலைத்து வாழ்ந்து, தோட்டத்தையும் வயலையும் உழுது, உழு வித்து, வெட்டிக் கொத்தி, வளம் படுத்தியும், **நாட் டுக்குப் பயன்படும் தொழில்** பல இயற்றியும், இயற்று வித்தும் பொருள் ஈட்டி, காத்தும், வகுத்தும் உண்டு வாழ்வோரே இற்பிறந்தார், குடிப்பிறந்தார் ஆவார். இக்குடிகள் தொழில் இயற்றுவதற்கும், ஈட்டுவதற்கும், காப்பதற்கும், காத்தவற்றை வகுப்பதற்கும் நல்ல சட்ட திட்டங்களை உடையதே அரசு. இந்த மாதிரி யான குடிகளைக் குறித்தே "தம் இல் இருந்து தமது

பாத்துண்டற்றால் அம்மா அரிவை முயக்கு" (1107) என்னும் குறளும் எழுந்தது. இம்மாதிரி குடிகள் அல்லாத **விட்டேறிகளும்** இந்நாட்டுக்கு **வந்தேறிகளும்** ஆகிய நாடோடிக் கூட்டங்கள் **குடிகள்** ஆகார். அப்படிப் பட்டவர்களைத்தான் வள்ளுவர் '**கயமை**" என்ற அதிகாரத்தில் குறிப்பிட்டு உள்ளார். அவர்களைப் பற்றி அவ்வதிகாரத்தில் கூறியது அவர்களைச் சீர்திருத்தவே யாகும்."

"இத்தகைய மக்கள் தமிழ் நாட்டுப் பழங்குடி மக்கள் ஆவார்கள். குடித்தனத்தார் என்று தம்மைக் கூறிக் கொள்வதில் பூரிப்பு அடைவார்கள்; பெரும் பாலும் உழவர்கள்; சிறு பான்மை உழுவித்து உண் போர்கள். இல்லாண்மையும், ஊராண்மையும், நாட் டாண்மையும், அரசாண்மையும், தாளாண்மையும், வேளாண்மையும் முதலாம் பண்பாட்டு இயல்புகளை யும், மேம்பாடுகளையும், ஒப்புரவுகளையும் அறிந்தோ அறியாமலோ வழி வழி கடைப்பிடித்து ஒழுகுபவர் கள். மன்னனை இறைவனாகக் கருதுபவர்கள். இவர்கட்கு இந்நாட்டில் இருக்கும் கைம்முதல் தாங்கள் இந்நாட்டுப் பழங்குடிகள், இந்நாடு தங்களுடையது என்பதால் கிடைக்கும் மகிழ்வும், உரிமையும், மதிப்பும் தான். இதனால்தான் இவர்கள் பயன் பெற முடியும், முன்னேற முடியும், வறுமையிலும் தலை நிமிர்ந்து வாழ முடியும். இவர்கள் இரவார்; இரப்போர்க்கு ஈவார். இங்ஙனம் மானமும், மதிப்பும், சான்றாண்மையும் உடைய இவர்கள் குடிமையைப் புறக்கணிக்க மாட் டார்கள். செப்பம், நாண், ஒழுக்கம், வாய்மை, நகை, ஈகை, இன்சொல், இகழாமை முதலிய குணங்களை

உடையவர்கள். குன்றுப செய்யார்; சலம்பற்றிச் சார்பில் செய்யார்."

## உழவு

இவர்கள் செய்யும் தொழிலாகிய உழவே சிறந்ததென்று வள்ளுவர் "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால் உழந்தும் **உழவே தலை**" என்று கூறியுள்ளார். அதனால், வள்ளுவருக்கு ஏனைய தொழில்கள் எல்லாம் **அதன் பின்சார நன்று** என்பதே கருத்து ஆகும்.

## உழவர்களின் வகை

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் பிறர் எல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்"

என்ற குறளை நோக்கின்

வள்ளுவர் **உழவர்களை** ஒருவகையாகவும், ஏனையோரை ஒருவகையாகவும், ஆக உலக மக்களை **இருவகையாகப் பிரித்துள்ளார்.**

உழவர்கள் யார் யார் என்பதனை ஆராய்வோம்:—

(1) தம் சொந்த நிலத்தைத் தாமே உழுது பயிரிட்டு உண்டு வாழ்பவர் ஒருவகை.

(2) சொந்த நிலம் இல்லாதவர்கள் வேறு தொழில் செய்யும் நிலச் சொந்தக்காரரிடம் நிலத்தை வாரம்—குத்தகைக்குப் பிடித்து, உழுது, பயிரிட்டு உண்டு வாழ்பவர் இன்னொருவகை.

(3) சொந்த நிலம் இல்லாதவர்கள் நிலச் சொந்தக்காரர் மேற் பார்வையில் நெற் கூலிக்கோ பணக் கூலிக்கோ உழுது பயிரிட்டு, அக்கூலி

பெற்று உண்டு வாழ்பவர்கள் பிரிதொரு வகை.

இம்மூன்று வகையில் முதலாமவர் உழுதுண்டு வாழ்வார் ஆவார். 2—3ல் சொல்லப்பட்ட வாரம் குத்தகைக்கு பிடித்து உழுபவரும், கூலிக்கு உழு பவரும் உழுது உண்போரிலேயே சேர்வர். எப்படி என்றால் அவர்கள் உண்மையிலேயே உழுதுதான் வாழ்கின்றார்கள். மேலும் அவர்களுக்கு ஊரில் வீடு வாசல், மனைவி, மக்கள் சொந்தமாக உண்டு. ஆதலி னால் வள்ளுவர் சொந்த நிலத்தைத் தானே உழுதுண்டு வாழ்பவர்களையும், பிறர் நிலத்தைக் குத்தகைக்கோ, வாரத்துக்கோ, கூலிக்கோ பிடித்து உழுபவர்களையும் **“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்”** என்று **பொதுப்படக்கூறி ஒரே வகையில் அடக்குவர்.**

2-வது, 3-வது பிரிவில் கூறப்பட்ட நிலத்துக்குச் சொந்தக்காரர்கள் எவ்வகையில் அடங்குவர் என்றால், அவர்கள் **‘உழுவித்து உண்போர்’** என்னப்பட்டு **உழுதுண் போர் வகையிலே அடங்குவர்.**

1032-வது குறளின் உரையில் பரிமேலழகர் “காடு கொன்று நாடாக்கிக் குளந்தொட்டு” (பட்டினப்பாலை) என்றாற் போல **‘உழுவார்’** என்றது **‘உழுவிப்பார்’** மேலும் செல்லும் என்று கூறுவதை நோக்குமின்.

‘அரசன் கோயில் கட்டினான்’ என்றால் **கட்டுவித் தான்** என்பதே பொருளாகும். ஆதலால், “உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்” என்றது உழுவித்துண்டு வாழ்ப வரையும் குறிக்கும். மேலும்,

“செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்”

என்ற குறளை நோக்கின், உழுவித் துண்போர் குத்தகைக்கோ, வாரத்துக்கோ, கூலிக்கோ நிலத்தை விட்டு விட்டு அடிக்கடி சென்று மேற்பார்வை இடாது போனால் நிலமானது விளைவு குன்றும் என்று கூறியிருப்பதும் உழுவித் துண்போரை மனத்திற் கொண்டுதான் குறளை வள்ளுவர் இயற்றியுள்ளார் என்று தெரிகிறது.

ஆதலின், எந்த வகையிலோ நிலத்தை உழுபவர்களும், நிலத்துக்கு உரிமையாளராகிய உழுவித் துண்போர்களும் நாட்டுக்கு உட்பட்ட **குடிகள்** ஆவார்கள். அவர்களை 'உலகத்தார்க்கு ஆணி' போன்றவர்கள்.

## 18 தொழிலாளர்

இனி, உழுதற்றொழிலைத் தவிர்த்து வேறு தொழிலை உடையவர்கள் (உதாரணமாக—படைத்தொழில—தச்சர்—கருமார்—கன்னார்—தட்டார் முதலிய 18 தொழில்கள்) உலகத்திற்கு முக்கியமாய் வேண்டியவர்கள் அல்லவா? அவர்கள் எல்லாம் **குடிகள்** இல்லையா? என்று கேட்கலாம்.

அவர்களும் உழவர்களைப் போல முக்கியமானவர்களே. **உழவு** என்ற சொல் **உழை**(உழைத்தல்) என்ற பகுதியடியாகப் பிறந்த சொல். ஆதலால், **உழைப்பினால்** ஏற்படும் எல்லாத் தொழில்களையும் **உழவு** என்ற சொல் குறிக்கும். அதனால், வள்ளுவர் உழவு என்ற அதிகாரத்திலேயே,

"இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்" (1035)

என்று கூறித் தொழிலாளர்கள் எல்லாரையும் குறித்துள்ளார். 'உழவு' என்ற அதிகாரத்தில் உள்ள

10 குறள்களில், 8 குறள்களில் நிலத்தைப் பண் படுத்தும் உழவு என்ற சொல்லைப் பயன் படுத்தியவர் இரண்டு குறள்களில் வேறு விதமாகக் கூறியுள்ளதை நோக்கின் வெளியாம். 'உழவு' என்ற அதிகாரத்தில் இருப்பதால் **"கை செய்தூண் மாலையவர்"** என்பதற்கு 'தம்கையால் **உழுதுண்டலை** இயல்பாக உடையவர்' என்று பொருள் கொண்டுள்ளார்கள் உரையாசிரியர்கள் பலர். அதனைச் சிறப்பாகக் கொண்டாலும், பொதுவாக **"தம் கையால் பல தொழில்களைச் செய்து உண்டு வாழ்பவர்"** என்றும் பொருள் கொள்ளும்படி வள்ளுவர் பாடி இருப்பது அவருடைய கருத்து இன்னதென வெளியாக்குகிறது. **பருதியார்** என்பவர் தம்முடைய உரையில் 18 தொழில்களையும் குறிக்கும் என விளக்கந் தந்துள்ளார்.

ஆதலின், வள்ளுவர் எல்லாத் தொழிலாளர்களையும் **குடியியலில்** அடக்கியுள்ளமை தெளிவு.

ஒரு தொழிலும் செய்யாமல், மக்களை ஏமாற்றி, சோம்பேறி வாழ்க்கை நடத்துகிற விட்டேறி, வந்தேறிகளைத்தான் வள்ளுவர் **'கயமை'** அதிகாரத்தில் வைத்துக் கூறி அவர்களைத் திருத்த முயல்வர்.

## படை

அரசன் இத்தகைய குடிமக்களில் இருந்தே அமைச்சுக்கும், சேனைத் தலைமைக்கும், ஒற்றுக்கும், தூதுக்கும், அரசியல் அலுவல்களுக்கும், ஆலோசனைக்கும் எனத் தகுந்தவர்களைப் பொறுக்கி எடுத்து நியமனம் செய்வான். அப்பேர்ப்பட்டவர்களே அரசனுக்கு உறுதுணையாக இருந்து, பகை அரசர்களிடம் சண்டையிட்டு, வெற்றி பெற்று, நாட்டின் நிலப்பரப்பையும், அரசன் புகழையும் பெருக்குவர். இதனை,

"பலகுடை நீழலும் தங்குடைக் கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்". (1034)

என்ற குறளில் வள்ளுவர் விளக்கியுள்ளார். மேலே கூறப்பட்ட அரசியல் அதிகாரிகளாகிய அமைச்சர்—சேனைத்தலைவர்—ஒற்றர்—தூதுவர் முதலிய எல்லோரையும் வள்ளுவர் "**அலகுடை நீழலவர்**" என்கிறார். அலகு—நெற்கதிர். நெற்கதிரின் நீழலின் இருப்பவர் என்றால், அவர்களுக்கும் சொந்தமாக நிலம் உண்டு என்று தெரிகிறது. எப்படி எனின், அக்காலத்தில் தொழிலாளர்களுக்கு எல்லாம் மானிய நிலங்கள் உண்டு. அதனால், அவர்கள் எல்லாம் '**உழுவித்து உண்போர்**' வகையில் சேர்ந்த குடிகள் ஆகிறார்கள் என்று ஏற்படுகிறது.

## புலவர்

இனி, வள்ளுவர் இன்னொருவகை உழவரைப் பற்றிப் பொருட்பால் 'பகைத்திறம் தெரிதல்' என்ற அதிகாரத்தில் கூறுகிறார். அது,

"வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
**சொல்லேர் உழவர்** பகை" (872)

வில்லேர் உழவரைப் பற்றி மேலே கூறினேம். சொல்லேர் உழவராகிய **புலவர்களையும்** வள்ளுவர் **உழவர்** என்கிறார். ஏனெனின், ஐம்புலன்களாகிய புலத்தை உழுது, அறிவைப் பெருக்கி, மக்களுக்கு இன்பம் விளைவிப்பவர்கள் ஆதலின் என்க. புலவர்களில் நிலம் உடையவர்களும் இல்லாதவர்களும் உண்டு. ஆனால் வீடு—வாசல்—மனைவி—மக்கள் உண்டு. நிலம் உடையவர்கள் 'உழுவித்துண்போர்' வகையில் சேர்வார்கள். நிலம் இல்லாத

வர்கள் ஐம்புலத்தை உழுவதால் அவர்களும் **உழவர்களே** என்பது வள்ளுவர் கருத்து என்பது 872-வது குறளால் வெளியாகிறது. இதுகாறும் கூறியவாற்றால் "வள்ளுவர் கூறும் உழவர் வகை மூன்று" எனப் பாகு படுத்தலாம்.

அவையாவன:—

1). உழுதுண்போர்.

2). உழுவித்துண்போர்.

3). சொல்லேர் உழவர்.

(**உழவர்குடி—முற்றும்**)

# தெரிந்து தெளிதல்

**வித்துவான். N. சுப்பு ரெட்டியார், M. A., B. Sc., L. T.**

வையத்தார் உள்ளுவ வெல்லாம் ஓர்ந்து அளந்த பெருமை திருவள்ளுவர்க்குத் தான் உண்டு. குறள் வடிவங் கொண்ட திருமால் புறவுலகை யெல்லாம் ஈரடியால் அளந்தது போல, அகவுலகை யெல்லாம்—மக்கள் கருத்துலகை—வள்ளுவப் பெருந்தகை தம் குறள் வெண்பா வடியால் அளந்து விட்டார். இவ்வாறு பரந்த பொருளெல்லாம் பாரறிய சுருங்கிய சொல்லால் எழுதப்பட்ட நூல் திருக்குறள். வையத்தினரை வாழ்விப்பதற்காக, அவர்களை வாழ்வாங்கு வாழ வழி வகுத்துக் காட்டுவதற்காக, வள்ளுவர் அருளியது இந்நூல். இந்நூலின் பெருமையை மதுரைத் தமிழ்நாகனார் என்ற புலவர்,

எல்லாப் பொருளும் இதன்பால் உள;இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லை

என்று பாராட்டி யிருக்கிறார். திருவள்ளுவர் கூறும் உண்மைப் பொருள் எந்நாட்டினர்க்கும் எக்காலத்தினர்க்கும் பொருந்துவதா யிருக்கிறது. நூல் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் எழுதப் பட்டிருப்பினும், அது நாம் வாழுங் காலத்திற்கு வந்து வழிகாட்டும்படியாக அமைந்துள்ளது. காலப்போக்கால் மாறுபடாமல் என்றும் சிறப்பாக ஒளி வீசக்கூடிய அரிய மணிகள் நூல் முழுவதும் பரவிக் கிடக்கின்றன.

'தெரிந்து தெளிதல்' என்பது திருக்குறளில் அரசியலைக் கூறும் அரியதோர் பகுதி. நாட்டுத் தலைவன்

தான் மேற்கொள்ளும் கடமைகளைச் செவ்வனே ஆற்றுவான் வேண்டி தனக்குத் துணையாக நியமித்துக் கொள்ளும் அமைச்சர் முதலாயினோரை பிறப்பு, குணம், அறிவு என்பனவற்றையும் காட்சி, கருத்து, ஆகமம், என்னும் அளவைகளால் ஆராய்ந்து தெளிய வேண்டும் என்பதைப் பத்துக் குறள்களாற் கூறுவது. அரசனுக்குக் கூறும் அறவுரையாக இருப்பினும், எல்லாரும் தம் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய பொருளுரையாகவே இருக்கின்றது இப்பகுதி. இன்றைய உலக அமைப்பில் அரசியலிலிருந்து ஒருவரும் விலகி வாழ முடியாது. அரசியலில் வெளிப்படையாக நேர்ப் பொறுப்பு ஏற்று நடத்துவோர் ஒரு சிலரேயாயினும் ஏனையோர்க்கு மறைமுகப் பொறுப்பு உண்டு. வீட்டு வாழ்க்கையும் நாட்டு வாழ்க்கையும் ஒன்றையொன்று பிணைத்து நிற்கிறது என்பதை இன்றைய அரசியல், பொருளியல், வாணிக இயல் முதலியவற்றை ஆராய்வார்க்குப் புலனாகாமற் போகாது. குடியாட்சியாக இருப்பினும் சரி, கோனாட்சியாக இருப்பினும் சரி, வள்ளுவர் கூறும் அரசியற் கருத்துக்கள் இரண்டிற்கும் பொருந்துவனவாகவே உள்ளன. குடியாட்சியில் அரசன் (நாட்டுத் தலைவன்) மக்களால் தேர்ந்து எடுக்கப் படுகிறவனாக இருக்கிறான்; முதல் அமைச்சனும் அப்படித்தான். குடியரசில் முதல் அமைச்சன்தான் அரசியல் காரியங்களுக்குப் பெரும் பொறுப்பாளியாக இருப்பவன்; ஏனைய அமைச்சர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பினையுமுடையவன். அமைச்சர்களைத் தேர்ந்தெடுக்கும் முதலமைச்சருக்கும், வினைக்குழுவினர்களைத் தேர்ந்தெடுக்கும் பல்வேறு அரசியல் துறைத் தலைவர்கட்கும் (**Heads of Departments**) 'தெரிந்து தெளிதல்' என்னும் பகுதி

பல வௌவேறு கூறும் கருத்துக்கள் இன்றியமையாதன வாகவுள. இதுபற்றியே 'அரசியல் அலுவல்களைத் தேர்ந்தெடுக்கும் கழகத்தில் (**Public Service Commission**) ஒவ்வொரு துறைத் தலைவரும் உறுப்பினராக (**Ex-officio-member**) இருக்கிறார்.

எந்தத் தலைவரும் எல்லாக் கடமைகளையும் தானே நேரில் செய்ய வேண்டும் என்பது இயலாத தொன்று. அதற்காகப் பலரைத் தனக்குத் துணையாக அமைத்துக் கொள்ள வேண்டும். பண்டை இலக்கியங்கள் இவர்களை ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்று பகுத்துப் பேசும். இளங்கோவடிகள் ஐம் பெருங் குழுவை 'அரசொடு பட்ட ஐம்பெருங்குழு' என்று சிறப்பிப்பர். இவர்களை நியமனம் செய்வதற்கு முன் இவர்களை நன்கு ஆராய்ந்து தெளிதல் வேண்டும். ஒருவனை ஆராயுங்கால் அவனைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியவை யாவை? வள்ளுவர் கருத்துப்படி, நான்கு துறைகளில் அவனைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும். அவனுக்கு அறத்தில் நம்பிக்கையும் உறுதியும் உண்டா? பொருள் அவன் மனத்தை மாற்றவல்லதா? கையூட்டுப் பெறல் (**Bribery**) முதலிய தகாத வழிகளில் பொருளை விரும்பி ஏற்கக் கூடியவனா? இன்பவாழ்வை விழைந்து அதில் ஆழ்ந்து கடமைகளை மறப்பவனா? தன் உயிரை வெல்லமெனக் கருதி நெருக்கடியான நிலையில் பொறுப்புக்களைக் கை விடக் கூடியவனா? என்பன வற்றையெல்லாம் நன்கு ஆராயவேண்டும். இவ்வாறு அறம், பொருள், இன்பம், உயிரச்சம் ஆகிய நான்கு வகையாலும் ஆராய்ந்து தெளிந்தபிறகே அவனைத் துணையாகக் கொள்ள வேண்டும் என்பதை,

அறம் பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறம் தெரிந்து தேறப் படும்.

என்று வள்ளுவர் வகுத்தோதுகிறார்.

வள்ளுவர் உயர்குடியில் பிறந்தவர்கள் பெரும்பாலும் குற்றமற்றவர்களாக இருப்பர் என்று கருதுகிறார். செப்பமும் நாணும் உயர்குடிப் பிறந்தார்க் கண்ணல்லது பிறரிடம் காணப்படா என்றும், ஒழுக்கம், வாய்மை, நாண் ஆகிய மூன்றிலும் குடிப்பிறந்தார் தம்மையும் அறியாது தவறார் என்றும் கூறுகிறார். யாராயினும் ஒருவர் தவறி நடப்பாராயின் அவர் குலத்தின் கண் ஐயப்பட வேண்டும் என்பது வள்ளுவர் கூறும் வாய்மொழி. இதனால்தான் அரசியல் வினைஞர்களைத் தேர்ந்தெடுக்கும் விண்ணப்பங்களில் சாதி, குலம் (**Nationality, birth**) போன்ற குறிப்புக்களையும் விண்ணப்பதாரரின் முன்னோர் உறவினர் யாவரேனும் அரசியல் வினைஞராகப் பணியாற்றினரா என்ற விவரங்களையும் குறிப்பிடும்படி வினைஞர்களைத் தேர்ந்தெடுக்கும் குழு (**Public Service Commission**) வற்புறுத்துகிறது போலும் என்று கருதவேண்டியிருக்கிறது.

குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு

என்று கூறுகிறார் வள்ளுவர். குடி என்றது உயர்ந்த குடியை. வருணம் பற்றி வருவதன்று இது. வழி வழி உயர்ந்தவர்கள் தோன்றிய மரபு என்று கூறின் பொருந்தும். குற்றங்களாவன: செருக்கு, சினம், சிறுமை, இவறல், மானம், மாணுவகை, மடி, மறப்பு, பிழைப்பு என்றவை. நாண் என்பது இழி தொழில்களில் மனஞ்

செலவாமை. 'நாணுவது—செயத்தகாதவற்றின் கண் உள்ளம் ஒடுங்குதல்' என்பர் நச்சினார்க்கினியர். உயர்ந்த குடியிற் பிறந்து குற்றமற்று 'நமக்கு வடு வருங்கொல்' என்று அஞ்சா நிற்கும் அறிஞர்களைப் பார்த்து அரசன் தெரிய வேண்டும் என்பது வள்ளுவர் கருத்து. குடியரசில் அரசன் இல்லை. அங்கு முதலமைச்சனைத் தேர்ந்தெடுக்கும் கட்சியும், ஏனைய அமைச்சர்களைத் தேர்ந்தெடுக்கும் முதலமைச்சனும் இவ்வாறு தெரிய வேண்டும்.

நல்லவர்களாக மட்டிலும் இருந்தால் அரசியற் கருமங்கள் நடைபெற முடியுமா? வல்லவர்களாகவும் அவர்கள் இருக்கவேண்டும். வல்லவர்களாக இருப்பதற்கு அடிப்படையானது அறிவு. இவ்வறிவை ஆராயுங்கால் ஓர் உண்மையை நினைவில் இருத்த வேண்டும்.

> 'வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல் கறையான்
> தேன் சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால்'

என்றபடி எல்லாம் அறிந்தவரும் இல்லை; ஏதும் அறியாதவரும் இல்லை. சிறந்த அறிஞனிடமும் சிறிது அறியாமை இருப்பதில் வியப்படைய வேண்டியதில்லை.

> அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்
> இன்மை அரிதே வெளிறு

என்று கூறுகிறார் வள்ளுவர். இந்த உண்மை தெரிந்து ஒருவரை ஆராயத் தொடங்குதல் வேண்டும். இவ்வாறு ஆராயுங்கால் வெறுப்பினால் ஒருவரை ஒன்றுந் தெரியாதவர் என்று ஒதுக்குவதோ அன்பினால் ஒருவரை எல்லாம் அறிந்தவர் என்று கொள்வதோ தவறு என்பதனை வள்ளுவர் நன்கு விளக்குகிறார்.

காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாம் தரும்

என்பர் வள்ளுவர். அன்புடைமை காரணமாக ஒரு வரு டைய அறியாமையைக் காணாது தேர்ந்தெடுத்தால் அரச னுக்கு அறியாமையின் விளைவெல்லாம் வந்து சேரும். அவனும் அறிஞர்களால் பழித்துப் பேசப்படுவான். 'ஒன்றும் அறியாதவன்—பேதை' என்ற பட்டமும் அவனுக்கு எளிதில் கிட்டும்.

ஒருவருடைய அறிவுப் பகுதியை மட்டிலும் ஆராய்ந்தால் போதாது. நாட்டின் பொதுப் பொறுப் பேற்று நடத்தும் அமைச்சன் நற்குணம் நிறைந்தவனாக, குணசீலனாக, இருத்தல் வேண்டும். ஒழுக்கத்தை உயிரை விடச் சிறந்ததாகக் கருதும் இயல்புடையவனாக இருத்தல் வேண்டும். இவ்வுலகில் தோன்றிய மக்களை ஆராயுங்கால் முழுதும் நல்ல குணங்களே நிறைந்து குற்றமே சிறிதும் இல்லாதாரைக் காண்டல் அரிது. அதுபோலவே குற் றமே நிறைந்து குணம் சிறிதேனும் இல்லாதாரைக் காணவும் முடியாது. எல்லோரிடமும் குணமும் குற்றமும் கலந்தே இருப்பதுதான் உலக இயற்கை. 'முத்திலும் சொத்தை உண்டு; பவழத்திலும் பழுதுண்டு' என்பது பழமொழியல்லவா? ஒருவரை ஆராயும்போது அவரிட முள்ள குணம் குற்றங்களை எடைபோட்டு ஆராய்ந்து குணம் மிகுதியாக இருந்தால் அதனைக் கொள்ள வேண் டும்; குற்றம் மிகுந்திருந்தால் அதனைத் தள்ள வேண்டும்.

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்

என்பது வள்ளுவர் காட்டும் வழி. இன்றைய உலகில் நாட்டில் பல்வேறு கொள்கைகளின் விளைவாகக் கட்சி

கள் தோன்றி இவ்வாராய்ச்சியைக் கெடுத்து வருகின்றனர். பெரும்பாலும் கட்சிக் கொள்கையையே முக்கியமெனக் கொண்டு பாமரர் முதல் அறிஞர் வரை தம்முடைய தலைவரிடையேயோ அல்லது தலைவராகத் தேர்ந்தெடுக்கப் படவேண்டியவர்களிடையேயோ குணத்தையே கண்டு குற்றத்தைக் காண முனைவதில்லை. எதிர்க்கட்சியார் குணத்தையே மறந்து குற்றத்தையே காணுகின்றனர். இதனால் வீரவழிபாடு (**Hero worship**) மலிந்து உண்மைகாண வழியின்றி எத்துறையிலும் திரையிடப் பெற்றிருப்பதைக் கண்கூடாகக் காணலாம். ஒரு சிலர் ஒருவரைப் போற்றினால், வேண்டுமென்றே வேறு ஒரு சிலர் அவரைத் தூற்றுகின்றனர்; ஒரு சாரார் குறைத்துப் பேசும் ஒருவரை மற்றொருசாரார் உயர்த்திப் பேசுகின்றனர். சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அவர்களின் அமைச்சரவையைக் குறித்தும், ஆந்திரத் தலைநகர் அமைக்கும் செயல் குறித்தும் அறிஞர் உலகமும் பத்திரிகை உலகமும் பேசியும் எழுதியும் வருவதிலிருந்து மக்களிடம் இவ்வாராய்ச்சி மனப்பான்மை தவறான வழியில் விலகிச் செல்வதைக் காணலாம். ஒருவரிடம் குற்றமும் இருக்கும், குணமும் இருக்கும்; இரண்டையும் ஆராய்ந்து மிக்குள்ளதைக் கணக்குக்கு எடுத்துக் கொண்டு அதற்கேற்றபடி செயலாற்ற வேண்டும் என்ற உண்மையை உணர்ந்தால் எத்தகைய குழப்பமும் எதிலும் எவரிடத்திலும் எழக்காரணமே இல்லை.

இவ்வாறு குற்றத்தையோ குணத்தையோ ஆய்வதற்கு வழி யாது? வள்ளுவரே அதற்கு வழியும் கூறுகிறார். மக்களுடைய பெருமை சிறுமைகளை அவரவர்

செயல்களே தெளிவாக அறிவிக்கும் என்பது அறிஞர் கண்ட உண்மை. அகத்தின் அழகு முகத்தில் காட்டுவது போல, மக்களின் மனப்பான்மை அவர்களுடைய செயல்களில் எதிரொலிக்கும்; செயல்தான் அவர்களுடைய உட்கிடக்கையை, உள்ளத்திலிருப்பதை, வெளியில் காட்டும் அளவு கருவி; பொன்னின் சேதாரத்தை உணர்த்தும் உரைகல் போல மாந்தரின் இதயபாவத்தை உணர்த்துவது அவருடைய செயல். இவ்வுண்மையை வள்ளுவர்,

> பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
> கருமமே கட்டளைக் கல்

என்று கூறுகிறார். இக்கருத்தையே கம்பனும் அரசியல் ஞானியாகிய தாரையின் வாய்மொழியாக,

> தருமம் பற்றிய தக்க வர்க்கெலாம்
> கருமம் கட்டளை என்றல் கட்டதோ

என்று கூறியிருத்தல் இவ்விடத்தில் கருதற்பாலது. உண்மையான மக்களாட்சியில் பொறுப் பேற்று அரசியலை இயக்கியவர்களின் செயல்களை ஆராய்வது அடுத்துவரும் தேர்தல் சுமார் இரண்டாண்டிற்கு முன் நடைபெற்ற தேர்தல் அதற்கு முன்னர் இருந்த அமைச்சர் அவையின் தரத்தை ஓரளவு அளந்து விட்டது என்னும் கூற்றை எவரும் மறுக்க முடியாது. பொறுப்பிலிருப்பவர் சிறிய தவறு செய்தாலும் மக்கள் கண்ணுக்கு அது பெரிய வடிவில் தோற்றமளிக்கும். திறமையும் நேர்மையும் உள்ளவர்தாம் அரசியல் பொறுப்பை—எவ்விதப் பொதுக் காரியத்தையும்—ஏற்று நடத்தத் தகுதி யுள்ளவர்கள்.

இவ்வாறு ஆராயாது அரசன் அறிவிலார் மேல் வினையை வைப்பின் அது தன் காலத்திலும் தன் வழி முறையிலும் தீராத துன்பத்தைத் தரும் என்று வள்ளுவர் கூறுகிறார். எக்கட்சி பதவிக்கு வரினும் போகினும் நிலையாக இருந்து அரசு வண்டியை இழுத்துச் செல்லும் வினைக் குழுவினரை, பொறுப்பான இடத்தில் அமர்ந்து செயலாற்றும் பெரிய அதிகாரிகளை, தேர்ந்தெடுக்கும் போது மிக மிக விழிப்பாக இருத்தல் வேண்டும். இவர்களைச் சரியாகத் தேர்ந்து எடுத்து விட்டால் அண்மையில் செய்தித் தாளில் வெளி வந்த கையூட்டுப் பெறுதல் (**Bribery**) போன்ற தகாத முறையில் பொருளீட்டிய குற்றங்கள் ஏற்படா.

> இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
> அதனை அவன் கண் விடல்.

என்ற உண்மையை அறிந்து பொறுப்புக்கள் கொடுக்கப் பெற்றால் எதுவும் சரியாக நடைபெறும். காமக்களிப்பால் அறிவு மழுங்கிய காலத்தில் அமைச்சர் பலரும், குறிப்பாக நிமித்திகன் என்ற அமைச்சனும்,

> 'உலந்தரு தோளி ணய்! நீ
> ஒருவன் மேல் கொற்றம் வைப்பின்
> நிலந்திரு நீங்கும்'

என்று கூறி கட்டியங்காரனிடம் ஆட்சிப் பொறுப்பை விட வேண்டாம் என்று தெருட்டியும், அதனைக் கேளாத சச்சந்தன்,

> 'எனக்குயிர் என்னப் பட்டான்
> என்னலால் பிறரை யில்லான்;

என்று கூறும் வள்ளுவர் வாய்மொழியை நன்கு உணர்ந்திருந்தால் இம்மாதிரியான நிலை ஏற்பட்டிராது. தெளிவதின் எல்லை ஆராயும் வரையில் தான்; அதற்கு மேல் கொண்டு செல்வது கூடாது என்பது ஆசிரியர் கருத்து. இக்குறளுக்கு உரை கண்ட பரிமேலழகரும் "வினை வைத்த பின் ஒரு தவறு காணாது வைத்து ஐயுறுமாயின், அதனை அவன் அறிந்து 'இனி இது நில்லாது' என்னும் கருத்தான் அவ்வினையை நெகிழ்ந்து விடும்; அதுவேயன்றிப் பகைவரால் எளிதில் பிரிக்கவும் படும். ஆகலான், தெளிந்தான் கண் ஐயுறவும் ஆகாதாயிற்று" என்று கூறியிருப்பதை இன்று பெருமகன் சென்னை தலைமை யமைச்சன் விஷயத்தில் தலையிடுபவர் எண்ணிப் பார்த்தல் சாலப் பயன் தரும். வள்ளுவர் நூலை ஏட்டுச் சுரைக்காய் என்று எண்ணாது வாழ்க்கையை நெறிப்பட வாழ வழிகாட்டும் நூலாகக் கொண்டால் இவ்வுலகம் உய்யும்; நாமும் உய்வோம். திருக்குறள் அறத்தினை உணர்வார்க்கு ஒரு பேரற நூல்; அரசியலை அறிய விரும்புவார்க்கு ஒரு அரசியல் நூல்; ஞானத்தை விரும்புவார்க்கு ஒரு ஞான நூல்; பேரின்பம் விரும்புவார்க்கு ஒரு பேரின்ப நூல் என்ற உண்மைகளை அறிந்து அதனைக் கற்று அதன்படி நிற்க முனைதல் வேண்டும்.

# அருளுடைமை

**சதாசிவம் அமிர்தாம்பிகை**

“சுவர் இருந்தாலல்லவா சித்திரம் எழுதலாம்” என்ற பழமொழி எங்கள் காதில் பலமுறையும் அடி படுகிறது. சித்திர வேலைப்பாட்டில் கைதேர்ந்தவர்களாக இருக்கலாம். பல பல விதமான நிறப்பூச்சுக்கள் எங்களிடம் இருக்கலாம். அந்நிறங்களைப் பூசுவதற்கு மிகவும் நுட்பமான கருவி இருக்கலாம். ஆனால் அதை எழுதுவதற்கு ஏன் கடுதாசி இல்லையா? ஓலை இல்லையா? என்று அடுக்கிக் கொண்டு போகலாம். ஆனால் தங்கள் ஓவியக் கலையை பழந்தனமாக தமிழ் மக்களுக்கு நிரந்தரமாகக் கொடுக்கக் கருதினர். அழியாத பொருளில் தீட்ட எண்ணினர்கள். கல் அழியாத ஆதாரமல்லவா? அதனாற்றான் “இளமையிற் கல்வி சிலையில் எழுத்து” என்ற பழமொழிகள் எழுந்தன. சித்திரக் கலையை நிலைத்த ஆதாரமாகிய கல்லில் எழுதிய தமிழ் மக்கள், இல்வாழ்க்கையின் மாண்பை அன்பாகிய சார்பில் வரைந்தார்கள். துறவற தெய்வீகத்தை அருளாகிய மாமேருமலையில் உருவாக்கினர்கள்.

‘அருள்’ என்ற சொல் சங்கவிலக்கியத்தில் நன்றாக ஆளப்பட்டது. பரிபாடல் முருகவேளை பின் வருமாறு வேண்டுகிறது:

“யாமிரப்பவை பொருளும் பொன்னும்
போகமு அல்ல, நின் பால்
அருளும் அன்பும் அறமும் மூன்றும்
உருளிணர்க்கடம்பின் ஒலிதாரோயே”

இறைவன் அடியார்களிடத்தில் அருள் காட்டவேண்டும். தொண்டர்களுக்கும் இறைவனை வணங்க அன்பு வேண்டும். அன்பு தொடர்புடையாரிடத்து காட்டப்படும் பற்று. அருள், தொடர்பில்லாமல், பகைவன், நண்பன் என்று பாராமல், எல்லோரிடத்தும் பரந்து செல்லும் கருணை அல்லது இரக்கம். இந்தப் பெருங்குணம் இறைவனிடத்தில் உண்டு. இறைவன் தன்மையை அடையும் துறவிகளுக்கும் இது தான் அவசியம். இந்த அருளாகிய சுவரிலேதான் வாய்மை, கள்ளாமை, இன்னா செய்யாமை முதலிய தெய்வ சித்திரங்களை எழுதலாம். அன்பு தடித்துத் தடித்து அருளாகக் கனிகிறது. இதனைத்தான் வள்ளுவரும் "அன்பீனும் அருளென்னும் குழவி" என்றார்.

நிலையாமை, கொல்லாமை, வெகுளாமை, கள்ளாமை, புலால் மறுத்தல் எனத் துறவிகளுக்கு வேண்டிய பெருங் குணங்களை எதிர்மறை முகத்தால் கூறி வந்த வள்ளுவர், அருளைப்பற்றிச் சொல்லுமிடத்து அருளுடைமை என்று உடன்பாட்டு நெறியால் கூறும் நுட்பம் வியக்கத்தக்கது.

பெரும் தன்மை என்றால் ஏதோ மற்றவர்களுக்கு வாரி வாரிக் கொடுப்பது என்று நினைக்கிறோம். அப்படி யொன்றுமல்ல. பொய் சொல்லாமல், மற்றவர்களுக்குத் துன்பம் செய்யாமல், அவர்களுடைய பொருளைக் களவெடாமல் இருந்தால் அதுவே சிறந்த துறவறம் என்று வள்ளுவப் பெருந்தகை கருதினார் போலும். "நன்று செய்தல் ஆற்றீராயினும் அன்று செய்தல் ஒப்புமின்" என்று முழங்குகிறது சங்கவிலக்கியம்.

அப்படியிருக்க அருளுடையவனாதல் வேண்டும் என்று விதந்து ஓதியது எதற்கு? மனிதனிடத்தில் காணப்படும் சுயநலம் இயற்கை அமைப்பு.

இந்த உலகில் பல்லாயிரங்கோடி உயிரினங்கள் வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றன. இந்நிலையில் மனிதனும் தன்னைப் பாதுகாத்தால்தான் வாழலாம். இல்லாவிட்டால் தாழவேண்டும். தற்பாது காப்பிற்காக மனிதனிடத்தில் தன்னலம் இருக்கிறது. ஆனால் இந்தத் தன்னலம் அயலார் நலத்தைப் பாதிக்கப்படாது. அயலார் நலத்தைத் தாக்கும் பொழுது தான் பொய் பேசிக் களவெடுத்துப் பிறருக்கு இன்னா செய்ய வேண்டும் நிலை ஏற்படுகிறது. மனிதனுக்கு மற்றவுயிர்களிடத்தில் அருள் அதாவது இரக்கம் இருக்குமேயானால் அவர்களுக்கு இன்னா செய்யவோ, அவர்களின் பொருளைக் களவெடுக்கவோ மனம் வராது; ஆதலால் எல்லாச் சிறந்த குணங்களுக்கும் அருள் தான் தாயகம். பெரும்பாலும் மனிதன் அதனை உடையவனாதல் வேண்டும் என்று அழுத்தம் திருத்தமாகக் கூறிய மகிமைதான் என்னே!

"அருட் செல்வம் செல்வத்துட் செல்வம்" என அருளைச் செல்வம் எனக் குறித்து, அதுவும் சிறந்த செல்வமுமாக வியந்தோதினார். செல்வம் என்றவுடன் பொருட் செல்வம்தான் முன்னிற்கத் தோன்றுகின்றது. மக்களும் 'செல்வம்' என்று படுகிறது. கல்வியும் ஒரு செல்வம்தான். இந்த விபரீதமான செல்வம்தான் என்ன? பலர் பலவிதமாகப் பொருள் கூறுவர். நச்சினார்க்கினியர் 'அறமாகப்' பொருள் சொல்லுகின்றார்.

மனவமைதி என்கிறார். பலருக்குப் பொருள் மனவமைதியைக் கொடுக்கும். சிலருக்குக் கல்வி, மக்கள் முதலியன கொடுக்கும். ஆனால் இவையெல்லாம் நிரந்தரமான மனவமைதியைக் கொடா. அருள் ஒன்றுதான் நிலைத்த மனவமைதியைக் கொடுக்கிறபடியால், அதனைச் செல்வத்துட் செல்வம் என்று குறித்தார்.

பணமென்றால் பிணமும் வாய் திறக்கும் என்று அதன் பெருமையைப் பறை சாற்றுவர். ஆனால், அதே பணத்தை ஆட்கொல்லி என்று எள்ளி நகையாடுவர். கொடுப்பவனுக்கும், ஏற்பவனுக்கும் ஏனையோர்க்கும் புரை தீர்த்த நன்மை பயக்கக் கூடியது, அருட் செல்வமொன்றுதான் என்பதை விளக்க 'பல்லாற்றால் நாடினும் அஃதே துணை' என்றார். அஃதே என்று பிரிநிலை 'ஏ'காரம் கொடுத்துச் சொன்னார். அதனை விட சிறந்த துணை வேறொன்றுமில்லை, என்பதை மெய்ப்பித்தலுக்காக எந்த விதத்தாலும் ஆராய்ந்து பார்த்தாலும் அந்த ஆய்வுக்கு மிளிர்ந்து கொண்டிருக்கும் என்பார்—"பல்லாற்றான்" என்றார்.

அருளுடையவன் மனத்திலே சாந்தம் நிலவும். பகையுமில்லை; பகைவனுமில்லை. பகைத்தாலும் நண்பே கொள்வார்கள். துன்பமென்ற பொருளே அவர்களுக்குக் கிடையாது. ஏனையோருக்குச் சாதாரணமாக துன்பம் தருகின்ற பொருள்கள் அவர்களையும் போய்த் தாக்கும். ஆனால் அவர்களுடைய மனவமைதியைக் குலைக்காது. துன்பம் பொருள்களைப் பொறுத்ததல்ல. அவரவர் மனநிலையைப் பொறுத்தது. சுருங்கச் சொன்னால் துன்பமும் அவர்களுக்கு இன்பமாம். ஆனதால் "இருள் சேர்ந்த இன்னாவுலகம் புகல்" அவர்களுக்கு

இல்லை. இன்னாவுலகம்—துன்பமாகிய உலகம். அதனை இருள் நிறைந்ததென வர்ணிக்கிறார். புகுந்தவர்களுக்குப் புத்தி மழுங்கிவிடும். பற்பல துன்பம் ஒருபுறம்; வெளியே வரமுடியாத தொல்லை மறுபுறம். இருட்டறையில் கட்டுப்பட்டு முட்டுப்படுவது போலத்தான் இருக்கும் அவன் நிலை. ஆனால் அருள் சுரக்கும் ஆவிக்குத் துன்பமுமில்லை மயக்கமுமில்லை. நாவுக்கரசரை துன்பவுலகமாகிய நீற்றறைக்குள் பூட்டிவிட்டார். இறைவனருள் சுரக்கும் நாவுக்கரசருக்கு மாசில் வீணையும் மாலை மதியமுமாகக் காட்சியளித்தது, நீற்றறை. இந்த இன்பத்தை—துன்பத்தை இன்பமாக்கும் செல்வத்தைக் கொடுத்தது பொருளல்ல, மக்களல்ல, உறவினரல்ல, கல்வியல்ல, அருள். பகைவனுக்கு இரங்கும் அருள்தான் கொடுத்தது. இதுதான் அருள் கொடுக்கும் அழியாத இன்பம்; இருள் சேர்ந்த இன்னாவுலகம் அவர்களுக்கு இல்லை.

அருள் என்று நாம் சொல்லுகிறோம். அது மனதின் சிறந்த பண்பு. அந்த அருள் நடைமுறையில் பெயரும்போது அறமாக மாறுகிறது. ஈதல் அறம் என்று ஔவையார் சொன்னார். ஈ, தா, கொடு என்று மூன்று சொற்களின் வரம்பை வள்ளுவனார் வரையறுத்திருக்கிறார். உயர்ந்தோன் இழிந்தோனுக்கு ஒரு பொருளைக் கொடுப்பான். ஒருவன் தன்னொடொத்த இன்னொருவனுக்கு ஒரு பொருளைத் தருவான். இழிந்தோன் உயர்ந்தோனுக்கு ஒரு பொருளை ஈவான்—அறம் செய்யும்பொழுது, தான் அதைச் செய்கிறேன் என்று இறுமாக்கப்படாது. வறியவன் ஒருவன் பெரியோரிடத்தில் ஒரு பொருளைப் பெறும் போது

எவ்வளவு தாழ்ந்த மனப்பான்மையோடும், நன்றியறிதலோடும் பெறுகிறுனே அதே போல அறம் செய்பவனும் மிகவும் பயபக்தியோடும், ஈகை செய்ய வாய்ப்புக் கிடைத்து விட்டதே என்ற நன்றியறிதலோடும் செய்ய வேண்டும் என்பார். ஈதல் அறம் என்றார். அறம் செய்வோனுக்கு இப்படியான மனப்பான்மையைக் கொடுப்பது அருள், இரக்கம். அருளில்லாமல் செய்யும் அறம் அறமல்ல. அது கைபிழை பாடு. அறிவில்லாதவன் ஒருவன் தட்டித் தவறிக் குருட்டுவாக்காக உண்மைப் பொருளைக் கூறல் தெளிந்த ஞானத்தின் பயனல்ல. வாய் குழறல்தான். அதே போலத்தான் அருளாதான் செய்யுமறம் என்பார்.

> "தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
> அருளாதான் செய்யுமறம்"

என்றார் வள்ளுவர். செய்யும் அறம் உளம் நிறைந்து நின்ற செயலில் தங்கியிருப்பதே யொழிய மனம் பொருந்தாத வெறும் செயலில் தங்கியுள்ளதல்ல. அருளோடு செய்யும் அறமே அறமென்று அருளின் பெருமையை வள்ளுவர் எடுத்துக் காட்டுகிறார். 'மனத்தின் கண் மாசிலனாதல் அனைத்து அறம்' என்று வள்ளுவர் பிறிதோரிடத்தில் கூறுகிறார். அந்த மனமாசை நீக்குவதுதான் அருள்.

அருள் வேண்டுமென்று வெறும் வாய்வீரம் பேசுபவரல்ல வள்ளுவர். அதனைப் பெறும் வழியையும் வகுத்துக் காட்டிய உலகியல் நடைமுறை கைதேர்ந்தவர். நம்மிற் சிறந்தோரைக் கண்டால் எம்மையறியாமலே அடங்கி விடுகிறோம். தாழ்ந்தோரைக் கண்டால் வீரம்

பேசி விரட்டுகிறோம். உடனே அவர்களிடம் நாம் காட்ட வேண்டிய கருணை பறந்து விடுகிறது. இவ்வித நிலை ஏற்படாமைக்கு ஒரு வழி சொல்லிக் கொடுக்கிறார், வள்ளுவர்.

"வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து"

(குறள் 250)

அருளைப் பற்றி வள்ளுவர் யாது கருதினாரோ, அது இன்னதென்று சுட்டிக்கூற முடியாது. பலபல உரையாசிரியர்கள் துருவித் துருவி ஆராய்ந்தும் நிலை நாட்ட முடியவில்லை. ஏதோ எம்மறிவிற்கு எட்டியதைப் பார்க்கலாம். அவ்வளவு பயன் எமக்குண்டு.

# அரசியல் நினைவுகள்

**எஸ். எம். கமால்தீன் பி. ஏ.**

முடி அரசு கண்டவர் வள்ளுவர் பெருமான். "எல்லோரும் இந்நாட்டு மன்னர்" எனக் குடி அரசு போற்றும் காலத்தில் வாழ்கிறோம் நாம். இவ்விரு அரசியல் முறைகளுக்கு மிடையே நூற்றாண்டுகள் பல கழிந்துள்ளன. மக்கள் தங்கள் சமூக வாழ்க்கை முறையை நன்மை பயக்கத்தக்க வகையில் காலத்துக்குக் காலம் மாற்றி அமைத்து வந்துள்ளனர் என்பதற்குச் சரித்திரம் சான்று பகர்கின்றது. தற்காலத்தில் கூட மக்களின் நன்மைக்காக மக்களே நடத்தும் ஆட்சிமுறை என்று சிறப்பிக்கக் கூறப்படுவதும், அரசியல் முறைகளிலே தலையாயது என்று பெரும்பாலோரால் ஏற்றுக் கொள்ளப்படுவதுமான சனநாயக ஆட்சி முறை நாட்டிற்கு நாடு மாறுபட்டுக் காணப்படுகின்றது. ஆங்கிலேயர் பெருமிதத்துடன் நடத்துவது சனநாயக முறை. அமெரிக்கர் பின் பற்றுவதும் அதே முறை. அதே சமயத்தில் அரசியல் தத்துவ அடிப்படையில் இவ்விரு நாடுகளுக்கும் எதிராகவுள்ள ருஷ்ய நாடும் சனநாயக வழி செல்வதாகவே அறிவிக்கப்படுகிறது.

அரசியலின் தன்மை இவ்வாறாக இருக்குமானாலும் பல்லாண்டுகளுக்கு முன்னே திருவள்ளுவரால் அக்காலச் சூழ்நிலைக்கேற்பக் கூறப்பட்ட ஓர் அரசியல் முறை இன்று பொருந்துமா என்று நம்மில் பலர் ஐயுறுதல் நியாயமே. ஆனால் குறள் வகுக்கும்.

அரசியல் முறை, எக்காலத்துக்கும் ஏற்றதென்பது அந்நாலைப் படித்தோர்க்குத் தெள்ளிதிற் புலனாகும். காலத்தால் மாறுபடாத அடிப்படைத் தத்துவங்களை அமைத்தே வள்ளுவர் தமது நூலை இயற்றினர். எனவே அவருடைய கருத்துக்கள் மாறுப் பயனுடையன வாகும்.

பண்டைக் காலத்தில் ஒரு வண்டியை இழுத்துச் செல்ல மிருகங்கள் உபயோகிக்கப் பட்டன. இன்று இயந்திர சக்தி அதே தொழிலைச் செய்கிறது. மின்சார சக்தி வண்டிகளை இயக்குகின்றது. வண்டி இயங்குவ தற்கு வேண்டுவது "இயக்க சக்தி". இது அடிப்படை உண்மை. ஆனால் நாம் கூறிய உதாரணத்தில் இந்த சக்தி பல வகையாகப் பெறப்படுகிறது. ஆரம்பத்தில் மிருகமும், நவீன காலத்தில் மின்சாரம் இந்த சக்தியை உதவியுள்ளன. மாற்றம் ஏற்பட்டுள்ளது, அடிப் படைத் தேவையிலன்று. அந்த சக்தியின் உருவில் தான்.

இந்த உண்மையையே நாம் வள்ளுவரின் அரசி யல் தத்துவத்திலும் காண்கிறோம். அன்று முடியர சும் இன்று குடியரசும் உலகில் முக்கியத்துவம் வகித்த போதிலும், அடிப்படையான அரசியல் தத் துவங்களில் மாற்றம் காண முடியாது. அப்படியான அடிப்படைத் தத்துவங்களைத்தான் குறள் கூறுகின்றது. இந்தக்கூற்று விளக்கப்பட வேண்டும்.

உலகாயதத்தில் மூழ்கிக் கிடக்கும் தற்கால உலகத்தில் அரசியல் என்றால் மனிதனின் சமூக வாழ்க்கைச் சேமத்தை மாத்திரமே கருதியதாகத்தான் கொள்ளப் படுகின்றது. இத்தகைய அரசியலில் மனி

தன் உலக இன்ப மொன்றையே நாடிச் செல்கிறான். அறிவை வளர்க்கிறான். ஆனால் அதிகாரத்தையும் தேடி அவ்வதிகாரத்திற்குத் தன் அறிவை பலி தரு கிறான். இறுதியில் பிறவிப் பயன் அவனுக்கு வாய்க் கின்ற தில்லை. உலகில் தோன்றி மறைந்த எத்த னையோ பெரிய வல்லரசுகளின் சரித்திரம் இக்கருத் தையே வலியுறுத்துகின்றது. உலகாண்ட மன்னர் பலர் கண்ட மகத்தான வெற்றிகள் யாவும் கன வாகிச் சரிந்துள்ளதையும் நாம் மறக்க முடியாது.

வள்ளுவர் கூறும் அரசியலோ அறத்தின் மீது அமைக்கப் பட்டதாகும். அவர் எழுப்பிய அரசியல் லின் அழிவற்ற அறத்தை அத்திவாரமாகக் கொண் டது. மனிதனின் வாழ்க்கை பூரண நிலையை எய்து வதற்கு உதவக் கூடியது. ஐம்பது ஆண்டுகளுக் குள் இரு பெரும் யுத்தங்கள் மூண்டு, இனி வரும் யுத்தம் எத்தகைத்தோ என்று மக்கள் பீதி கொண்ட வர்களாய் மன நிம்மதி இழந்து வாழும் இக்காலத் தில் அறத்தையே உயிர் நாடியாகக் கொண்ட ஓர் அரசியல் முறை எத்தனை முக்கியத்துவம் வாய்ந்த தென்பதை மனதே யிருத்தி நூலின்கண் செல் வோம்.

எந்த விதமான அரசியல் முறையிலும் நாட்டுக் குத் தலைவன் ஒருவன் இருப்பது இயல்பு. அத் தலைவன் ஓர் அரசனா யிருக்கலாம், சனாதிபதியா யிருக் கலாம், பிரதமராயிருக்கலாம், தேசாதிபதியாயிருக்கலாம், சர்வாதிகாரியாகக் கூட இருக்கலாம். இத்தலைவனின் ஆட்சி மக்களுக்கு நன்மையாகக் கூடியதாய் இருக்க வேண்டுமானால், அவன் மக்கள் ஆசியையும், அபிமா னத்தையும் பெற்றவனாயிருக்க வேண்டும்.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்.

ஒரு நாட்டின் தலைவனுக்குரிய பண்புகளைக் கூறும் வள்ளுவர் அவனை எத்தனை உன்னத நிலைக்கு உயர்த்தி விடுகின்றார் என்பதை இதில் நாம் காண்கிறோம். அற வாழ்வை அணைந்த மக்களை, எல்லாம் வல்ல இறைவனுடைய நிலைக்கு இட்டுச் செல்லும் இப்பான்மை வள்ளுவனின் திருமறையில் பல இடங்களில் காணப் படுகின்றது. மனிதனிடத்தில் எத்தனை மகத்தான சக்தி தங்கியுள்ள தென்பதையும் அவன் உலகத்தில் முறைப்படி வாழ்ந்தால் அவன் எய்தக் கூடிய உயர் நிலையையும்,

வையத்து வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

—என்பதனாலறியக்கூடியதா யிருக்கிறது.

இனி, அறத்தினை உயிர் நிலையாகக் கொண்டவனை அரசனிருக்க வேண்டும். அறந்தவறிய விடத்து ஆட்சிக்கு அழிவென்பது தானகவே வந்து சேரும்.

அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் உடைய தரசு.

அரச பதவியிலிருப்பவன் அஞ்சா நெஞ்சினனையும், ஈகை, அறிவு, ஊக்கம் ஆகிய சிறப்பியல்புகள் உடையனையும், மக்கள் எளிதில் காணக் கூடியவனையும், இன் சொல்லனையும், தனது குடிகளின் நலன்களைப் பாதுகாப்பவனையும் இருத்தல் வேண்டும்.

இத்தகைய அரசன் ஒரு நாட்டைச் சிறப்பாக ஆளுவதற்குப் பலரது துணையைப் பெற வேண்டும். இத்

துணைவருள் தகைசான்ற அமைச்சரை முதற்கண் கொள்ள வேண்டும்.

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு.

அரசின் பாரம் தக்கதொரு அமைச்சன் வாய்த்த விடத்து பெரும் பகுதி தீர்ந்த தென்றே கொள்ள லாம். அரசன் ஈடுபடும் ஒரு காரியத்தில் அவன் அநுசரிக்க வேண்டிய அத்தனை முறைகளையும், வகுத்துக் கூறக் கூடிய ஆற்றல் மிக்க ஒரமைச்சனை யுடைய ஆட்சி சிறப்புறும் என்பதில் ஐயமில்லை. இத்தகைய பண்பமைந்த அமைச்சன் வாய்த்த போதும் அரசன் அறிவாற்றல் இல்லாதவனும், குடி நலம் பேணாதவனுமா யிருக்கக் கூடும். எனினும் அந்நிலை யில் அமைச்சனது கடமை மிகவும் தெளிவாக விளக் கப் பட்டுள்ளது. அரசனது மனப் போக்கிற்கு ஏற்ற வாறு அமைச்சனும் செல்வானாயின் அவன் தன் கடமையிற் தவறியவனாவான். அத்தகைய அமைச்சி னால் பயனில்லை.

அறி கொன்றறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்.

அமைச்சு நலம் இத்தனை சிறப்பு மிக்க தென்ப தைக் கூறிய வள்ளுவர் தீய ஒருவன் அமைச்சனானால் அந்த ஆட்சிக்கு எத்தனை பயங்கரமான பகையாய் அவன் அமைவானென்பதை

“பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர் எழுபது கோடியுறும்” என்பதனால் விளக்கி யுள் ளார்.

உலக நாடுகளின் அரங்கில் அரசியல் தூதர்களின் முக்கியத்துவத்தை இன்று நாம் நன்கு உணர்ந்துள்ளோம். ஒரு நாடு பிறிதொரு நாட்டில் கண்ணியமாகக் கருதப் படுவதற்கும், இரு நாடுகளுக்கு மிடையே நேசபான்மை வளர்வதற்கும் இத்தூதர்களே பிரதான காரணர்களா யிருக்கின்றனர்.

அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை
தூதுரைப் பார்க்கின் றியமையாத மூன்று.

தூதர்க் குரிய பண்புகளைக் கூறும் குறளாசிரியர் அன்பு அறிவு ஆராய்ந்த சொல்வன்மை ஆகிய மூன்றையும் அமைத்துள்ள முறை கவனிக்கத்தக்கதாகும். அன்பு முதலிடம் பெறுகிறது. அன்பை முதன்மையாகக் கொண்ட அறிவுதான் வாழ்க்கையில் வெற்றி தரும் என்ற சிறந்த கொள்கை இங்குப் பெறப் படுகிறது.

“அன்பின் மூலம் தான் அறிவு உண்மையை உணரும்; ஆகவே விழியுங்கள்! புத்துலகு காண விழையுங்கள்! அன்போடு அறிவு கலந்திட ஆக்கம் தேடுங்கள்!” என்று அறை கூவி அழைக்கும் அல்லமா இக்பாலின் அரிய கருத்தும் வள்ளுவரின் அன்பு நெறியையே நமக்கு நினைப் பூட்டுகிறது.

ஆராய்ந்த சொல்வன்மை தூதர்க்கு இன்றியமையாதது. ஆராயுந்திறனை அறிவு அவர்க்கு அளிக்கின்றது. சொல்வன்மையின் சக்தியை,

“விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்” என்பதனாலறியலாம். உலகின் நிலை சொல்வன்மை பெற்றார் மாட்டு

இவ்வாறாயின் அத்திறன் படைத்த தூதர்களின் சிறப்புக் கூறவும் வேண்டுமோ. இன்னும்,

“இறுதி பயப்பினும் எஞ்சா திறைவற்கு
உறுதி பயப்பதாம் தூது” என்பதில் தூதுவர்களின் கடமை நன்கு விளக்கப் படுகிறது.

தக்க அமைச்சரும், தூதுவரும் அமைவதோடு அரசனுக்கு நாட்டில் பெரியாராய் இருப்போரது துணையும் வேண்டும்.

அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்.

மூத்திய அறிவுடையார் மிகுந்த அநுபவம் உடையவருமாவர். எனவே அவர்தம் அறிவு அரசனுக்குத் தனது கடமைகளைத் தருந்தவாறு செய்வதற்கு உதவக் கூடியதா யிருக்கும். இத்தகைப் பெரியார் அரசனிடம் குறை கண்ட விடத்துச் சற்றும் தயங்காது அதனை எடுத்துக் கூறக் கூடியவர்களா யிருப்பர். தனது குறைகளைப் பிறர் எடுத்துக் காட்ட அதனை உணர்ந்து திருந்திக் கொள்ளக் கூடிய அரசனை எவராலும் கெடுக்க முடியாது.

இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே
கெடுக்குந் தகைமையவர்.

மக்களின் ஆட்சியிலே இன்று மிகவும் பிரதான உரிமையாகப் போற்றப் படுவது அவர்களின் பேச்சு உரிமையாகும். அரசு பிழைத்த விடத்து அதனை எடுத்துக் கூறக் கூடிய உரிமை எல்லா சுதந்திர நாடுகளிலும் ஒப்புக் கொள்ளப் பட்டுள்ளது. இவ்வுரிமையை

மாறும்; ஆட்சி கொடுங்கோன்மையாகி விடும். எனவே இவ்வுரிமையை வள்ளுவர் அரசியல் நலத்திற்கு அத்தியாவசியமானதாகக் கூறியுள்ளார்.

ஒரு நாட்டின் தலைவனுக்குரிய பண்புகளையும் அவனுடைய ஆட்சி சிறப்புற அமைய வேண்டிய துணைவரையும் இது வரை கண்டோம். ஆனால் இவைகளால் மாத்திரம் ஒரு நாடு இயங்கி விட முடியாது.

"படைகுடி கூழ் அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு," என்பதில் சிறிய அரசியல் முறையிலே இன்றியமையாதனவாயுள்ள பல அம்சங்களை நாம் காண்கிறோம். அவ்வம்சங்கள் குறைந்து நிற்குமெனில் அரசு நலம் குன்றி விடும். இக்குறள் கூறும் சில அம்சங்களில் சிறிது கவனஞ் செலுத்துவோம்.

அரசருள் முதன்மையானோர்க்கு இன்றியமையாதன வென்பவற்றுள் முதற்கண் கூறப்படுவது படை. படையின் முக்கியத்துவம் கருதியே இவ்வமைப்புக் கூறப் பட்டுள்ளது. ஒரு நாட்டின் மீது செல்லும் பகைவரைத் தடுக்கவும், அந்நாட்டின் சுய ஆட்சியை நிலை நிறுத்தவும் படை அவசியமாகிறது.

உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை.

அரசனது ஆணைக்கு ஆக்கந் தருவது படைதான். இத்தகைய படை சேர்ந்த வீரர் தன்மை சிறப்பாகக் கூறப் படுகிறது. தமிழரது வீரத்திற்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது வள்ளுவர் சாற்றும் படையினர் வீரம்.

கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்த வேல் ஏந்தலினிது.

நாட்டின் பாதுகாப்பிற்கு அவசியமான படையினோடு தொடர்புடையது அரண். இவ்வரண் இயற்கை அல்லது செயற்கையால் அமைந்ததாய் இருக்கலாம். அரண் எத்தனைச் சிறப்புடையதாயிருந்தாலும் அதனை உபயோகிப்போர்க்கு ஆற்றல் இல்லாதாராயின் எவ்விதப் பயனும் அற்றதாகி விடும்.

எனை மாட்சித்தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்ல தரண்.

இன்று சர்வதேச அரங்கிலே பாதுகாப்புக்களின் மீது செலுத்தப்பட்டு வரும் கவனம் நமக்கு வள்ளுவர் படை அரண் ஆகியவற்றைப் பற்றிக் கூறியுள்ள உண்மைகளையே வலியுறுத்துகின்றன.

போர் விரும்பும் நாடுகளுக்குத்தான் படை அவசியம் என்பது பொருந்தாத கூற்றாகும். தற்கால உலக நிலையை நாம் சிந்தித்துப் பார்த்தால் இந்த உண்மை தெளிவாகும். படைகளின் நோக்கம் உலகில் மக்களிடையே துன்பத்தைப் பெருக்குவதொன்று மட்டுமே என்றிருந்தால் மக்களின் சேமத்திற்காகவே நூல் செய்த குறளாசிரியர் படைக்கு இடமளித்திருக்க மாட்டார். எனவே அவர் கூறும் அரசியல் முறை மனிதனுடைய உள்ள நிலையை உணர்ந்து கூறப்பட்டதாகும். நடைமுறையில் சாத்தியமானதாகும்.

இறுதியாக எல்லா அரசுகளினாலும் குறிக்கோளாயமைந்துள்ள ஒன்றினை இங்கு கூறி முடிப்போம். எல்லா அரசாங்கங்களும் இந்த நிலையை எய்தவே முயன்று வரு

10258 

கின்றன. அவைகளின் முயற்சியினால் ஏற்படக்கூடிய அரும் நாட்டை வள்ளுவர் விவரிக்கின்றார்.

> உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
> சேரா தியல்வது நாடு

இன்று உலகெங்கும் இந்த முயற்சிதானே முன்னேற்றம் விரும்பும் அத்தனை நாடுகளிலும் நடைபெற்று வருகிறது. இதுதானே அரசியலின் முடிபு. பசி, பிணி, பகை இவைகளில் நின்றும் சுதந்திரம் பெறுவதற்கே உலக வல்லரசுகள் தங்களாலான முயற்சிகளைச் செய்து வருகின்றன.

பசி, பிணி, பகை ஆகிய மூன்றும் ஒன்றோடொன்று தொடர்பானவையாகும். பஞ்சம் புகுந்த நாட்டிலே பிணி சேர்வதோடு பகைவரும் வந்தடைவது இயல்பு. எனவே ஒரு நாட்டின் சேமத்திற்குப் பசி நீக்கமே முதலாவதாகின்றது. இன்றைய உலகிலே நாம் அநுபவிக்கும் அரசியல் கொந்தளிப்புகளுக்கெல்லாம் மூல காரணமாயிருப்பது பசியும் அதனோடு சேர்ந்து வரும் பிணியுமன்றோ.

இத்தீங்குகளை நீக்குவதற்கு ஏற்ற முயற்சி வள்ளுவர் கூறிய அரசியல் முறையிலேதான் உண்டாக முடியும். அவர் கூறும் அரசியல் அமைந்த நாட்டைக் காணுவதே உலக சேமத்திற்கு அடிகோலுவதுமாகும்.

# வள்ளுவன் கண்ட தமிழறம்

பண்டிதர், வி. சீ. கந்தையா, மட்டக்களப்பு.

பண்டைத் தமிழகத்துப் புலவர் பெருமக்களுள் முதற்கண் வைத்தெண்ணத்தக்க அறிவு படைத்த பெருந்தகையாளர் நமது வள்ளுவனார். காலம், உலகம், நியதி, என்ற அனைத்தையும் கருத்துக்கண் கொண்டு அளந்து நிறுவிச் சென்ற சிறப்புடைய பெருஞானி அவர். தமிழரது வாழ்வின் அகம், புறம் பற்றிய நிகழ்ச்சிகளை அறத்தின் வடிவாகக் கண்டு அவற்றை இன்பமும், பொருளும், அறமுமாக வகுத்தமைத்தவர். அவர் வாழ்ந்த காலத்திலே 'ஈதல் அறம்; தீவினை விட்டீட்டல் பொருள்' என்ற குறுகிய வரையறை இருந்திலது. அறம் என ஒன்று மக்கள் வாழ்விலே பிணைந்த நிலையிலன்றித் தனித்து அக்காலம் இயங்கவில்லை.

இவ்வாறு தமிழரது வாழ்வோடு அறம் படிந்து பொலிந்த செழுங்காலச் சூழ்நிலை தோற்றுவித்த பெருங் கவிஞர் வள்ளுவனார். அக்காலத்திலே அறம் மறந்து வாழ்வினைத் தமிழன் எந்நிலையிலும் கடைப்பிடித்தானல்லன். தன் மாற்றருயிரைக் குடிக்கத் திட்டமிட்டு, மறப்போர் புரியும்போது கூட, ஆயுதமற்ற நிலையிலும் புறமுதுகிட்டுப் பேரும் நிலையிலும் அவரைக் காணின் அறம் மறந்து கொல்லாது, அருள் புரிந்து மீண்ட தமிழர் பரம்பரை வாழ்ந்தகாலம் வள்ளுவனுடையது. வேட்டைக்குச் சென்றாலும், முலையூட்டும் நிலையினும், காதற் புணர்ப்பு நிலையினும் உள்ள உயிர்களைக் கொல்லாது கருணை காட்டி மீண்டனர் அக்காலத் தமிழர்.

பொருள் வருவாய் மிகுக்கச் செய்யும் வாணிகத் துறையிலும் கூட அறமே தலைக்கொண்டு நின்றது. "கொள்வதூஉம் மிகை கொளாது, கொடுப்பதூஉம் குறை கொடாது" தமிழ் வாணிகர் அக்காலம் தொழில் நடத்தினர். "நான்குடன் மாண்டதாயினும் மாண்ட அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" என்று அரசரும் அறம் கருதி நாட்டை ஆண்டார்கள். இவ்வாறு தமிழர் தம் வாழ்வின் இன்பம், பொழுது போக்கு, போர், கொலை, வீரம், தொழில், ஆட்சி என்ற அனைத்திலுமே அறம் நீங்காது இடம் பெற்று நிலவிய சூழ்நிலை தோற்றுவித்த காரணத்தினாலேயே வள்ளுவரும் அறமுனிவராயினார்; அவருடைய திருநூலும் நீங்காது நின்று அறம் வளர்ப்பதாயிற்று.

அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பாற்பட்டு அமைந்த போதிலும் திருக்குறள் நூலானது இதனால் அறமென்றே வழங்கப்படலாயிற்று. "அறமுரைத் தானும் புலவன்" என்பதில் வள்ளுவப் பயனை அறம் என்று பாராட்டினர் பொய்யாமொழிப் புலவர். "செய்தி கொன்றோற் குய்தியில்லென அறம் பாடிற்றே ஆயிழை கணவ" என்று அறப் பயனை திருக்குறளைப் புறநானூறு புகழ்கின்றது. அறம் முனைப்புற்ற தமிழக வாழ்வினைக் கண்ட வள்ளுவரும் அதற்குப் பொருந்த அறமே பொருள் என்றும், அறமே இன்பம் என்றும், அறமே வீடு பேறு என்றும் குறள் வகுத்து அறம் நிலைப்படுத்தினார். "அறத்தினூஉங்கு ஆக்கமுமில்லை" என்பதனைச் சிறந்த பொருளாவது அறமேயென்று அறத்தைப் பொருளாகக் காட்டினர். 'அறத்தான் வருவதே இன்பம்' என்பதன் மூலம் இன்பம் விளைப்பது அறமே

என்று அறத்தையே இன்பமாகக் காட்டுகிறார். இப் பெருஞ் சிறப்புக்கொண்டே:

"ஒல்லும் வாயெல்லாம் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல்"

என்று தாம் செயல் புரியும் போதும் அறம் கருத வேண்டிய நியதியை நமக்குக் கற்பித்தனர். உறுதிப் பொருள்களுள் நான்காவதான வீடு பேறு தமிழ்க் குலத்தாரால் 'சிறப்பு' என்று கருதப்பட்டது. இவ்வுல கத்திற் காணப்படும் அனைத்தையும் மிஞ்சிய பெருநிலை அதுவென்று தமிழர் கொண்டு இப்பெயரைச் சூட்டினர் கள். அத்தகைய பெருஞ் சிறப்பினையும், இவ்வுலகத்திற் பொருளாற் பெறும் இன்பம் முதலானவற்றையும் நல்கும் ஆற்றல் அறத்துக்குண்டு என்ற தமிழர்களது கோட்பாட்டினையே வள்ளுவப் பெருந்தகையார்:

"சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு"

என்று காட்டினர். உயிர் அடையும் செல்வமும், சிறப் பும் அறத்தாலேயே ஆவன என்ற கருத்துத்தான் தமிழ்க் குலத்தின் உயர் மானத்துக்கும், உயிர்ப் பண்புக் கும் எடுத்துக்காட்டாக என்றும் உள்ளது. உடல் அடையும் சிறப்பும், இன்பமும் நிலையாகாதன என்றும், புறத்தே அவ்வின்பத்தை அடையாவிடினும் உயிர் இவற்றை அடைதலே வேண்டியது என்றும் தமிழர் கொண்டனர். அதுவே அவர் வாழ்வின் இலக்கு ஆயிற்று. அத்தகைய இலக்குகளை வாழ்விற் கொண்டு இறுதி எய்தினும் உறுதியின் வழுவாது நின்ற செம்மை நிலை தமிழனுடையது. வள்ளுவன் தமிழகத்தின் கண்

கண்டது அதுதான்; கண்ட அதனையே குறளில் பொறித்துச் சென்றான்.

இவ்வாறு 'உயிர்க்கு ஆக்கம் அறத்தினூங்கு இல்லை' என்ற குறிக்கோளை நிறுவிச் சென்ற தன்மையினாலே, குறளுக்கு 'அறம்' என்ற பெயரையே அவனும் கருதினான் என்று நாம் கொள்ளலாகும். பாயிரத்துள் 'அறன் வலியுறுத்தல்' என்றோர் அதிகாரத்தைக் காணுகின்றோம். ஆயினும், பொருள், இன்பம், இவற்றுக்கு வலியுறுத்துதல் எங்கும் சொல்லப்படவில்லை. அதனால் அறமே நூலின் கருப் பொருள் என்பது நன்கு புலனாகின்றது. அறத்திலறம், பொருளிலறம், இன்பத்திலறம் ஆகி நூலும் முப்பாற்பட்டதென்று கொள்ள அமைந்தது. வாழ்வில் மக்கள் கருதிய, கைக்கொண்ட, கொள்ள வேண்டிய, நல்லிலக்குகளை அறம் என்று பெயர் கொடுத்துத் தனிப்படக் காட்டும் பகுதி அறத்துப் பாலாயிற்று. மக்கட்குழுவினது நல்வாழ்க்கையிற் பிணைந்த கட்டுப் பாடுகளையே அப்பாலுள் வள்ளுவனார் வகுத்தமைத்தார் என்பது கருத்தூன்றிக் கற்போர்க்குப் புலனாகும்.

உயிர்க்கு ஆக்கமான சீரிய கொள்கைகளை மறந்து வாழும் நிலை காலமயக்கிலே நம்மைக் கைக் கொண்ட போது, அக்கொள்கைகள் அறம், தவம், புண்ணியம், என்ற பேர்கொண்ட பூதங்கள்போல தமக்குத் தோற்ற மளிக்கின்றன. அறம் என்பது மனித சக்திக்கு எட்டாத ஒரு பொருள் என்றும் அதற்காக முயலு வோரைக் காலத்துக்கமையாத அநாகரீகரென்றும் மக்கள் கருதத் தலைப்பட்டனர். அதனால் மெய்ஞ்ஞானி கள் அறம் மறந்த சூழ் நிலையினை நீங்கி மலைச் சாரல் களிற் சென்று சரண்புகுவாராயினர். அறமும்,

தவமும் உடன் சென்று காடுகளிலும் குகைகளிலும் ஓடி புகுந்தது. கால நெறியில் நாம் அவற்றை அடைய முடியாத, முயலாத நிலைக்கு வழிப்பட்டோம். மூச்சை அடக்கி மோனத் திருப்பதே தவம் என்றும், காவியும், சடையும் கொண்டு மட்டுமே உயிர்க் காக்கத்தைப் பெறலாமென்றும் உலக வாழ்விலிருந்து இதனைச் சாதிக்க முடியாதென்றும் கருதப்பட்டது. இந்த அறியாமை நிலையை மாற்றி உயிரை ஒளிபுறுத்தும் நற் கடமைகளை இல்வாழ்வில் இருந்து கொண்டே புரிவதன் மூலம் மேன்மை பெறலாமென்று அறிஞர்கள் எடுத்துக் காட்டும் நிலை ஏற்பட்டது. "காவித்துணி வேண்டா; கற்றைச் சடை வேண்டா; பாவித்தல் போதும் பரமநிலை எய்துதற்கே" என்று பாரதியார் நம்மைத் தட்டிக் கூற வேண்டிய நிலைக்கும், கரும யோக மென்னும் பெயரால் வழங்கும் வடமொழி யாளரது கருத்துக்களைக் கண்டு கண்விழிக்க வேண்டிய நிலைக்கும் நாம் ஆளாயினோம். இந்த இழி நிலை நம்மைச் சாரக்கூடும் என்பதை வள்ளுவன் தனது நீண்ட காலத்துக் கருத்து நோக்கினாற் கண்டான் போலும்!

> "மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
> பழித்த தொழித்து விடின்"

என்று அதற்கும் குறளமைத்து வைத்தான். புறத் தோற்றத்திலும் முதன்மையானது அக ஒளிதான் என்பது அவனது முடிவு. அவனுடைய அற ஒழுக்க விதிகளனைத்தும் போலி வேடதாரிகளுக்குச் சவுக்கடி போன்றவை. அகந் தூய்மை நிறைந்த கடமையிற் தவறாத நல்வாழ்வு கொண்டு தனக்குயன்ற

நற்கொள்கை சிலவற்றையேனும் தனி மனிதனெவ் வொருவனும் கடைப் பிடிக்க வேண்டுமென்றும் அந்தச் சீரியநிலை உண்மையான தவ வாழ்வுக்குச் சமமான தென்றும் காட்டி வைத்தனன்.

நாம் இன்று நினைப்பதுபோல் அறமென்பது மக்கட் குலத்தின் தினசரி வாழ்வினின்று வேறுபட்ட தன்று என்பதே அவன் கண்ட அறவியல் ஒழுங்கு. வாழ்வே அறம்; அறமே வாழ்வு; நமக்கியன்ற சீலம் ஒன்றாயினும் வழுவாது கடைப் பிடிப்போம். நம் நிலை இல்லறமாயினும் துறவறமாயினும் சரி, நாம் ஏழைகளாயினும் செல்வர்களாயினும் சரி, அந்நிலைகள் நமது கொள்கையினை மட்டும் தடுக்காது பார்த்துக் கொண்டால் போதும் என்பது அவனது புத்திமதி.

ஞான நிலை வேண்டித் தன் தாய் தந்தையர் பணியை மறந்து காடுகளிற் கடுந்தவம் புரிந்து கொக்கை எரிக்கும் ஆற்றல் பெற்ற கொங்கண முனிவருக்கு அந்த ஞானம் ஏன் வரவில்லை? காட்டுக்குப் போகாமல், மூச்சை அடக்கி மோனத் தவம் புரியாமல், தன் கணவ னின் கால் கழுவிப் பணி செய்து வாழ்ந்த பட்டிக் காட்டு நங்கை ஞானக் காட்சியை எப்படி அடைந்தாள்? கொலை பயின்ற தொழிலாளனை இறைச்சிக் கடைக காரனிடம் அம் முனிவர் ஞானம் படிக்க அனுப்பப் பட்டதன் உட்பொருள்தான் என்ன? அறிவும் ஆற் றலும் இல்லாளாய்ச் சீரும் செல்வமும் அற்றவளா யினும் தன் கொழுநனுக் கேற்ற பணி செய்த லொன்றே அனைத்துமென்று கருதித் "தெய்வந் தொழாது கொழுநற் தொழு தெழுக" இல்லறப் பெண் ஞானம் அடைந்ததும், தாய் தந்தையரைத்

தொழுது, கண்கண்ட தெய்வங்களாக அவரை மதித்து அன்பு செய்து கடமை காத்த இறைச்சிக் கடைக்காரன் உயர்நிலை பெற்றதும் எவற்றால்? தமது கடமையிற் தவறாது நின்ற அவர்களுடைய பணி வாழ்வு தவவாழ்வானது என்ற உண்மையையே நாம் இவற்றிற் கண்டு தெளிகின்றோம். தந்தை தாயர் தொண்டு மறந்த கொங்கணர், கடுந்தவம் செய்தாலும் கடமை மறந்து அவருக்கு ஞானம் ஒல்லாதாயிற்று.

இந்தக் கடமை மூலம் கடவுளைக் காணும் போதனை தான் வள்ளுவர் கண்டதும் வகுத்துக் காட்டுகின்றதுமான அறம். இல்லற இயல்பு துறவறத்தின் முற்பட்டுக் குறள் நூலிற் பயின்ற கொள்கையும் இதுவேதான். "இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றில் நின்ற துணைவன்" இல்வாழ்வான்; "தென்புலத்தார், தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்ற ஐம்புலத்தாறும்" ஓம்புகின்ற அருளறம் உடையவன் இல்வாழ்வான். அதனால் அவ்வாற்றல் குறைந்த மற்றைய நிலையினரிலும் அவன் உயர்ந்தவனாயிருக்கின்றான். அன்றியும் உலகப் பொது மக்களனைவரும் தம் வாழ்வோடு அறம் பயின்று உயிர்க்குறுதியைத் தேட இலகுவான வழி கொண்ட வாழ்வும் இல்வாழ்வாதலால் இயன்றவரை பல்லோர்க்கு இலகுவிற் பயன்தரும் அந் நிலையில் அறத்தினை நிலைப்படுத்த வள்ளுவன் முனைந்தான். அவன் கருத்துக்கேற்ற அறம் நிலைப்பட்ட வாழ்வினைத் தமிழரிடைக் கண்டு தன் பின் வழியோருக்கும் குறட் களஞ்சியத்துட் குவித்து வைத்தனன். "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" என்பது சீரிய இல்வாழ்வு பற்றிய அவனது முடிபான கொள்கையாகும்.

மனிதன் வாழப் பிறந்தவன். தனது சூழ்நிலையிற் காணும் இன்பங்களை யெல்லாம் வெறுத் தொதுக்கித் துன்புற்றுழல வேண்டிய நியதி அவனுக்கில்லை. ஆயினும் பெறுதற்கரிய மனிதப் பிறப்பை யெடுத்த அருந் தருணத்தைப் பயன் கொண்டு, உயிர்க் குறுதியைப் பெற அவன் தவறுதல் கூடாது. புற உலகில் நம்மை அறப் பண்பினின்றிழுக்கும் கருவிகள் எத்தனையோ உள. எனினும் அவைகளை நன் முறையிற் பயன் கொள்ளலே அறிவாளியின் செயலாகும். "இடுக்கண் வருங்கால் நகை செய்து" வாழ்வை இன்பப் படுத்தல் வேண்டும்; எந்த இன்னலிலும் நாம் மனிதப் பண்பு மறந்த ஈன நிலைக்குச் செல்லாது 'பசித்தாலும் புல்லைத் தின்னாத புலி' போன்ற சீலர்களாக இருத்தல் வேண்டும். இதனாலேதான் வாழ்வு இல்லற மாகவோ அன்றித் துறவறமாகவோ ஆகுக; அவற்றின் பண்பு மாத்திரம் மறவாது கருதப்படல் வேண்டும் — என்று பெரு ஞானிகள் கூறுகின்றார்கள்.

'மனைத்தக்க மாண்பு' பெறாத மனை வாழ்வும் 'அன்பகத்தில்லா உயிர் வாழ்வும்' இல்லறத்தார் கொள்ளத் தகாதவைகளாம். உயிரைச் செழிப்பிக்கும் அன்பு சார்ந்து, விருந்தினைப் பேணி 'வானத்து நல் விருந்தாக' நம்மை அமைக்கும் நிலையை இல்லறமே நமக்கு ஆக்கித் தருமானால் ஏன் அதனை நாம் இலகுவிற் பேணலாகாது. மக்களைப் பெற்றுப் 'பழி பிறங்காத பண்புடை' யராக அவரை வளர்த்தல் பெற்றோர் கடமை. இக்கடமையைச் செய்தலின் மூலம் இந்த உலகில் வேண்டிய புகழையும், மறுமைக்கு வேண்டிய இன்பத்தையும் அனைவரும் ஆக்கிக் கொள்ளலாகும். "தம்பொரு

ளென்ப தம் மக்கள்" என்று தாய் தந்தையரும், "இவன் தந்தை என்னோற்றான்" என்று உலகு புகழ் தலை மைந்தரும் கருத்திற் கொண்டு ஒரு இல் வாழ்வு நடக்குமானால் அனைத்தின்பமும் அங்கே மலரு மன்றோ!

சுற்றந் தழுவி, சூழ இருந்து இன்புகழ் கொண்டு வாழும் வாழ்வுக்கு ஈடுண்டோ! அந்த இன்ப அறவாழ்வினிலே வாய்மை பேணி, செல்வம் கல்வி புகழ் ஆகியவற்றாற் செருக்குறாது பணிவு கொண்டு பிறர் செய்யும் இன்னல்களுக்குப் பொறுமை காட்டி அவரையும் நம்மையும் நல்வழி செய்து வாழ்வோமானால் பிறவிக் கேதுவான ஆசை யானது படிப்படியே நம்மை விட்டு குறைந்து செல்லும். "அற்றது பற்றெனின் உற்றது வீடு" என்பது முதுமொழி.

விருப்பு வெறுப்பற்ற நிலையிற் பணி செய்து ஆசையை வேரறுக்க வேண்டுமாயில் "வேண்டுதல் வேண்டாமை யிலானடி" சேருதல் வேண்டும். நாம் விரும்பும் பொருள் கிடையாத காலைப் பெருந் துன்பம் பெறுகின்றோம்; வேண்டாத நோய், வறுமை, அவமானம் என்றவை நம்மைக் கூடும் போது துயர் பெருகுகின்றது. ஆகவே வேண்டுதலும் வேண் டாமையும், வேண்டாமெனின், அவை வேண்டா தானையே நாம் அடைதல் வேண்டும். அவனடிச் சார் பினல் இன்பம் பெருகி மனமாசு தீர்ந்து பிறவி நீங்கி அழியாத பேரின்பம் அடைந்து வாழ்வோம்.

பேரின்பம் என்ற சொல்லை எண்ணும் போது விரதங்களைப் பற்றிய நினைவும் உடன் எழுகின்றது.

உணவை யொறுத்து உடலை வருத்திக் கிடக்கும் தவ நிலையே விரதம் என்று கருதுவதினால், பலர் அதி லிருந்து நீங்கி வாழ முயலுகின்றனர். அறவழியைத் தவறாது கடைப் பிடிக்கக் கொள்ளும் உறுதிதான் 'விரதம்'என்பதை நம்மிற்பலர் உணர்வதில்லை."நோன்பு என்பது கொன்று தின்னாமை" என்று கூறப்படு வது ஒரு விரதம். "கள்ளாமை காக்க தன்னெஞ்சு" என்று கடைப் பிடித்தல் இன்னொரு விரதம். வாய்மை கொள்ளுதல் மற்றுமொரு பெரு விரதம். இப்படிப் பலவாயவற்றுள் எதுவாயினும் ஒன்றை மேற் கொண்டு காத்தால் மற்றையன அதன் தொடர்பாக வளர்ந்து செல்லும் என்பதும் அத்தகைய விரத மனைத்திலும் மேலானது வாய்மை வளர்த்தலே என்பதும் வள்ளுவரது தீர்ப்பு:

"பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம் பிற செய்யாமை செய்யாமை நன்று" என்று வாய்மையின் சிறப்பை எதிர் மறையிலும் அவர் வற்புறுத்திய பேருண்மை உணர்தற் பாலது. "வாய்மை யுளதேல் வளரும் தவமெதற்கு" என நீதி நெறி விளக்கந் தாரும் வாய்மையினைப் பெருந் தவமாகக் கருதினார். அகந் தூய்மை செய்வது வாய்மை. அதனால் உள்ளம் ஒளியுற்று நமது சொல்லும் செயலும் முறையே ஒளிபெற்றுயர்வுறும். பொய், களவு, கொலை யாவும் வாய்மையின் தொடர்பாக நீங்கலால் மறம் குறைந்து, அறம் வளர்ந்து செல்ல, நமது மறுமைக்கான நல் விதியையும் நாமே இங்கு விதித்து விடுகின்றோம். ஒருவன் செய்யும் நல்வினை தீவினைகளிலேயே அவனது எதிர்வாழ்வு நிர்ணயிக்கப் படுகின்றது. ஊழ்வினை உருத்து வந்து ஊட்டுங்காலை அதனை ஒழிக்கவும்

ஒண்ணாது, என்று அற நூலார் அனைவரும் ஒருமுகப் பட்டுக் கூறும் ஊழின் வலியினை மாற்றுதல் முடியா தாயினும், நமக்கு நாமே நல்லூழை யாக்குதல் முடி யும் என்பது வள்ளுவப் பயனிலே கண்ட தெளி வாகும்.

அறம் வளர்க்கும் நல் வாழ்வினால் நல்லூழை நாம் ஆக்கலாம் என்பதையும், மறம் படிந்த புலை வாழ்வு மறுமைக்கோர் இன்னலூழை அமைக்கின்ற தென்பதையும் நாம் அறிதல் வேண்டும். அறிந்தார் துயர்வுறார். தாமே யுணர்ந்து அறம் முயலுதலன்றி மற்றவரால் அது திணிக்கப்படக் கூடிய தொன் றன்று, என்பதை நன்குணர்ந்த பேராசிரியர் வள்ளு வனார், அதனாலேயே நாம் செய்ய வேண்டிய நல்லறங் களைக் கட்டளைப் படுத்தாது, தாம் கண்ட தமிழறத்தி னைக் கட்டுரைத்தல் போன்று அறவிதிகளை உணர் வார் புலங்கொள வைத்தனர். கடவுள் வாழ்த்தியலிலும் கூட இறைவனை வணங்க வேண்டுமென்று கட்டளை வகுக்க அவர் உளம் ஒருப் பட்டிலது: அதனால்,

"கற்றதனா லாயபயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்." என்பது போல கற் றார் உளம் உரைத்தக்க கட்டளைகளை யன்றி ஏவல் வினை முடிபு பெற்ற கட்டளை காட்டி அறம் வகுத்து வைத்திலர். இன்பத் தமிழகத்திலே தான் கண்ட வற்றை இனிதே கோவை செய்து வைத்தார். அவரது திருப்பணி அதுதான். வள்ளுவர் கண்ட தமிழறம் வள்ளுவப் பயனாக இன்றும் நம் கையில் உள்ளது. அது கொண்டு பயன் துய்த்து வாழ்தலும், தவிர்தலும் நம்மைச் சார்ந்ததாகும்.

---

# கண்ணோட்டம்

வித்துவான். பு. இராசக்கண்ணனர்

கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையா னுண்டிவ் வுலகு.

மக்கள் பெற்றுள்ள அரிய உடலில் மிகவும் அருமையான உறுப்பு, கண் ஆகும். ஆதலினலேதான் அறிவை விளக்கி உணர்வைப் பெருக்கும் கல்வியுடையாரைக் கண்ணுடையவர் என்ருர் வள்ளுவர். உறுப்புக்களால் பெயர் பெற்ற புலவர் பலரைச் சங்க இலக்கியத்துள் காண்கின்ரேம். குழல், இமை, வாய், மோவாய், கழுத்து, மார்பு, கால் ஆகிய உறுப்புக்களால் பெயர் பெற்ரேர் இருவரோ ஒருவரோ காணப்படுகின்றனர். தலையால் பெயர் பெற்ரேர் பலர். கண் என்னும் உறுப்புடன் தொடர்புற்றுக் கண்ணனர் எனும் பெயரினர் மிகப்பலர். இது கண்ணின் பெருமையை வலியுறுத்துகின்றது.

கண் என்ற சொல் உறுப்பாகிய பொருளையும் அவ்வுறுப்பின் தொழிலாகிய பார்த்தலையும் அறிவிக்கின்றது. இச் சொல்லைக் "கண்ணோட்டம்" என்னும் பொருளில் வள்ளுவர் பல இடங்களில் ஆண்டுள்ளார்.

கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்னேக்காச் சொல்

:—புறங்கூருமை.

கடுஞ்சொல்லன் கண்ணில னயின் நெடுஞ்செல்வம்
நீடின்றி ஆங்கே கெடும்.

:—வெருவந்த செய்யாமை.

காமமென ஒன்றோ கண்ணின்றென் நெஞ்சத்தை
யாமத்தும் ஆளும் தொழில்.

:—நிறையழிதல்

"கண்ணோட்டமாவது தன்னொடு பயின்றாரைக் கண்டால் அவர் கூறியன மறுக்க மாட்டாமை" என்பர் பரிமேலழகர். கண்ணோட்டம் எனும் தொடரைக் 'கண்ணோட்டம்' எனும் அதிகாரத்தில் ஏழிடங்களில் பயின்று வர அமைத்த வள்ளுவர் எதிர்மறை வினையுடன் 'கண்ணோடாதார்' எனப் பிறிதோரிடத்தும் உடன்பாட்டு வினையுடன் 'கண்ணோடல் வல்லார்' என மற்றோரிடத்தும் வினையெச்சப் பொருண்மை வரக் 'கண்ணோடி' என வேறோரிடத்தும் அமைத்திருப்பது காணற்குரியது; ஒரு குறள் தவிர்த்து ஒன்பது குறளில் 'கண்' என்னும் சொல்லும் 'கண்ணோட்டம்' எனும் தொடரும் பொதிந்து நிற்கச் செய்த வள்ளுவரின் கருத்து நினைந்துகொள்ள வேண்டியதொன்றாம்.

உலகில் வாழ்வோர் ஆகிய மக்களுள் குற்றத்தின் நீங்கியும் குற்றத்தை நீக்கியும் வாழவேண்டும் எனும் முயற்சியுடையோரே சிறந்தோராவர். முயற்சி எவ்வளவினதாயினும் குற்றம் ஒவ்வொரு வேளை நிகழ்தல் கூடும். ஒவ்வொரு கால் தவறுதிருத்தற்கும் இல்லை. அவ்வாறு நேர்ந்துவிட்டால் மன்னிக்கத் தக்கவற்றை மன்னிக்க வேண்டியது யாரிலும் தாங்குவோர் கடமை என்பதை வற்புறுத்துவதே கண்ணோட்டமாகும்.

கண்ணோட்டத்தினை 'அழகு' என்றார் வள்ளுவர். பண்பட்ட நலம் கனிந்த உயிருக்கு அழகாக அமைவது கண்ணோட்டம். உயிரோடு பிணைந்த பண்பு, கண்ணோட்டம். இப் பண்பு இல்லையேல் ஆள்வோர்

மக்களை அவலத்திற்குள்ளாக்க அவர்கள் புலி வாய்ப்பட்ட மான்போலத் துடித்தயர்வார். அத்தகைய துன்ப நிலை இல்லாமல் மக்கள் வாழ்ந்தால் உலகியலும் செம்மையாக நடைபெறும். ஆதலின் உலக நடை முறைக்கு, ஆளுகின்றவர்களிடம் அமைய வேண்டிய இன்றியமையாப் பேரழகுப் பண்பு இக் கண்ணோட்ட மாகும்.

மக்களாகப் பிறந்தோர் தம் நலத்துடன் நில்லாது பிறர் நலம் கருத முற்படும் வேளையில்தான் மக்களாகின்றார்கள். அவ்வாறு சிறத்தற்கு ஒப்புரவு செய்தல், புறந்தருதல் பிழைத்தன பொறுத்தல் எனும் பண்புகள் தேவை ஆகின்றன. இவற்றை ஆள்வோரே மக்களாவர். இவற்றோடு தொடர்பின்றி வாழ்வோர் பிறருக்குப் பயன்படா வாழ்க்கையினை உடையராகி வீண் சுமை ஆவார்கள்.

கண்ணிற்கு இன்றியமையாப்பண்பு கண்ணோட்டம் என அடுத்துப் பேசப்படுகின்றது. கண்ணோட்டம் இல்லாத போது கண்ணினால் எப்பயனும் விளைவு இல்லை. அவை முகத்தில் இருப்பன போல் காணப் படுகின்றன. தெளிவாகப் பண்படாக் கண்கள் புண்களே.

பாடப்படுகின்ற பாட்டுடன் இயைந்து நில்லாத வழிப் பண் பயன்படுவதில்லை. பண்ணும் பாட்டும் ஒன்றிக்கூடி நிற்கும் போதுதான் பண் இன்புறுட்ட முடிகின்றது. அது போலவே கண்ணிற்கு அணிகல மாய்ச் சிறக்கும் கண்ணோட்டத்துடன் பொருந்தி நிற்கும் வேளையில்தான் கண்ணும் பயன் படுகின்

[illegible]

[illegible] தம் தொழிலைச் செய்யாத [illegible] இடத்தைவிட்டு [illegible] இயலாதவனாவான். காலை இல்லாதவன் [illegible]யைவிட்டுத் தம் தொழிலைச் செய்யாத கால்களைப் பெற்றவன் நிலை வருந்துதற்குரியதே.

மரம் அடர்ந்த காட்டின் வழி ஒருவன் வருகின்றான். மக்கள் நடந்து பழகிய காடு அது அன்று. பல வகைக் கொடிகள் செறிந்து மரங்களோடு பின்னிக் கிடக்கின்றன. இக் காட்டிடை வருவோன் செடிகளையும் கொடிகளையும் அடர்ந்த தூறுகளையும் தள்ளித் தள்ளி வழிகண்டு வருகின்றான். அவ்வேளையில் சிங்கம் ஒன்று இவனை நோக்கிப் பாய்வதாயின், இவன் என்ன செய்வான்? ஓடுதற்குத்தானே முயல்வான். ஓடி உய்ய வழி இல்லையாயின் மரத்தின் மேலே ஏறியாயினும் அவ் விலங்கினின்றும் பிழைத்துக் கொள்ள முயல்வான் அன்றோ? உயிர் பிழைத்தவனானால் அவனுக்கு எதிர் கால வாழ்க்கை அளித்தவை கால்களும் கைகளுமே. மரத்தைப் பற்றிக் கொள்ளக் கைகளும், ஏறுவதற்குக் கால்களும் துணை புரியாதிருந்தால் அவன் இறந்தவன் தானே! தம் தொழிலைக் கை கால்கள் செய்தமை [illegible]ன் அவன் உயிர் வாழ முடிகின்றது. அவ்

[illegible]

[illegible] கண், [illegible] வேண்டும், [illegible] அ[illegible] [illegible].

கண்ணோடாது முறை எவ்வாறு [illegible] வேண்டியவர். இவர்கட்கு இனத்தார் என்று பலவாறாக நினைத்துக் கொண்டு கண்ணோடுதல் முறை அன்று. தம்மோடு பயின்றவர்களைப் பொறுத்துக் கொடுமை விளைத்தபோது விளைக்கப்பட்ட கொடுமைக்கேற்பத் தண்டம் வழங்க வேண்டியதே கடமை; அவ்வாறின்றிக் கண்ணோடி அவரை ஒறுககாது விடுதல் குற்றம் ஆதலின் செய்யப்பட்ட குற்றத்தின் திறத்தை செம்மையாக ஆராய்ந்து காண வேண்டும். நடுநிலைமையினின்றும் சிறிதும் பிறழாது கருத வேண்டும். அவ்வண்ணம் ஆராய்ந்து கருதி முறை செய்தலாகிய செயலுக்குச் சிறிது மாறுபாடும் தோன்றாத முறையில் கண்ணோட வேண்டும்.

கண்ணோடும் முறை மிக அருமையானது. மேற்கோள் முறையில் பண்டைச் சங்க கால நிகழ்ச்சிகள் பலவற்றைக் கருதலாம். அவற்றுள் ஒன்று சிறந்து நிற்கின்றது. சேர மன்னன் நெடுஞ்சேரல் இரும்பொறை வாழ்கின்றான்; அவன் சிறந்த வீரன்; அவனுடைய முரசு வெளியே சென்றிருக்கின்றது. முரசு கட்டில் தூயது; பிறர் தொடுதற்கும் கூடாதது. அக் கட்டிலில், மோசிகீரனார் என்ற தமிழ்ப் புலவர் படுத்து உறங்குகின்றார். மோசியின் செயல் மன்னன் வீரத்திற்கே மாசூட்டும் செயல். இதற்குத் தரப்பட வேண்டிய தண்டனை உறங்கியோனை இரு துண்டமாக்குதலே. கண்ட சேரன் கண்ணோட்டம் உள்ளவன்.

கடுஞ் செயலெனக் கண்டித்துத் துண்டமாக்காது முழவனைய தோளினை ஓச்சிக் கவரி வீசினான். துயிலெழுந்த புலவன் சொற்களில் மன்னனின் மாண்பு வெளிப் படுகின்றது. புலவன் குற்றம் மன்னிக்கும் எல்லையில், மன்னவன் எல்லையில் இருந்தமையும் கண்ணோடிக் காவலன் பெற்ற பெருமையும் இங்குத் தெளிவாகின்றன.

அன்பு அறத்திற்கும் மறத்திற்கும் துணை ஆவதைப் போலக் கண்ணோட்டம் அறிந்து பழகியார்க்கே அன்றிப் பகைவரிடத்தும் காட்டப் பட வேண்டியதாம். தம்மை ஒறுத்துத் துன்புறுத்தும் இயல்பினராயினும் தம் மெல்லையில் வந்து சிக்குவோராயின் காலம் வாய்த்தது எனக் கருதி அவருக்குத் துன்பம் இழைக்காது கண்ணோடி அவர் முன் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளல் தலை சிறந்த இயல்பாகும்.

இனி, இறுதியாகக் கண்ணோட்டத்தின் இறுதி வரையறை வள்ளுவரால் கூறப் படுகின்றது. நாகரிகம் எனும் சொல்லைக் கண்ணோட்டம் என்னும் சொல்லுக்குப் பதிலாகப் பயன் படுத்துகின்றார் வள்ளுவர். தமக்கு வேண்டியவர் ஒருவர் தம் கண்காண நஞ்சினைக் கலந்து "அருந்துக" எனத் தருகின்றார்; தந்தாரின் நெஞ்சம் வருந்தா திருக்க வேண்டும் என அதனை அருந்தி அதனைத் தந்தவர்களிடமும் கலந்திருத்தலே கண்ணோட்டத்தின் இறுதி எல்லைக் கோடாகும்.

பெயக் கண்டு நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டுபவர்.

# தெரிந்து வினையாடல்

சொ. முருகப்பா

நம குலமுதலாக விளங்கும் திருக்குறட் கருவூலத்திலிருந்து சில நாணயத்தைக் காட்டும்படி எழுந்தது அன்பர் வேண்டுகோள். அதுவும் இத்தனையது எண்ணுள்ள பையிலிருந்து காட்டுக என்றும் குறிப்பிடப்பட்டது. அழியாச் செல்வம வளர் செல்வம் குறைவின்றி நிறை செல்வம செந்தமிழ்ச் செல்வம் படைத்துள்ள நாம அத்தெய்வத் திருக்குறளில் கைவைத்து அள்ளிக் கொடுக்க என்ன தடை? அணுவுக்கு அணுவாகவும், அண்டத்துக்கு அண்டமாகவும் கடவுள் விளங்குகிறார் என்பர். நூறுக நூறாக நுண்ணறிவிற்கு விருந்தாகியும், விரிக்க விரிக்க விரியும் பெருந்தகவு முள்ள திருக்குறளை 'ஆலமர் வித்தின் அருங்குறள்' என்றார் கம்பர் பெருமான். திருவள்ளுவப் பெருந்தகையாகிய 'அவனே புலவன் அவனே அறிஞன், அவனே தமிழை அறிந்தோன' அவனருளாலே அவன் தாள் வணங்கிக் கட்டுரையைத் தொடங்கலாம்.

மக்கள தொகுதியை நேரிய வழியில் நிறுத்தி, குறைகளை நிறைவு செய்து, அறிவைப் பெருக்கி, வாழ்வைப் பண்படுத்திப் பாதுகாத்தற் பொருட்டு அரசு முறை காணப் பட்டிருக்கிறது. மக்கள் வாழ்வு தனித்தியங்குவ தன்று. கூடி வாழ்வதே யாகும். கூடி வாழும் போது நெறி வகுத்துக் கொள்வது இன்றியமையாத தன்றோ? இந்த

அரசுமுறை நெறியை எத்தனையோ ஆயிரம் ஆண்டு கட்கு முன்பே தமிழக மக்கள் உணர்ந்து இனிதாக அமைத்து வாழ்ந்து வந்திருக்கின்றனர். அந்த வாழ்க்கை நெறியையே வள்ளுவர் பெருமான் வகுத்துக் காட்டியுள்ளார்.

அரசன் தனி நின்று நாட்டை ஆளல் இயலாத தொன்று. அரசியலில் பல துறைகளுண்டு. கல்வி, தொழில், காப்பு முதலிய பகுப்புப் பல. ஒவ் வொரு துறையிலும் பயின்று தேர்ந்த பலர் இருந்து பணியாற்றல் வேண்டும். எனவே அரசாளுந் தொழி லுக்குத் தலைவனாக அரசன் இருப்பினும் செயலாற்றப் பலர் தேவை. செயலாற்றுபவர்களைத் தேர்ந்தெடுத்தலும் அவர்களைக் கொண்டு திறம்பட ஆட்சி நடை பெறச் செய்தலும் எவ்வாறென்பதைக் கூறும் பகுதியே 'தெரிந்து வினையாடல்' என்னும் அதிகார மாகும். அதிகாரியைத் தேர்ந்து நியமித்து அவனைக் கொண்டு செயலாற்றி நாட்டை ஆளுதல் என்பது பொருள்.

நியமிக்கப்படும் உத்தியோகஸ்தன் தன் முன் னுள்ள காரியங்களை நோக்கி இது ஆகும், இது ஆகாது என்பதை உணர வல்லவனாக இருக்க வேண்டும். செய்யப்பட வேண்டிய செயலை நோக்கும் போதே இந்தத் தெளிவு ஏற்படா விட்டால் ஆகாத காரியங் களில் முற்பட்டு, பொழுதையும் முயற்சியையும் வீணாக்கி விடுவான். ஆகக் கூடிய செயலானாலும் அதன் பயனாக ஏற்படும் முடிவு நன்மை தருமா என் பதைத் தீர்மானிக்கும் ஆற்றலையும் அவன் பெற் றிருத்தல் வேண்டும்: அன்றேல் எதையாவது தொடங்கித்

துன்பத்தை விளைப்பான். இதனை அரசன் சோதித்தறிதல் இன்றியமையாதது.

நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும்.

* * *

இவ்வாறு சோதித்தறிந்தபின், ஏற்றுக் கொண்ட துறையின் வருவாயைப் பெருக்கி, வருவாயும் பணியும் வளங்குறையாது இயங்கும்படி செயல்களைச் சீர் செய்யும் திறமை யுடையவனே பணி செய்யத் தகுதியுடையானென்பதை உணர வேண்டும். ஒரு துறையின் தலைமை உத்தியோகஸ்தனாக அமர்பவன் அத் துறைக்கு வேறு துறையி லிருந்து செலவுக்குப் பொருளை எதிர்பார்ப்பானானால் அத்துறை நீண்டு சென்று நிகழ்தல் இயலாததாகும். எனவே அத்துறைக் கென வருவாயை உண்டாக்க வேண்டும். அவ் வருவாய் சரியானபடி பயன் தரும் வழியில் செல விடப்படவும் வேண்டும். செய்யும் செலவினால் அத்துறை மேலும் வருவாயுடையதாக வளரும்படியும் கவனிக்க வேண்டும். உதாரணமாக, நிலத்தைக் கண்காணிக்கும் உத்தியோகஸ்தன் நிலத்தின் வரும்படியில் வரியை நிர்ணயிக்க வேண்டும். அவ்வரியைக் கொண்டு பாசன வசதி முதலியவற்றைச் செய்ய வேண்டும். செய்யும் செலவெல் லாம் போக, பொருள் மிச்சப்பட வேண்டும்.

இனி அந்நிலத்தில் விளையும் பொருள் தகுந்த வரு வாயை நல்கவேண்டும். அதுவுமல்லாமல் நிலம் உரத்தா லும் காவலாலும், வளங்குறையாது பெருகியிருக்க வேண் டும். ஓராண்டிற் செலவிட்டுக் கட்டப்பட்ட ஏரி முதலிய பாசனவசதிகள் நிலைத்திருக்க வேண்டும். இவையே

வளம் படுத்தலாம். ஒவ்வொரு 'துறையிலும்' இவை போன்றன கவனிக்கப்படுதல் வேண்டும். செய்யும் செலவு அற்றைக் கூலியாக முடியாமல் தொடர்ந்து நிற்கும் தன்மையுடையதாகச் செய்தல் வேண்டுமென்பதாம். அவனே செயலாற்றத் தக்கவனாவான்.

வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை.

வினையை ஏற்பவன் நான்கு குணங்களை உடையவனாக இருத்தல் வேண்டும். அரசனிடத்தும் மக்களிடத்தும் அன்புடையனாக இருக்க வேண்டும். தான் ஏற்கும் தொழில் துறையில் அறிவுடையனாக இருப்பதன்றி பொது அறிவு பெற்றவனாகவுமிருக்க வேண்டும். ஏதாவது எதிர்ப்பு கேடு உண்டாகும் போது கலங்காதிருக்க வேண்டும். அதிர்ச்சி யேற்பட்டால் 'ராஜீநாமா' செய்கிற புத்தி இருத்தலாகாது. பேராசை நாட்டம் கூடாது. இக்குணங்கள் உத்தியோகஸ்தனுக்கு இன்றியமையாதன. இந்நான்கில் ஒன்றில்லா விடினும் உத்தியோகம் சிறவாது; பயன்தராது; தீமையையும் தரும்.

அன்பு—அறிவு தேற்றம் அவாஇன்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு.

0 0 0

மேற்கூறிய வாற்றால் இன்ன தன்மையுடையவனையே உத்தியோகஸ்தனாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று பொது இலக்கணங் கூறப்பட்டது. எத்தனை சோதனை வைத்துப் பார்த்து மனிதனைத் தேர்ந்தெடுத்துவிட்டாலும் அந்தத் துறையின் நடவடிக்கை சரியாக நடந்துவிடுமென்று கவலை முடிக்கொண்டு நம்பிவிடலாமா என்றால் இயலாதென்கிறார். எப்படிப்பட்ட நல்ல

வரும் சந்தர்ப்பங்களால் மாறிப்போவதும் உண்டு. செல்வத்தையும், பதவியையும் பெற்றபோது மனம் நிலைத்து நேர்மைவழியில் நிற்குமென்று நம்பிவிட முடியாது. பலருடைய மனமும் சந்தர்ப்ப மில்லாதபடியால் நேராக நிற்கிறது. அப்படி நிற்கிற மனம் திரிதல் கூடும். அதிகாரம் கைக்கு வந்தபின் நிலையாறு இருக்கிறானா என்பதை அரசன் கவனித்தல் வேண்டும். அறிந்து அப்படி மாறுபடுபவனை ஒழிக்க வேண்டும்.

> எனைவகையால் தேறியக் கண்ணும் வினைவகையான்
> வேறாகும் மாந்தர் பலர்.

0 0 0

திறமைசாலியாக இருப்பான். அன்பு அறிவு தேற்றம் அவாவின்மை எல்லாம் இருக்கும். இவை இருந்தாலும் எத்துறை அவன்கண் விடப்படுகிறதோ அத்துறையில் அவனுக்குப் பயிற்சியும் பழக்கமும் இருக்க வேண்டும். அல்லாமல் ஏதோ ஒன்றில் பழகியிருப்பதன் பொருட்டு, நற்குணங்கள் பலவும் இருக்கிறதென்று கருதி, வேறு ஒரு துறையில் அவனை ஈடுபடுத்தலாகாது. சேவைத் துறையிலே பயிற்சிபெற்றவனை விவசாயத் துறையிலே நியமித்தல் பிழையாகும். பொதுத் திறமையையும் குணத்தையும் கருதித் தெரியாத்துறையில் ஈடுபடுத்தலாகாது.

> அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
> சிறந்தானென் றேவற்பாற் றன்று.

0 0 0

நிலைத்த பணிசெய்வார் ஒருபுற மிருக்க, குறிப்பிட்ட காரியத்துக்காக நியமிக்கப் படும்போது கவனிக்கப்பட வேண்டியான சில உண்டு. குறித்த ஆளைப்பற்

றிக் கவனிக்க வேண்டும். அடுத்து அவனை ஏவும் வேலையின் தன்மையைக் கவனிக்க வேண்டும். தொடங்கி முடிக்கும் காலத்தை நோக்க வேண்டும். உதாரணமாக, மழைநாளில் போர் கூடாது. எதிரிக்கு வலி மிகுந்துள்ள போது எதிர்த்தல் ஆகாது. தன்நாடு குழம்பியிருக்கும் போது வெளியாரை எதிர்க்க நினைத்தல் கூடாது. ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு செல்லக் கூடிய காலத்தில் பாலங் கட்டத் தொடங்கலாமா? காலங் கருதிக் காத்திருக்க வேண்டுமே யல்லாது, நினைத்தபோது நினைத்த காரியத்தில் இறங்குதல் ஆகாது. திறமைசாலியாக இருப்பான் ஒருவனை ஈடுபடுத்தும் காரியம் காலத்தின் பயனாகத் தீமை பயத்தலும் கூடும். அரசியலில் தலையிட்டு நிற்கும் ஒருவன் கொள்கையால் ஒரு கட்சியிலிருப்பான். அவனை மாறுபட்ட கொள்கையுடையானிடம் அனுப்புதல் பிழையாகும். உதாரணமாக, ஒருவன் திறமைசாலியாக இருக்கலாம்; நல்லவனாகவுமிருக்கலாம். சிறந்த தொழிலாளர் தலைவனாகவும் இருக்கலாம். ஏதோ ஒரு கருத்தை ஓரிடத்தில் தெரிவித்திருப்பான்; அக்கருத்தும் நல்லதாக இருக்கலாம். அதன் பொருளைப் பிறழ உணர்ந்து தொழிலாளர் கூட்டம் மாறுபட்டிருக்குமானால், அப்போது அவர்களிடையில் எக்காரியங்கருதி அனுப்பப்பட்டாலும் விபரீதமான விளைவே ஏற்படக் கூடும். அக்கருத்து வேறுபாடு நீங்கும்வரை குறிப்பிட்ட ஆளின் திறமை இத்துறையில் நல்ல பயன் தராது. இப்படி எவ்விஷயத்திலும் எவர் விஷயத்திலும் காலங் கருதல் வேண்டும்.

செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்.

ஒரு காரியத்தில் ஒருவனை ஈடுபடுத்தும்போது, இக் காரியத்தை இன்ன உதவியால் இவன் முடிப்பான் என்பதை யெண்ணிப் பார்த்து அதனை அவனைக் கொண்டு செய்ய முற்படவேண்டும். எப்படியாவது இவன் இதனை முடித்துவிடுவான் என்று பொதுவாகக் கருதுதல் கூடாது. தவிர, ஒருவனைத் துணிந்துவிட்டால் அச் செயலை அவன் பொறுப்பிலேயே விட்டுவிட வேண்டும்; இடையில் எவரும் புகுந்து குழப்பக் கூடாது. ஒரு காரியத்தை முடிப்பதற்கு ஒவ்வொருவர் ஒவ்வொரு வழியை—சூழ்ச்சியைக் கையாளுவர். அவ்வழியில் பிறர் புகுந்து குழப்ப இடந்தரலாகாது. முதலிலேயே தெரிந்து நம்பி, விட்டுவிட வேண்டும்.

> இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து
> அதனை அவன்கண் விடல்.

0 0 0

வினை செய்தற்கு உரியவனென்று நிச்சயித்து பிறகு அவனுக்குப் பூரண அதிகாரங் கொடுத்து விட வேண்டும். அத்துறையில் நேரும் எதிர்ப்பு முதலியவற்றை எதிர்க்க உரிமை வேண்டும். தடையேற்படும் போது மேலிடத்து உத்தரவுக்காகக் காத்திருக்கக் கூடாது. தன் போக்குக்கு எதிராக மேலேயிருந்து இடையில் உத்தரவு வர இடமிருத்தலாகாது. அப்படி ஒரு முறை மறிக்கப்பட்டாலும் அப்பால் எதையும் செய்ய அவனுக்கு ஊக்கமிராது. பொதுமக்களுக்கும் அந்தச் செயலாளனிடம் மரியாதை ஏற்படாது. ஒருவேளை அவனிடம் கொடுத்த வேலையைச் செய்வதற்கு வேண்டும் தகுதியிற் சிறு குறையிருப்பின் அதை நிறைவு செய்யப் பயிற்சி யளிப்பதும் இன்றியமையாததாம். எப்படியும்

கொடுத்த காரியத்தைத்தானே செய்தற்கு வேண்டிய தகுதியை அவனுக்கு ஏற்படுத்த வேண்டும்.

> வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
> அதற்குரிய னாகச் செயல்.

0 0 0

தன்னால் நியமனம் பெற்றவன் செய்யும் காரியங்களில் ஐயப்பட்டு வேறுபாடு கருதுவானாயின் செல்வமிழந்து வறுமையடைய வேண்டியதைத் தவிர வேறில்லை. ஒருவன் முனைந்து வினையாற்றும்போது, அதனால் இடருற்றவரும், பொறாமைப்பட்டவரும் அரசனிடம் கோள்மூட்டுவர். அதனைக் கேட்டுச் சிறு மாறுபாடு—ஐயம் கொண்டாலும் செய்யப்படும் வினை கலங்கிப் போகும். செய்வானது ஊக்கம் குன்றும்; செயல் முற்றுறாது. பின்னர் தகுதியுள்ள எவரும் அரசனை நம்பி வேலைக்கு உடன்படார். இதனை "தேரான் தெளிவுந் தெளிந்தான்கண் ஐயுறவும், தீரா இடும்பை தரும்" என்ற குறளும் வற்புறுத்தும்.

> வினைக்கண் வினையுடையான் கேண்மை வேறாக
> நினைப்பானை நீங்கும் திரு.

0 0 0

இத்தனை கவனிப்பு ஏன் வேண்டுமென்றால், ஒரு உத்தியோகஸ்தன் செய்யும் தவறுதலால் உலகமே நலிவுக்குள்ளாகும் என்பதாம். உத்தியோகஸ்தன் நேராக நடக்கிறவரை மக்களும் நேராக நடப்பர். உத்தியோகஸ்தனின் நிலை ஒழுங்காகச் செல்லும்படி கவனித்துக் கொண்டிருப்பது அரசனின் கடமையாகும். அவ்வாறு கவனித்துக் கொண்டிருந்தால் உலக மக்கள் அனைவரையும் கவனித்ததாகிவிடும். சிறந்த பண்பும் செயல் திற

ளும் கொண்ட வினையாளர்களை அமர்த்தி, செம்மையாக நடக்கும் வினையாளனையும் நாடோறும் அரசன் கண் காணித்து வரவேண்டும்.

> நாடோறும் நாடுக மன்னவன் வினைசெய்வான்
> கோடாமை கோடாது உலகு.

0 0 0

இவை அரசனை நோக்கிக் கூறப்பட்டிருப்பினும் உலகில் வேலையாள் வைத்துச் செயல்புரியும் பலரும் நோக்கிக் கையாள வேண்டிய அறமே இங்குக் கூறப் பட்டதெனக் கருதல் வேண்டும். இப்பத்துக் குறளிலும் கூறப்பட்டுள்ள அறம், வினைசெய்வான் பக்கல் நோக்கிக் கையாளத்தக்க வழிவகைகளாகும். ஆனால் இத்தனை இலக்கணமும் அமைய ஆள் அமைவதும், அவனை வைத்து வேலைவாங்கக் கூடிய ஒரு தலைவன் அமைவதும் எளிதன்று. இலக்கணங் கூறவந்த வள்ளுவனார் இலக் கணத்தை முட்டமுடியக் கூறியுள்ளார். இதைக் குறிக் கோளாகக் கொண்டு இயன்ற வரை செயலாற்ற முயலு தல் வேண்டும். வேலையாளைப் பற்றிப் பாரதியார் கூறி யுள்ள அடிகள் இங்கே நினைவு கூறத்தக்கன. 'சேவக ராற்பட்ட சிரமம் மிக உண்டு கண்டீர், சேவகர் இல்லா விடிலோ செய்கை நடக்கவில்லை' என்றார். எனவே அகப்பட்ட ஆளை வைத்து இணங்கினவரை வேலை வாங்குதல் இன்றைய நிலையாக இருப்பதை அறிகிறோம். அதனால்தான் எந்தக் காரியமும் உரம் பெற்றுப் பயனளிப்பதாக இல்லையென்பது கவனிக்கத்தக்கது.

# வள்ளுவரும் பிறரும்

"கணேசு"

காலத்தையும் இடத்தையும் பொறுத்தே சான்றோர்களின், முடிவுகள் தோன்றுகின்றன. சூழ்நிலையைச் சார்ந்தே அவர்கள் கருத்துக்கள் அமையும். நாடு, மக்கள், சமூக அமைப்பு ஆகியவை மக்களின் எண்ணங்களை உருவாக்குகின்றன. எனவே அக்கருத்துக்கள் அனைத்தும் எக்காலத்திற்கும் எவருக்கும் பயன்படும் என்றும் கூறிவிட முடியாது.

சிவிகை பொறுத்தானும் ஊர்ந்தானும் இன்று, வானவூர்தியைச் செலுத்துவோனும் செல்பவர்களும் உள்ளனர். உழைப்பைக் குறைக்கும் பொறிகளில் பல இன்று தோன்றி ஊழின் பயனை நுகர்பவன் தரத்திலும் மாற்றத்தைச் செய்துள்ளன. ஊழைப் பற்றிய புதிய கருத்துக்களையும், அதன் அடிப்படையில், எண்ணத்தில் மாற்றங்களும் தோன்றும் வழியைக் காலம் கொணர்ந்துளது.

நாட்டின் தட்ப வெப்பத்தைப் பொறுத்து உணவு அமைகின்றது. உணவைப் பொறுத்து ஒழுக்கமும் தோன்றுகின்றது.

புல்பூண்டருகிய பனி நிறைந்த துருவப் பகுதியில் வாழ்பவன் கண்ணப்ப நாயனார் உணவினைக் கொள்கிறான். வெப்ப மிகுந்த பகுதியில் வாழும் சிலர் புலாலை விரும்பி உண்பதில்லை. அவர்களின் உடலுக்கும் உள்ளத்திற்கும் ஒவ்வாததாகவும் அது உளது. உழவுக்கு உறுதுணையாக இருக்கும் எருதினையும் அவனுக்குப் பாலூட்டி வளர்க்கும் பசுவினையும்

கடவுள்களைப் போற்றி வருகிறேன். [illegible] தொரு காட்டி [illegible] உலகின் பெரும் [illegible] தாயும், புலவர் போற்றி [illegible] வெவ்வேறு [illegible] ஒருவருக்கு இப்படிப் [illegible] களைப் [illegible] வேறு பலரும் [illegible] இடம், [illegible] வேற்றுமை [illegible] பின் கருத்தில் [illegible]

இவற்றைத் தவிர, [illegible] உருவாக்கப்பட்டது, [illegible] பட்ட பண்புகள் [illegible] நாளும் மக்கள் [illegible] விரும் போன்றவற்றைக் [illegible] அமைப்போ மாற்றுவதில்லை. இவை பற்றிய [illegible] கருத்துக்கள்தான் பல நாட்டு மக்களால் போற்றப் படுகின்றன. கம்பன், கதே, ஷேக்ஸ்பியர், டால்ஸ்டாய், மகாத்மா காந்தி போன்றவர்களின் நூற்களும் கருத்துக்களும் போற்றப் படுதற்குக் காரணம் இப்பொதுப் பண்புகளே. ஆசிரியரின் அரசியலிலும் முடிவுகளிலும் கருத்து வேற்றுமை இருப்பினும் சோவியத் ருஷ்யாவின் மெக்சிம் கோர்க்கியையும் சீனாவின் லூசூனையும் அறிஞர் பலர் போற்றுதல் இது குறித்தே.

கருத்து ஒருமைப் பாடுகள் மிகுதியாக விரும்பப் படுதைப் பொருத்து நூலின் சிறப்பு உளது.

ஷேக்ஸ்பியர் புகழ் எங்கும் போற்றப்படுவது இதனாற்றான். இத்தகைய அளவு கோலைக் கொண்டு பார்ப்பின் தமிழ் மறையெனப் போற்றப்படும் பொய்யாமொழியாரின் திருக்குறளில், காலம் இடம் சுற்றுச்சார்பு கருதி வேறுபாடுடைய கருத்துக்கள் சிலவே யுள்ளன எனினும் பலரும் போற்றும் ஒருமைப் பாடுகள் நிறைய உள்ளன.

திருக்குறட் கருத்துக்களை யொத்தவை பிற நாட்டறிஞருரையிலும் காணப்படுகின்றன. உபநிடதம், சாணக்கியரின் பொருள் நூல், வாத்சாயனரின் இன்ப நூல் இவற்றினையே வள்ளுவர் அறம், பொருள், இன்பமென வகுத்து நூலாக்கினர் என்றும் சிலர் கூறுகின்றனர். அதைப் போன்று அப் பிறநாட்டாரு களின் கருத்துக்கள் திருக்குறளைப் பயின்றதால் தோன்றின வென்றோ, அன்றி அவர்களதைத் திருவள்ளுவர் கையாண்டார் என்றும் கூறிவிட முடியாது. அங்ஙனம் கருத்தொத்த சில உரைகளைக் காண்போம்.

தீமை செய்த பகைவர்களை வெல்ல தீயனவே செய்யாது நெருப்பிலே நீரை விடுவது போல அவர்கட்கு நன்மையே செய்தல் வேண்டும் என்பதைத் தமிழ்மறை

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்"

எனக் குறிக்கின்றது.

இக் கருத்தினையே கிறித்தவர் மறையான விவிலியத்திலும் காண்கிறோம்.

'உன் பகைவன் பட்டினியுடனிருந்தால் அவனுக்கு உணவிடு; அவனுக்குத் தாகமாக இருந்தால் நீரளி; அங்ஙனம் நீ செய்வதினால் அவன் சிந்தையைச் செம்மையாக்குகின்றாய்'

(புதிய ஏற்பாடு, ரோமர்கள் 12—20)

உணவின் தேவையையும், அதனை விளைவிக்கும் உழவர்களின் பெருமையையும் இன்றைய உலகம் இப்பொழுதுதான் புரிந்துகொண்டு வருகிறது. நாட்டின் பொருளாதார நிலையை உள்நாட்டு உணவுற்பத்தியைப் பெருக்குவதன் மூலமே சமன் செய்ய முடிகிறது என்பதை அரசாங்கங்கள் உணர்கின்றன. உணவைப் பெருக்குங்கள் என உழவர் பின் சென்று ஊக்குவிக்கின்றன. நாட்டின் கல்வி கலை முதல் பாதுகாப்பு வரை அவர் மேழியிலே நிலைத்திருக்கிறது என்பதை உணர்கின்றனர்.

"உழுவார் உலகத்தார்க் காணிஅஃ தாற்றா(து)
எழுவாரை எல்லாம் பொறுத்து"

என்பதை அறிகின்றனர். இதனை நூறாண்டுகட்கு முன்னிருந்த டானியல் வெப்ஸ்டர் என்ற அமெரிக்க அறிஞரும்,

'உழவு தொடங்குமாயின், பிற கலைகளும் தொடர்கின்றன. உழவர்களே மக்கள் நாகரிகத்தின் அடித்தளமாவர்' என வலியுறுத்துகின்றார்.

இருவரிடையே தோன்றும் நட்பு வெறும் புகழ்ச்சியில் மட்டும் நிலைபெற்றுவிடக் கூடாது. நற்பண்புகளைப் போற்றி வளர்த்தல் நன்று. எனினும் தீய பண்புகள் நண்பர்களிடையே தலைகாட்டு மிடத்து அதனை எடுத்துக்காட்டி மீண்டும் அந

தோன்றுதவாறு செய்தலே உயர் நட்பின் இலக்கணம். ஒருவரின் குணங்களை அவர்கள் தாமே அறிந்து கொள்ள முடியாதிருக்கலாம். அவற்றை நண்பர்களே கண்ணாடியினைப் போன்று அம்மாசினைக் காட்டி களைந்து தூய்மைப் படுத்தல் வேண்டும்.

'எவ்வளவிற்குக் குறைவாக நாம் நம் நண்பர்களைப் புகழ்கின்றோமோ அவ்வளவிற்கு நாம் நண்பர்களிடம் அன்பு செலுத்துபவர்களாவோம். குற்றங் குறைகளை அவ் இரக்கமின்றி எடுத்துக் காட்டு மிடத்தில்தான் உண்மை அன்பு உளது' என பிரெஞ்சு நாடக ஆசிரியரான மோலியேர் கூறுவது,

'நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்
மேற் சென்றிடித்தற் பொருட்டு'

என்ற குறள் மணியை எவ்வளவு ஒத்திருக்கின்றது!

அறிவும் பொருளும் தற்போதைய உலக அமைப்பில் ஒன்று கூடுவதில்லை. பொருள் படைத்தார், அறிவும் அதன்வழி அமையும் சால்பும் உடையவராக இருப்பது அரிதாகவுளது. அதே போன்று அறிவுடையார் திருவுடையராக இருப்பதும் அரிதாக வுளது. திருவள்ளுவ நாயனாரும் இதனையே,

"இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு" என்றார்.

இதனையே மேலைநாட்டுச் சாணக்கியனான மாக்கியா வலியும் 'ஒருவனிடம் அறிவும் செல்வமும் ஒன்று சேருவது அரிது' எனக் கூறியிருக்கிறான். இத்தகைய கருத்தொருமைகளைக் கொண்டுதான் பலர் தாம் எண்ணிய எண்ணியாங்கு முடிவு கட்டிவிட்டனர்.

# "பெண்ணிற் பெருந்தக்கயாவுள?"

## கா. வேல்முருகன்

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்றான் அன்று பாரதி. ஆம். அவன் அன்று பாடியதில் வியப்பில்லை. பல்லாற்றானும் பல்வளம் பழுனிய பைந்தமிழ் நாடு அவனைப் பாடத்தான் செய்தது. "காதல் புரியும் அரம்பையர் போலிளம் கன்னியர் சூழ்ந்த தமிழ் நாடு" என்று கூறுமிடத்து பாரதியாரால் தமிழ்நாட்டின் சிறப்பு உச்ச நிலையை அடைகின்றது எனலாம். ஏனெனில் பெண்ணைப் போற்றும் பண்பு தமிழரிடம் அதிகம் உண்டு. பெண்களே நாட்டின் கண்கள் எனக் கண்டவர் தமிழர். அத்தகைய தமிழ்ப் பெண்களின் சிறப்புகள் சிலவற்றைக் காண்போம்.

கால வெள்ளத்தின் போக்கிலோ உலகம் சுழல்கின்ற வேகத்திலோ பற்பல வேறுபாடுகள் தோன்றித் தோன்றி மறைகின்றன. இதனால் இன்றைய நிலைக் கண்ணாடி மூலம் பாராது வற்றாத கலைச் செல்வத்தை வாரியீந்த வள்ளுவர்-கம்பர் முதலாய செஞ்சொற் புலவர்களின் கவிதைகள்-காப்பியங்கள் மூலம் காணுதல் வேண்டும். அப்பொழுதுதான் பெண்ணின் பெருமையைப் பார்க்க முடியும். பெண்ணிற் பெருந்தக்க யாவுள என்ற உண்மையை உணர முடியும். சீருஞ் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்த செந்தமிழ் நாடு—பாரோர் போற்றும் பழந்தமிழ் நாடு—வீரத்தால் ஏற்றம் பெற்ற அருமைத் திரு நாடு எம்

நாடன்றோ. இத்தகை நாட்டுப் பெண்கள் நிலையென்னவெனச் சிந்தித்தால், வேங்கை விற்கயலை வெற்பில் பொறித்த வீர இனத்து மரபின் வழித் தோன்றிய வனிதையர் வாழ்க்கை நெறி என்ன என்பதை எண்ணினால் இன்று நாம் நிச்சயம் வேதனைப்பட வேண்டும்.

பழந்தமிழ்ப் பெண்கள் கற்பு-கடமை-வீரம் ஆகிய மூன்றிலும் மேன்மை பெற்று வாழ்ந்தார்கள்.

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை" என்ற அரிய உண்மையைக் கண்டவர் தமிழர். வேறு எவ்விதமான கடவுளை வணங்காது தன் கணவனையே தெய்வம் எனக் கருதி எவள் வணங்குகின்றாளோ, அவள் "இன்று மழையே நீ பெய்ய வேண்டும்" எனக் கட்டளையிட்டால் உடனே அம்மழை தானே பெய்யத் தொடங்கி விடும் என்கின்றார். இதனை விடக் கற்பின் பெருமையால் பெண் அடையும் திண்மையை வள்ளுவர் நன்கு வலியுறுத்துகின்றார். அதுவே,

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை யுண்டாகப் பெறின்" என்ற குறளாகும். இதிலே எத்தகைய சிறப்புக் குவியல்கள் பொலிந்திருக்கின்றன என்பதைப் பாருங்கள். இதன்கண் கருத்துக் கருவூலம் மிகுந்திருப்பதைக் காணுங்கள். உயர்ந்த உத்தமப் பெண்ணைக் கற்பு நெறியால் படைக்கின்றார் வள்ளுவர். கற்பெனுந் திண்மை பெண்ணிற் குண்டாயிற் றென்றால்,

பின்பு அவளுக்கு நிகர் யார்? கடவுள் கூட நிகரில்லை யென்பதே அவர் கருத்து. முதல் கூறிய குறளிலே தெய்வம் தொழாதவள், கணவனையே தொழுகின்றவள் பெய்யெனப் பெய்யும் மழை என்றார். பின்பு கற்பினால் ஏற்படும் வன்மையால் அவளை விடப் பெரிய பொருள் ஒன்றும் இல்லை என அறுதியிட்டுக் கூறுகின்றார். பெண்ணின் பெருமை கற்பினால் எவ்வளவு உயர்வடைகின்றது.

'கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை' என வேறு இலக்கணங் கற்பிக்கின்றார் ஔவைப் பிராட்டியார். வள்ளுவரும்

"சிறை காக்குங் காப்பு எவன் செய்யும் மகளிர்
நிறை காக்குங் காப்பே தலை"

என்று, அதாவது பெண்களைக் காவல் வைத்துக் காக்கும் காப்பு (காவல்) முறை ஒரு பயனையும் உண்டாக்க மாட்டாது. அவர்களுக்குரிய 'நிறை' என்னும் பண்பால் தம்மைக் காக்கும் காப்பே சிறந்தது என்கின்றார்.

"உயிரினும் சிறந்தன்று நாணே! நாணினும்
செயிர்தீர்க் காட்சிக் கற்புச் சிறந்தன்று"

எனத் தொல்காப்பியர் சிறப்பித்துக் கூறுதல் ஈண்டு நோக்கற் பாலது. ஓர் தலைமகளுக்குச் சிறந்தது நாணே. நாணினும் சிறந்தது கற்பே எனச் சொல்லும் தொல்காப்பியத்தை விடுத்து குறுந்தொகை எனும் சங்க இலக்கிய நூலைப் புரட்டிப் பாருங்கள். அதிலேயும் கற்பு நெறியை உத்தமப் பெண்ணிற் குரிய ஓர் அங்கமாக அமைக்கின்றார் ஒரு புலவர். தலைவி தலைவனை நோக்கியோ நினைந்தோ கூறுகின்றாள்:

இம்மை மாறி மறுமை யாயினும்
நீ ஆகியர் எம் கணவனை
யான் ஆகிய நின் நெஞ்சு நேர்பவளே

இப்பாடலின் கருத்து என்னவெனின் இம்மைப் பிறப்பும் போய் மறுபிறப்பு வந்தாலும் நானே உன் மனமொத்த காதலியாக மனைவியாக இருப்பவள் என்பதாகும். எப்பிறப்பிலாயினும் யாம் இணை பிரியாது வாழ வேண்டுமென்ற உயர்ந்த இலட்சியமே இக்கருத்து. தலைவன்-தலைவியின் ஒருமித்த இல்வாழ்வைப் படம் பிடித்துக் காண்பிக்கின்றது இப்பழந்தமிழ்ப் பாடல். உள்ளத்தினில் உண்மை யொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி யுண்டாகும் என்பதைப் பண்டைய பெண்மணிகள் உணர்ந்து வாழ்ந்தனர்; இதனாற் போலும் அவர்கள் உத்தமப் பெண்களாகப் போற்றப் பட்டனர்.

அன்னை தயையும் அடியாள் பணியும் மலர்
பொன்னின் அழகும் புவிப் பொறையும்—வன்ன
முலை
வேசி துயிலும் விறன் மந்திரி மதியும்
பேசில் இவையுடையாள் பெண்.

என்று ஓர் தமிழ்ப் புலவர் கூறுகின்றார். 'வேசி துயிலும்' என்பதால் தாசியைப் போன்று இழிவான நடையில் செல்ல வேண்டுமென்பது அவர் கருத்தன்று. தாசியானவள் எவ்வாறு ஆடவரைத் தம்பால் கவர்கின்றாளோ அவ்வாறு ஓர் பெண்ணானவள் தன் கணவனைப் பிரியாளாகி, அவன் தன்னைப் பிரியாதவனாக ஆக்குதல் வேண்டுமென்றும், அரசனுக்கு எவ்வாறு ஆட்சி முறையில்

வெற்றியீட்டிக் கொடுக்க மந்திரி இருக்கின்றானே, அவ்வாறு குடும்பத்தலைவியாய பெண் தன் கணவனாகிய அரசனுக்கு அமைச்சனாக அமைந்து குடும்பமாகிய அரசியலைச் செவ்வனே நடத்த வேண்டுமென்பதே அவர் கருத்து.

இனிக் கம்பனிடம் வருவோம். அவன் எவ்வாறாய சீதையைக் காண்பிக்கின்றான் என்பதைப் பாருங்கள். அசோக வனத்திடை சிறையிலுள்ள சீதையைக் கண்டானு, அல்லது உத்தமப் பெண்ணின் இலக்கியத்தைக் கண்டானு, என்னவோ இராமனிடம் கூறுகின்றான்

“விற் பெருந் தடந்தோள் வீர
வீங்கு நீர் இலங்கை வெற்பின்
நற் பெருந் தவத்த ளாய
நங்கையைக் கண்டே னல்லேன்
இற் பிறப்ப தென்பதொன்றும்
இரும்பொறை என்பதொன்றும்
கற்பெனும் பெயரதொன்றும்
களிநடம் புரியக் கண்டேன்”

ஆகா! என்ன அழகாக வர்ணிக்கின்றான் அனுமான். “நற்பெருந் தவத்தளாய நங்கை” என்றும், “கற்பெனும் பெயர தொன்றும்” எனவும் சீதையைக் காட்டும் சிறப்பின் மூலம் பெண்ணின் பெருமையை யுணர்த்தும் கம்பனின் கவித்திறமையே திறமை.

அயோத்தியிலேயுள்ள பெண்களின் சிறப்பியலைத் தமிழ் நாட்டின் அனுபவ அறிவால் விளக்குகின்றான் கம்பன்.

பெருந் தடங்கண் பிறைநுதலார்க் கெலாம்
திருந்து கல்வியும் செல்வமும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே!

இச்சிறப்பு அயோத்திச் சிறப் பெனக் காட்டிய போதிலும் உண்மையாகத் தமிழ் நாட்டில் தமிழ்ப் பெண்களில் கண்ட உயரிய சிறப்பே கவிதையாக ஊற்றெடுத்தது. அந்தப் பெண்களுக் கெல்லாம் கல்வியறிவும் உயர் செல்வமும் உடையவராதலின் வந்தவர்க் கெல்லாம் வாரியிறைத்து விருந்து வைத்தனர் என்கின்றார். கம்பருக்கு ஆண்டு காலத்தால் முற்பட்ட வள்ளுவர்

"செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு"

எனக் கூறுகின்றார்.

தலைவனின் பிரிவாற்றாமையால் வருந்திய தலைவியாகிய சீதை அனுமனிடம் கூறுவது நோக்கற் பாலது. கற்பினிற் தவறாளாய சீதை, தன் கணவன் இராமன் தன்னைச் சிறையிலிருந்து மீட்கத் தவறுவானேல் தான் உயிர் வாழ மாட்டேன் எனக் கூறுவது பெண்ணின் உயர்ந்த நெறியை உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ச்சுவது போல அமைந்திருக்கின்றது.

இன்னும் ஈண்டொரு திங்கள் இருப்பல்யான்
நின்னை நோக்கிப் பகர்ந்தது நீதியோய்!
பின்னை ஆவி பிடிக்கின்றிலேன் அந்த
மன்னன் ஆணை இதனை மனக்கொள் நீ.

என்றிவ்வாறு கூறுவது சீதையின் செந்நெறியையும், அவள் கணவன்பால் கொண்ட காதலையும்,

களங்கமற்ற கற்பு நெறியையும் காட்டுகின்றது. தனது நாயகன் ஒரு மாசத்திற்குள் வந்து மீட்கின்றிலனேயேல் கங்கை யாற்றங் கரையில் செய்ய வேண்டிய கடனைச் செய்து விடும்படி,

......................................

"கங்கை யாற்றங் கரையடியேற்கு
செங்கை யாற்கடன் செய்கென்று செப்புவாய்"

எனக் கட்டளையிடுவது கற்புநெறியை உணர்த்துவது மன்றிக் காண்போருக்கு வியப்பை அளிக்கின்றதாகும்.

அசோகவனத்திலே சிறையிடப்பட்ட சீதைக்குக் காவலாளர்களாக இருந்த பெண்களுள் திரிசடை என்பாளும் இருக்கின்றாள். இவள் விபீடணனின் மகள். தருமம், நேர்மை, அன்பு, இரக்கம் ஆகிய அரும்பெருங் குணங்கள் வாய்ந்தவள். இவளை நோக்கி "அன்னாய் நீ யுரைத்தவை யாவும் அறிந்திலது; ஆதலால் உன்னையே தெய்வமாகக் கொண்டுயான் உய்ந்தேன்," எனச் சீதை திரிசடையைச் சிறப்பித்துக் கூறுதல் இராமாயண காலத்து இலங்கையில் மதித்தற்கரிய மாணிக்கம் போன்ற பல மாதர்கள் இருந்திருக்கின்றார்கள் என்பதை உணர முடியுமன்றோ. பெண்ணின் பெருமையால் நாடும் சமுதாயமும் போற்றப்படுமன்றோ!

கற்புநெறியிலே கூட அவர்கள் மேம்பட்டவர்கள் என்பதற்கு இராவணன் மனைவி மண்டோதரியே சான்று பகர்வள். தன் மைந்தன் இந்திர சித்து என்பவன் போர்க்களத்திலே மாண்டுவிட்டான். பிணக்குவியலிலே தன் மைந்தனைக் காண்கின்றாள்.

"அஞ்சினேன் அஞ்சினேன் இச்சீதை
யென்றமுதாற் செய்த
நஞ்சினால் இலங்கை வேந்தன் நாளை
இத்தகையனன்றோ"

எனப்புலம்புகின்றாள். அவளுடைய கற்பு நெறி யின் நிகழ்வதைக் காட்டிவிட்டது. அவளும் ஒரு தீர்க்க தரிசியென்று போற்றப்பட வேண்டியவளே! அவள் புலம்பும்பொழுது சீதையைக்கூட குறைவாகக் கூற வில்லை. இன்றைய பெண்களாயின் "இந்தச் சண்டாளி எம் குடும்பத்தைக் குலைக்க வந்தாளே" எனக் கூறி வருந்துவர். சினம் கொண்டு கொல்லவும் துணிந்து விடு வர் எனலாம். ஆனால் மண்டோதரியோ தன் கணவ னின் வீழ்ச்சிக்கு சீதைதான் காரணம் என உணர்ந்து கொண்டாள். இதற்காக அவள்பால் வருந்தவில்லை. அவளைக் குறைவாகவும் கூறவில்லை. 'சீதையென்ற அமுதாற் செய்த நஞ்சு' எனத்தன் நாயகனுக்கு சீதை நஞ்சேயன்றி மற்றும்படி அவள் அமுதே என்று 'அமு தாற்செய்த நங்கை' என நவில்வது அவள் உயர்ந்த உள்ளத்தை உணர்த்துகின்றது.

இராவணன் இறந்துவிட்டான். அந்நிலையிற் கூடத் தன் கணவன் செய்தது தவறு எனக்காண்கிறாள். அக் கருத்தமைந்த பாடலை நயமிக்க முறையில் கம்பன் கூறு கின்றான்.

"வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த
திருமேனி மேலுங்கீழும்
எள்ளிருக்கு மிடமின்றி உயிரிருக்கும் இடம்நாடி
இழைத்தவாறோ
கள்ளிருக்கும் மலர்க் கூந்தல் சானகியை
மனச்சிறையிற் கவர்ந்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல்புகுந்து
தடவியதோ ஒருவன்வாளி."

இந்தப் பாடலின் கருத்து நோக்குதற் குரியது. தலை வனின் வீரத்தை வியந்தாள் தலைவி. ஆனால் அவன்

செய்த செயலைத் தவறெனக் கண்டாள். "கள்ளிருக்கும் இட" என்ற ஈற்றடிகள் மூலம் தன் கருத்தை வெளிப் படுத்துகின்றாள். கணவன் மாண்டபின்னர் கூட உயிர் தரிக்க விரும்பாத மண்டோதரி பின்பு உயிர் நீக்கின் றாள். இந்த செந்நெறி சீதையிலும் ஒரு மடங்கு மண்டோ தரியை உயர்த்துகின்றது. இவ்விதமாக கற்பே தம் தலையறமாகக் கொண்டொழுகினர் நம் நாட்டுப் பெண் கள். கடமையும்—வீரமும் எவ்வாறு கொள்ளப்பட்ட தென்பதைக் காண்போம்.

இல்லறம் பேறுதலே சிறந்த கடமையாகக் கொண்டனர். மயக்குறும் மக்களை இல்லோர்க்குப் பயக் குறை இல்லைத் தாம்வாழும் நாளே என்ற புறநானூற் றில் பாண்டியன் அறிவுடை நம்பியின் பாடல், இல் வாழ்க்கையின் நோக்கம் சிறந்த மக்களைப் பெறுதலே என்பதாகும். "ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே. சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே..." என்பது இதனை வலியுறுத்துகின்றது. வாழ்க்கைப் படகைச் செலுத்தும் பெருங்கடமை பெண்ணிடமேயே தங்கியுள் ளது. இதனைத் திருத்தொண்டர் புராணத்திலே சேக் கிழார் நன்றாக அமைத்துக் கூறுகின்றார்.

"நீராருஞ் சடைமுடியார் அருளினால் நிறைதவத்துப்
பேராள ரவர்தமக்குப் பெருகுதிரு **மனையறத்தின்**
**வேராகி** விளங்குதிரு வெண்காட்டு நங்கைபால்
சீராள தேவர்—எழுந் திருமைந்தர் அவதரித்தார்."

மனையறத்தின் வேராகி என்றமையால் வெண் காட்டு நங்கையாகிய பரஞ்சோதியார் மனைவியார் இல்லறத் திலே என்ன கடமையைக் கொண்டுள்ளார் என்பதனைக் கூறுகின்றார். மரத்திற்கு வேரானது எவ்வாறு உண

வினை அளித்து மரத்தினை வளர்க்கின்றதோ அவ்வாறு பெண்ணானவள் குடும்பத்தை வளர்க்க வேண்டும். வேர் கெடின் மரம் பட்டுவிடும். அதனைப் போன்று பெண்ணானவள் தவறான நிலையில் சென்று விட்டால் குடும்ப மாகிய விளக்கு அணைந்துவிடும். உயர்ந்த குணமுடைய மைந்தனைப் பெறுதலே சிறந்த செயலாகக் கருதியமை யும் காணலாம். இக்கருத்தே வள்ளுவரைக் கூட

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"

என்ற குறளை எழுதத் தூண்டியதுபோலும். பெண்ணே உலகின் படைப்புத் தலைவி. உயர்ந்த சமு தாயத்தை உருவாக்கும் கலைச் செல்வி. ஆகவே அவள் தன் கடமைகளை நன்குணர்ந்து ஒழுகுதல் அவசிய மாகும். இன்றைய சூழ்நிலையில் பெண்கள் நெறிதவற வும் நேருகின்றது. இதற்குப் "பெண்ணிற் பெருந்தக்க யாவுள" என்ற குறளின் குரலைக் கேட்பார்களேயானல் அவர்கள் தம்மைத்தாமே நொந்து கொள்ளுவார்கள்.

கற்பையுங் கடமையும் எவ்வாறு போற்றினார்களோ அவ்வாறு வீரத்தையும் போற்றினார்கள். வீரமே உரு வகமாக வாழ்ந்தார்கள். வானிடிந்து விழுகின்ற போதி லும் அச்சமற்ற வீரப் பெண்களாக உத்தம நிலையில் இருந்தார்கள். இதற்கு புறநானூற்றில் உள்ள ஒரு பாடலே தெளிவு படுத்தும். "என்மைந்தன் போர்க் களத் திலே புறமுதுகிட்டு மாய்ந்தானென்றால் அவனுக்குப் பாலூட்டிய என் கொங்கைகளை வெட்டி எறிவேன்" என்று சபதஞ்செய்து போர்முனைக்குச் செல்கின்றாள் ஓர் வீரப் பெண். இந்நிகழ்ச்சியை பூங்கணுத் திரையார் எனும் புலவர் கூறுகின்றார்.

"நரம்பெழுந்து உலறிய நிரம்பா மென்தோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படை யழிந்து மாறினன் என்று பலர் கூற
மண்டமர்க் குடைந்தனன் ஆயின் உண்ட
என் முலையறுத்திடுவென் யான் எனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே"

இந்தப் பாடல் பழந்தமிழ் நங்கையரின் வீரத்தினை எடுத்துக்காட்டுகின்றது. ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே என்று புலவர் கூறுவதும்,

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்று வள்ளுவர் கூறும் கருத்தும் ஒன்றாகக் காணப்படுதல் நோக்கலாம். கண்ணகி போன்ற காப்பியத் தலைவிகளும் வீரத்திற்குப் பிறப்பிடமாக வாழ்ந்தார்கள். தன் கணவன் குற்றஞ்சாட்டிக் கொலைக் களப்பட்டிறந்தான் என்பதனை அறிந்து கோபக் கனல்கக்க கண்ணகி பாண்டியன் முன்சென்று

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

"என்காற் சிலம்பு பகர்தல்வேண்டி நின்பாற்
கொலைக் களப்பட்ட கோவலன் மனை"

என்று தன் வழக்குரைக்கும் சிறப்பை நன்முறையில் வர்ணிக்கின்றார் இளங்கோ அடிகள். இத்தகை வீரச் சிறப்பு எந்தச் சமுதாயத்திலும் காணமுடியாது. இவை யனைத்தும் 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' எனும் வள்ளுவனார் கேள்விக்கு விடையிறுக்கின்றன வன்றோ. அத்தகை ஆற்றலைப் பெற்ற உத்தமத் தமிழ்ப் பெண்கள் போற்றற் குரியவர்களே!

வணக்கம்.

# வள்ளுவர் கண்ட பெண்மை

திருவாட்டி தி. கமலபூஷணி B. A. (Hons.)

பெண்களைப் பற்றிப் புகழ்ந்து கூறியவர்களுமுண்டு. இகழ்ந்து கூறியவர்களுமுண்டு. பொதுவாகப் பெண் மனதை ஆழமிடமுடியாதென்பதுதான் அனேகமான முடிவு. அப்படியிருக்க வள்ளுவர் பெண்களைப் பற்றிக் கூறியவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டுமானல் முதலிலே அவர் இந்த "ஆழம் காண முடியாத பெண் மனதை" அறிந்திருந்தாரா என்று ஆராயவேண்டும். அவர் பெண் மனதையும் அதனியல்புகளையும் நன்கு அறிந்தவரென்று நாம் ஒத்துக்கொண்ட பின்புதான் அவர் இல்லறவியலில் பெண்களைப் பற்றி என்ன சொல்கிறார், வாழ்க்கைச் சித்திரத்திலவர்களை எவ்விடத்தி லமைத்திருக்கிறாரென்று ஆராயவேண்டும்.

தாய், மனைவி, உடன் பிறந்தாள், என்பவர்களின் மேல் நீங்கள் வைத்திருக்கும் அன்பைச் சற்று ஒதுக்கி வைத்துவிட்டு அவர்களுடைய குணங்களைச் சிந்தித்துப் பாருங்கள். தாயின் இணையற்ற அன்பு, கண்டிப்பு, சிறிய செயல்களுக் கெல்லாம் அப்பாவின் கோபத்திற்கு முன் வரும் அவளின் கோபம், எவ்வளவு சீக்கிரமாய்க் கோபம் வருகிறதோ அவ்வளவு சீக்கிரமாய் ஆறிவிடும் கோபம்; மனைவியின் அன்பு, பிடிவாதம் கண்ணீர், வெகுளிதில் கோபத்தை மறந்து சிரித்துப் பேசல்; உடன் பிறந்தாரின் கோபம், பரிவு, இவைகளெல்லாம் எதைக் குறிக்கின்றன? பெண்கள் ஆண்களைவிட உணர்ச்சி

வாய்ந்தவர்கள் என்பதைத்தான். ஆசை, அன்பு, துக்கம், கோபம், விருப்பு, பொறாமை, முதலிய பலவித உணர்ச்சிகளும் அவர்களை எளிதில் பாதிக்கும். உதாரணமாய்ப் பெண்களைப் பொதுவிலெடுத்துப் பாருங்கள். ஓர் கலியாண வீட்டில் அதிகக் கலகலப்பும் கொம்மாளமும் பெண்களிருக்கும் பக்கத்திற்றான் இருக்கும். இரண்டு பெண்கள் ஓரிடத்திலிருந்தால் சண்டைக்கு வேறு பொருளே வேண்டாமென்று சொல்லுவார்கள். ஆகையால் ஆணைவிட பெண் உணர்ச்சி வாய்ப்பட்டவள் என்பது நாம் வாழ்வில் கண்ட உண்மை. இனி வள்ளுவரிடம் சென்று அவர் இவற்றை எவ்விதத்தில் கண்டார் எனக் காண்போம். "ஒரு காதலன் பொருள் தேடும் பொருட்டோ, கல்வியின் பொருட்டோ அல்லது வேறு எதன் பொருட்டோ தன் காதலியைப் பிரிந்து செல்லப் போகிறான். இருவருக்கும் ஒருவரை யொருவர் விட்டுப் பிரிய மனமில்லை. ஆனால் சந்தர்ப்பம் பிரிவைத் துரிதப்படுத்துகிறது. அவன் தன் உணர்ச்சிகளையடக்கி விடை கோருகிறான். அவளால் தன் உணர்ச்சியைக் கட்டுப் படுத்த முடியவில்லை. அவன் பிரிய இருப்பதைக் குறிப்பாலுணர்ந்த மாத்திரத்திலேயே அவள் உடலும் உள்ளமும் உருகுகிறது. அவன் புறப்படு முன்பே அவன் பிரிந்து விடுவானென்னும் ஏக்கத்தால் மெலிந்த அவள் முன்கை கையிலிருந்து அவள் வளைகள் கழன்று விழுகின்றன. அவன் பிரிந்து சென்றபின் மற்றவர்களுக்குத் தன் பிரிவுத் துயரைக் காட்டாமல் மறைக்க வேண்டுமென்று அவள் எவ்வளவோ முயன்றும் விரும்பியும் அது அவளால் முடியவில்லை. வெள்ளம் போல் கண்ணீர் பெருகுகிறது.

அடக்கமில்லாமல் அப்படிக் கண்ணீர் சொரிகிற கண்ணிலேயே அவளுக்குக் கோபம் வருகிறது. "நீதானே அவரை முதலில் பார்த்தாய், நீதான் என் துன்பத்துக் கெல்லாம் கால். இப்பொழுது ஏன் உணர்ச்சியை அடக்கமாட்டாது அழுகிறாய்?" என்று அவள் தன் கண்களையே கடிந்து கொள்கிறாள்.

"கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழும்
இது நகத் தக்க துடைத்து"

அவள் உணர்ச்சி வசப்பட்டு உருகுகிறாள். அவளுக்கு அணியாயிருந்த அழகிய நிறமே வெளிறி பசப்பூரத் தொடங்கிவிட்டது. தோள்கள் மெலிந்து வாடிவிட்டன. பெண் உணர்ச்சி வசப்பட்டவள், என்பதை வள்ளுவர் நன்கறிந்துள்ளார் என்பது இவ்வழகிய வாழ்க்கைச் சித்திரங்களின் மூலம் புலனாகிறது.

ஆனால் எப்படி உணர்ச்சி வாய்ப்பட்டாலும் அவள் ஆற்றியிருக்க வல்லவளென்றும், அவள் நிறையுடையவள் என்றும், உடலாற்றாமல் மாற்றங் காட்டிய போதும், உள்ளமுருகி நைந்த போதுங் கூட அவளிடத்தே ஆற்றியிருக்கும் சக்தி உண்டென்பதையும் வள்ளுவர் அறிந்திருந்தார். தானினைத்த காதலியை அடையாத ஆண் மடலேறத் துணிகிறான். அவனால் அவளைப் பிரிந்திருப்பதைச் சகிக்க முடியாமற் போகிறது. ஆனால் காதலித்தவனை அடைய முடியாமல் தவிக்கும் பெண் அம்பலத்தில் மடலேறுவது போன்ற எதையும் செய்ய நினைக்கவில்லை. அவள் தன்நிறையைக் காத்து ஆற்றியிருக்கிறாள். அது எப்படி? இவ்விடத்திற்றான் வள்ளுவர் பெண்கள் ஆண்களைவிடக் கற்பனையிற் கூடியவர்களென்றும் அவர்கள் கற்பனா சக்தி

அவர்கள் வாழ்க்கையைப் பாதிக்கிற தென்பதையும் அறிந்தார். ஒரு நிகழ்ச்சியை உள்ளபடி உள்ள அளவிற்கு அறியவேண்டுமானால் அந்த வீட்டு ஆண்மாரிட மிருந்துதா னறியலாம். அந்த வீட்டு அம்மாள் அதைச் சொல்லுவதாயிருந்தால் அவள் விருப்பு வெறுப்புக்களுக் கிணங்க அவள் கற்பனையுடன் சேர்ந்தே அது நமக்குக் கிடைக்கும். ஊர் வம்பு பேசுவதில் அதிக விருப்பம் காட்டுவதும், கறுப்புக் கறுப்பாய் வாந்தியெடுத்தது காகங் காகமாய் வாந்தியெடுத்ததாய் மாறுவதும் பெண் களிடத்திற்றான். ஓர் பெண் கோபித்துக் கொண்டு சமையல் பண்ணவில்லை. அல்லது ஓர் மாமி மருமகள் சண்டை போன்ற சின்ன நிகழ்ச்சியை வைத்துக் கொண்டு தங்கள் கற்பனையைப் பாவித்துக் கதைகட்டி விடுவதில் பெண்களிடம் தற்காலப் பத்திரிகை ஆசிரியர் களும் பிச்சை வாங்கவேண்டும். பெண் கற்பனையில் மிகுந்தவளென்பதை உணர்ந்த வள்ளுவர் அந்தக் கற்பனை அவர்கள் வாழ்வை உயர்த்தவும் பயன்படு மென்னுமுண்மையை எழில்மிகு சொற்சித்திரங்களால் சித்தரித்திருக்கிறார். ஒரு பெண் இருந்தாள். அவள் காதலன் ஏதோ ஓர் காரணமாய் அவளைப் பிரிந்து சென்றுவிட்டான். பிரிவுத் துன்பம் அவளை வாட்டி வதைத்தது. ஊரார் இவளையும் இவள் காதலையும் பழித்தார்கள். பிரிந்து சென்ற காதலனைக் கூட இப்படி அவன் இவளை விட்டுப் போய்விட்டானே என்று தூற்றினார்கள். ஆனால் அவள் மட்டும் குறை படவில்லை. அவள் தன் தோழியைப் பார்த்துப் பின்வருமாறு கூறுகிறாள், "என் காதலன் என்னை விட்டுப் போய்விட்டானென்று ஏன் இப்படி எல்லோரும் பேசுகிறார்கள். இங்கே பார், அவர் என்

இரு கண்ணுள்ளும் ஒரு விநாடி கூட என்னைவிட்டுப் பிரியாமல் இருக்கிறார். அவர் என் கண்ணுள்ளே இருக்கிறாரென்று நான் இப்போதெல்லாம் அவைகளுக்கு மைகூடத் தீட்டுவதில்லை. மைதீட்டும் நேரத்தில் கண்ணுள்ளிருக்குமவர் எங்கேயாவது போவாரோ? இமைகளைக் கூட வெட்டாமல் நானிருக்கிறேனல்லவா ஏன் தெரியுமா? நான் இமைகளை மூடினால் அவர் ஒளிந்து கொள்ள வேண்டியிருக்குமே என்றுதான். மேலும் அவர் பிரிந்த நாள் தொடக்கம் நான் சூடுள்ள எந்தப் பதார்த்தத்தையாவது உண்ணாமலும் குடியாமலுமிருக்கிறேன் அவர் என்னைவிட்டு எங்கும் செல்லவில்லையடி என் நெஞ்சுள்ளேதான் மறைந்து கொண்டிருக்கிறார். ஆகையால் சூடாகிய மருந்தினால் அவருக்குச் சுடுமென்றெண்ணித்தான் நான் எல்லாவற்றையும் ஆறவைத்துண்கிறேன்.

"நெஞ்சத்தார் காதலவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக்கறிந்து."

"அவர் என்னைப் பிரியாமலிருக்க இந்த ஊர் மட்டும் ஏன் அவர் பிரிந்துவிட்டாரென்று பேசிக் கொள்கிறது." இப்படி அவள் தன் கற்பனையினாலே தன் காதலன் தன்னைவிட்டுப் பிரியவில்லை என்று சொல்லித் தன்னைத்தானே தேற்றிக்கொள்கிறாள். ஓர் சிறு செயலையும் பெரிதாய் நினைத்துச் சந்தேகப்படும் வழக்கம் பெண்களிடம் அதிகமிருப்பதற்குக் காரணமும் அவர்கள் கற்பனைத் திறன்தான். பெண்களின் வாழ்வை ஆக்குவதிலும் அழிப்பதிலும் கற்பனை பயன்படுவதை வள்ளுவர் நன்கறிந்திருந்தார்.

இப்படி உணர்ச்சியால் அதிகம் பாதிக்கப்படும் பெண்ணிற்கு எப்படியாவது அந்த உணர்ச்சிகளை

வெளிப்படுத்தல் அவசியமாகிறது. எந்த விதமான உணர்ச்சியாயிருந்தாலும் அதற்கு அவளிடம் ஓர் வெளியீடு அவசியமாகிறது. ஓர் சபையில் ஓர் வேடிக்கையான பேச்சோ நிகழ்ச்சியோ நடந்து விட்டால் அதை முதலில் அனுபவித்து ஆண்களின் பக்கம் வாய் அசையுமுன் பெண்களின் பக்கம் சிரிப்பொலி கலகலக்கும். கோபம் வந்தால் நாலு சொல்லுச் சுடச்சுடச் சொன்னுற்ருன் அவள் மனம் ஆறும். துக்கம் வந்தவிடத்து அவளால் ஆண்களைப் போல் வாளாவிருந்து விட முடியாது. மழை பெய்து ஓய்வதைப் போல் ஓர் பாட்டம் அழுது ஓய்ந்தாற்ருன் அவள் நிம்மதி பெறுவாள். பெண்ணினுணர்ச்சிக்கு ஓர் வெளியீடு இன்றியமையாததாய் இருப்பதை வள்ளுவரும் கண்டார். கணவன் பிரிந்துவிட்டான். அவனை நினைத்து உணர்ச்சி வசப்படும் நேரத்தில் அவளிற்கு அதை யாரிடமாவது சொல்லவேண்டும் போலிருந்தது. அல்லது அவள் மனம் நிம்மதி யடையாது. ஆகையால் அவள் தன் தோழியிடம் தன் காதலனைப் பற்றித் தான் கண்ட கனவைச் சொல்லிச் சொல்லி மகிழ்கிருள். அவருடன் தான் அனுபவித்த இன்பத்தைச் சொல்லி மகிழ்கிருள். இப்பொழுதும் தான் அவர் பிரிவினுல் அனுபவிக்கும் துன்பத்தையும் சொல்லியாறுகிருள்.

"சாயலும் நாணுமவர் கொண்டார் கைமாரு
நோயும் பசலையும் தந்து."

உணர்ச்சியால் பாதிக்கப்பட்டு, செய்கை மூலம் அவைகளையுடனே வெளிப்படுத்தி, தான் விரும்பிய பொருளையிட்டுச் சதாபேசிக் கொண்டிருக்குங் குணம்

பெண்களுக்கு மட்டுமல்ல, குழந்தைகளுக்கு மிருப்பதை நாம் காண்கிறோம். ஓர் குழந்தையை இலகுவில் அழவைக்கலாம். அதே போல் அதை இலகுவாய்ச் சிரிக்கவும் வைக்கலாம். அதற்குப் பிரியமான ஓர் விளையாட்டுப் பொருள் கிடைக்கவிட்டால் இரவு பகலாய் வீட்டிற்கு யார் வந்தாலும் அது அப்பொருளைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கும். இந்த வகையில் பெண்களும் குழந்தைகளை யொத்தவர்கள். குழந்தையுள்ளம் படைத்தவர்கள். இதை வள்ளுவரும் உணர்ந்தார். குழந்தைகளுக்குத் தாங்கள் பெற்றோரால் அணைக்கப்படவேண்டும், எடுக்கப்படவேண்டும் என்றெல்லாம் விருப்பம். பெற்றோர் அதிலும் தாய் தன் முழுக் கவனத்தையும் தன் மேலேயே செலுத்த வேண்டுமென்பது தான் குழந்தையின் விருப்பம். தாய் வேறு குழந்தையொன்றை எடுத்துக் கொண்டாலே அது அழும். விளையாடிக் கொண்டிருக்கும் போது அடிக்கடி ஓடி வந்து தாயின் மடியில் படுத்துப் புரளும். தாயால் அணைக்கப்பட்டு முத்தமிடப்பட்ட பின்பே மீண்டும் போய் விளையாடும். தாயிடம் அது அன்பையும் அன்புச் சின்னங்களையும் கோருகிறது. அப்படியே வாழ்விலும் ஆணுடைய உடற் பலத்திற்கு ஆதியில் அடங்கிய பெண்ணின் குழந்தையுள்ளமும் தான் ஆணால் பாராட்டப்பட்டுச் சீராட்டப்பட்டு அன்பு செய்யப்படுவதற்கு உரிமையுடையவள் என்றுணர்கிறது. இவைகளை ஆணிடம் எதிர்பார்க்கிறது. ஆகையால் வள்ளுவர் கண்ட பெண்ணும் பிரிந்திருந்து மீண்ட கணவனைக் கண்டு வரவேற்கத் துடித்தபோதும் அவனைக் கண்டவுடன் ஊடுகிறாள். காதலன் தன் ஊடலைத் தீர்க்கவேண்டுமென்பதும் தன்மேலன்பை